www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

செப்டம்பர் 2008
ரூ. 7.00



## காஷ்மீர்:

## இந்து தேசியத்தின் பரிதாபத் தோல்வி!

படிப்பகம்

www.padippakam.com

# தொழிலாளர் சேமநல நிதி தனியாரிடம் ஒப்படைப்பு: கள்ளனிடமே சாவியை ஒப்படைத்த அயோக்கியத்தனம்!

## – பு.ஜ.தொ.மு.வின் பிரச்சாரம்–ஆர்ப்பாட்டம்

கடந்த ஜூலை 22-இல் நடந்து முடிந்த நாடாளுமன்ற நம்பிக்கை வாக்கெடுப்பின்போது பணப்பெட்டி கொடுத்தும் பதவி ஆசை காட்டியும் ஆட்சியைத் தக்க வைத்துக் கொண்டவுடனேயே, அப்பட்டமாக மறுகாலனியாக்கக் கொள்கைகளைச் செயல்படுத்தக் கிளம்பிவிட்டது காங்கிரசு கூட்டணி அரசு. எம்.பி.க்களை விலைக்கு வாங்க உதவிய தரகுப் பெருமுதலாளிகளுக்குக் காணிக்கை செலுத்தும் வகையில், தொழிலாளர்களின் 56 ஆண்டுகால சேமநல நிதி (பிராவிடண்ட் ஃபண்ட்)யான ரூ. 2.5 லட்சம் கோடியை ரிலையன்ஸ் உள்ளிட்ட மூன்று பெரும் முதலாளித்துவ நிறுவனங்களிடம் கடந்த ஜூலை இறுதியில் தாரை வார்த்துள்ளது. இந்திய அரசின் ஸ்டேட் வங்கி பராமரித்து வந்த இந்நிதியைத் தற்போது ரிலையன்ஸ் கேபிடல், ஐ.சி.ஐ.சி.ஐ. புருடென்சியல், ஹெச்.எஸ்.பி.சி. மற்றும் ஸ்டேட் வங்கி ஆகிய நான்கு நிறுவனங்களுக்கு பங்கு பிரித்துத் தந்துள்ளது, மன்மோகன் சிங் அரசு. இதன் மூலம் தொழிலாளர்களின் உழைப்பால் திரண்ட கோடானுகோடி நிதியையும் தொழிலாளர்களின் எதிர்கால வாழ்வையும் பன்னாட்டு - இந்நாட்டு பெருமுதலாளிகளின் இலாபவெறிக்குப் பலியிட்டிருக்கிறது. இதன்மூலம் இப்பெருமுதலாளித்துவ நிறுவனங்களின் தொழிலுக்கான நிதியாதாரத்தை உருவாக்கித் தரும் தரகு வேலையை சிங் - சிதம்பரம் கும்பல் செய்துள்ளது. பங்குச்சந்தை தரகன் அர்சத் மேத்தாவின் சூதாட்டத் திருவிளையாடலில் பல லட்சம் கோடிகள் சூறையாடப்பட்டதைப் போல, பி.எஃப் பணத்தை சந்தை சூதாட்டத்தில் இறக்கி இந்நிறுவனங்கள் சூறையாட ஏற்பாடு செய்துள்ளது.

இது, தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் என்னும் மறுகாலனியாக்கத் தாக்குதல்; மன்மோகன் சிங் - சிதம்பரம் கும்பலின் உலக வங்கிக் கைக்கூலித்தனத்தின் குறியீடு என்பதை விளக்கி தமிழகமெங்கும் பிரச்சார இயக்கத்தை புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி வீச்சாக நடத்தி வருகிறது. ''தொழிலாளர்களின் பி.எஃப் பணம் தனியாரிடம் ஒப்படைப்பு! கள்ளனிடமே சாவியைக் கொடுத்த அயோக்கியத்தனம்!'' என்ற முழக்கத்துடன் ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகளுடன் இணைந்து துண்டு பிரசுரம், சுவரொட்டி, தெருமுனைக் கூட்டங்கள், ஆலைவாயிற் கூட்டங்கள் வாயிலாக பு.ஜ.தொ.மு. தொழிலாளர்களிடம் பிரச்சாரம் செய்து அரசியல் விழிப்புணர்வூட்டி வருகிறது.

எந்த ஓட்டுக் கட்சியும் தொழிற்சங்கங்களும் தொழிலாளி வர்க்கத்தின் மீது ஏவிவிடப்பட்டுள்ள இத்தாக்குதலுக்கு எதிராகப் போராட்டங்களைக் கட்டியமைக்க முன்வராத நிலையில், சென்னை-மெமோரியல் அருகில் 6.8.08 அன்று பு.ஜ.தொ.மு. எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. பு.ஜ.தொ.மு. மாநிலச் செயலர் தோழர் சுப.தங்கராசு தலைமையில் விண்ணதிரும் முழக்கங்களுடன் திரளான தொழிலாளர்களின் பங்கேற்புடன் நடந்த இந்த ஆர்ப்பாட்டம், தனியார்மயம் - தாராளமயத்தின் கோர முகத்தைத் திரைகிழித்து, தொழிலாளர்கள் ஓரணியில் திரண்டு போராட அறைகூவுவதாக அமைந்தது.

தொழில் நகரமான ஓசூரில் இயங்கி வரும் பு.ஜ.தொ.மு. தனது தோழமை அமைப்புகளுடன் இணைந்து 11.8.08 அன்று வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக, தொழிலாளர் சேமநல நிதியை தரகுப் பெருமுதலாளிகளுக்குத் தாரை வார்த்த மன்மோகன் சிங் - சிதம்பரம் கும்பலை எதிர்த்து போர்க்குணமிக்க ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. கண்டன முழக்கங்கள் எங்கும் எதிரொலிக்க தோழர் சங்கர் தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டம் தொழிலாளர்களிடமும் உழைக்கும் மக்களிடமும் போராட்ட உணர்வூட்டி புதிய நம்பிக்கையை விதைத்துள்ளது.

இந்த ஆர்ப்பாட்டங்களோடு முடங்கி விடாமல், ''கொள்ளை போகிறது தொழிலாளர் உழைப்பு! அள்ளிக் கொடுப்பதோ காங்கிரசு கும்பல்! சுருட்டப் போவதோ பன்னாட்டு - இந்நாட்டுக் கம்பெனிகள்!'' எனும் முழக்கத்துடன் பி.எஃப். பணத்தைத் தாரை வார்த்துள்ள காங்கிரசு கூட்டணி அரசுக்கு எதிராகப் போராட அறைகூவி மாநிலமெங்கும் தொடர் பிரச்சார இயக்கத்தை பு.ஜ.தொ.மு. நடத்தி வருகிறது.

— பு.ஜ. செய்தியாளர்கள்









படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 23

**இதழ் 11**

செப்டம்பர் 2008

உள்நாடு
தனிஇதழ்: ரூ.7.00
ஆண்டுசந்தா: ரூ.90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 15



படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
தொலைபேசி : 94446 32561


### போலி கம்யூனிஸ்டுகளின் சந்தர்ப்பவாதக் கூட்டணி:

# புதிய மொந்தையில் பழைய கள்ளு

**கா**ங்கிரசு, பா.ஜ.க. ஆகிய இரு கட்சிகளுடன் உறவு இல்லாதவர்களுடன்தான் கூட்டணி என்ற முடிவை தமிழகத்தின் இடது, வலது போலி கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் கூட்டாகத் தெரிவித்துள்ளனர். இதன்மூலம் தமிழகத்தில் தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் தாங்கள் நீடிக்கவில்லை என்று இக்கட்சிகள் உணர்த்தியுள்ளதோடு, ''காங்கிரசா, இடதுசாரிகளா? யாருடன் கூட்டணி என்பதை இனி முடிவெடுக்க வேண்டியது தி.மு.க.தான்'' என்றும் கூறிவிட்டன. பா.ஜ.க. பக்கம் அ.தி.மு.க. சாய்ந்துவிடாமல் கூட்டணிக்கு மறைமுகமாக அழைப்பு விடுக்கும்விதமாக இக்கட்சிகள் இம்முடிவை அறிவித்துள்ளன. பார்ப்பன-பாசிச ஜெயாவும் நாடாளுமன்றத் தேர்தல் கூட்டணிக்குக் கதவுகள் திறந்தே இருக்கின்றன என்கிறார். தி.மு.க. தலைவர் கருணாநிதியோ, ''நன்றியில்லா உள்ளம் கண்டு நாய்கள் கூடச் சிரிக்குமப்பா'' என்று கவிதை எழுதி இப்போலி கம்யூனிஸ்டுகளைச் சாடியுள்ளார்.

அணுசக்தி ஒப்பந்தத்தையொட்டி காங்கிரசு கூட்டணி ஆட்சிக்கு அளித்து வந்த ஆதரவை போலி கம்யூனிஸ்டுகள் விலக்கிக் கொண்ட பிறகு, நாடாளுமன்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் காங்கிரசு அரசுக்கு எதிராக வாக்களிப்பதில் மாயாவதியின் பகுஜன் சமாஜ் கட்சியும் போலி கம்யூனிஸ்டுகளும் இணைந்தனர். அதைத் தொடர்ந்து இடதுசாரி கூட்டணிக் கட்சிகளும் தேவேகவுடா, அஜித்சிங், சௌதாலா, சந்திரபாபு நாயுடு, பாபுலால் மராண்டி ஆகியோர் தலைமையிலான கட்சிகளும் மாயாவதி கட்சியோடு கூட்டணி கட்டிக் கொண்டு, மாயாவதியை பிரதமர் வேட்பாளராக அறிவிப்பது என்றும் பேச்சு வார்த்தைகள் நடத்தின. இதனை காங்கிரசு, பா.ஜ.க. அல்லாத மதச்சார்பற்ற மூன்றாவது அணி என்னும் ஐக்கிய தேசிய முற்போக்குக் கூட்டணி என்றும் போலி கம்யூனிஸ்டுகள் நாமகரணம் சூட்டியுள்ளனர். 'உ.பி.யில் மாயாவதி - அஜித்சிங் கூட்டணி 50 தொகுதிகளைக் கைப்பற்றும்; இடதுசாரி கூட்டணி மே.வங்கம், கேரளா, திரிபுரா மாநிலங்களில் ஏறத்தாழ 50 தொகுதிகளை கைப்பற்றி விடும். சந்திரபாபு நாயுடு, சௌதாலா முதலானோரின் கட்சிகள் 10 இடங்களையாவது பிடித்து விடும்; இதோடு தமிழகத்தில் அ.தி.மு.க. கூட்டணி சேர்ந்தால் இன்னும் 20 இடங்களில் வெற்றி பெற்று, மொத்தத்தில் இக்கூட்டணி 130 தொகுதிகளில் வெற்றி பெற்று விட்டால், இந்த அணியின் ஆதரவு இல்லாமல் எந்தக் கட்சியும் ஆட்சியில் அமர முடியாத நிலை ஏற்படும். நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின் உருவாகும் புதிய கூட்டணியால் இந்த அணியே ஆட்சியில் அமரும்' என்று ஓட்டுக்கட்சிகள் தேர்தலில் பெறும் சதவீதக் கணக்கு அடிப்படையில் போலி கம்யூனிஸ்டுகள் சந்தர்ப்பவாதக் கூட்டணி கட்டக் கிளம்பியுள்ளனர்.

மறுபுறம், போலி கம்யூனிஸ்டுகள் உருவாக்கத் துடிக்கும் மூன்றாவது அணியில் பங்கேற்கும் கட்சிகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் இந்துவெறி பா.ஜ.க.வுடன் மாறி மாறி கூட்டுச் சேர்ந்தவைதான். தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் எனும் ஏகாதிபத்திய மறுகாலனியாக்கத்துக்கு விசுவாசமாக நிற்பவைதான். அதிலும் பாசிச ஜெயாவோ, அயோத்திகர சேவைக்கு ஆளனுப்பியது, கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம், பயங்கரவாத மோடியின் முடிசூட்டு விழாவில் பங்கேற்றது, சேது சமுத்திரத் திட்டம், அமர்நாத் விவகாரம் - என வெளிப்படையாகவே பார்ப்பன பாசிசத்தை ஆதரித்து நிற்பவர். புதிய மொந்தையில் பழைய கள்ளு என்ற கதையாக, இத்தகைய கழிசடைகளைக் கூட்டணிக் கட்டிக் கொண்டு அதையே மதச்சார்பற்ற மூன்றாவது அணியாகக் காட்டி ஏய்க்கக் கிளம்பியுள்ளனர் இப்போலிகள்.

தேசியக் கட்சிகள் என்றழைக்கப்படும் பா.ஜ.க., காங்கிரசு மற்றும் போலி கம்யூனிஸ்டுகளிடையே கொள்கை-கோட்பாடு அடிப்படையிலான பெரிய வேறுபாடுகள் எதுவும் கிடையாது. காங்கிரசும் போலி கம்யூனிஸ்டு கட்சிகளும் இந்துத்துவ சக்திகளுடன் சமரசம் செய்து கொள்பவையாகவே உள்ளன. தனியார்மய - தாராளமயத் துரோகக் கொள்கையை எல்லா ஓட்டுக் கட்சிகளும் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆதரிக்கின்றன. எந்தவொரு கட்சிக்கும் பெரும்பான்மை பெற்றுத் தரும் கூட்டணி அரசியலுக்கு இடமளிக்காதவாறு விஜயகாந்த், சரத்குமார், சிரஞ்சீவி போன்ற நடிகர் கட்சிகள், சாதியக் கட்சிகள், பிழைப்புவாதிகளின் கட்சிகள் வாக்கு வங்கிகளைச் சிதறடித்து வருகின்றன. அனைத்திந்திய அளவிலும், தமிழகத்திலும் ஒரு கட்சியின் பெரும்பான்மை ஆட்சி என்பது பழங்கதையாகி விட்டது. இந்நிலையில், ஓட்டுக் கட்சிகள் தேர்தல்களில் பெறும் வாக்கு சதவீத கணக்குகளே கூட்டணியைத் தீர்மானிப்பவையாக உள்ளன. இந்த அடிப்படையிலேயே புதியதொரு சந்தர்ப்பவாத கூட்டணி கட்டி ஓட்டுப் பொறுக்க போலி கம்யூனிஸ்டுகள் கிளம்பியுள்ளனர்.

படிப்பகம்

www.padippakam.com

## காஷ்மீர்:

# இந்து தேசியத்தின் பரிதாபத் தோல்வி




இந்திய ஆதிக்கத்தில் இருந்து விடுதலை கேட்டு சிறீநகரில் நடந்த ஆர்ப்பாட்ட பேரணி.

நீறு பூத்த நெருப்பாக இருந்து வந்த காசுமீர் மக்களின் சுதந்திர வேட்கை மீண்டும் கொழுந்து விட்டு எரியத் தொடங்கியிருக்கிறது. காசுமீர் பள்ளத்தாக்கில், ஆகஸ்டு மாதம் தொடங்கி நடைபெற்றுவரும் போராட்டங்களில் ''சுதந்திர காசுமீர்'' என மக்கள் முழங்குகிறார்கள். ஆகஸ்டு 15 அன்று, காசுமீர் தலைநகர் சிறீநகரில் உள்ள லால் சௌக்கில் ஏற்றப்பட்டிருந்த இந்திய தேசியக் கொடியை, ஆர்ப்பாட்டக்காரர்கள் மத்திய ரிசர்வ் போலீசு படையைக் கொண்டே கீழே இறக்கி விட்டு, பாக். நாட்டின் தேசியக் கொடியை ஏற்றியுள்ளனர்.

இந்திய தேசியவாதிகள் அனைவரும் இதனைக் கண்டு ஆடிப் போய்க் கிடக்கிறார்கள். இந்திய இராணுவம், கடந்த பத்தாண்டுகளில் காசுமீரில் ஏற்படுத்தியிருந்த 'அமைதி'யை, பிரிவினைவாதிகளும், சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளும் சீர்குலைத்துவிட்டதாக அதிகார வர்க்கம் குற்றஞ்சுமத்துகிறது. ஜாடியில் இருந்து வெளியே வந்துவிட்ட ''சுதந்திர பூதத்தை'' மீண்டும் ஜாடிக்குள் எப்படி அடைப்பது என மைய அரசு தலையைப் பிய்த்துக் கொண்டு திரிகிறது.

இரண்டு மாதங்களுக்கு முன்பு கூட, காசுமீர் பள்ளத்தாக்கு அமைதியாகத்தான் இருந்தது — இராணுவத்தின் துப்பாக்கி முனையில். இப்பொழுது அங்கே மீண்டும் ''பிரிவினைவாதம்'' ஓங்கி ஒலிக்கிறதென்றால், அதற்கான முழுப் ''பெருமை''யையும் காங்கிரசும், பா.ஜ.க.வும் தான் பங்கு போட்டுக் கொள்ள வேண்டும்.


எதிர்வரும் அக்டோபரில் நடைபெறவுள்ள காசுமீர் சட்டசபைத் தேர்தலில், ஜம்முவைச் சேர்ந்த இந்துக்களின் வாக்குகளை மொத்தமாக அள்ளிக் கொள்ளத் திட்டம் போட்ட காங்கிரசு-மக்கள் ஜனநாயகக் கட்சி கூட்டணி, வனத்துறைக்குச் சொந்தமான 39.88 ஹெக்டேர் நிலத்தை, அமர்நாத் ஆலய நிர்வாக வாரியம் அனுபவித்துக் கொள்ள அனுமதித்துச் சட்டம் போட்டது. இதற்கு எதிராக காசுமீர் பள்ளத்தாக்கில் போராட்டம் வெடிக்கவே, அந்தச் சட்டம் பின்னர் ரத்து செய்யப்பட்டது. எனினும், கூட்டணியில் பிளவு ஏற்பட்டு, மாநில ஆட்சியை இழந்தது, காங்கிரசு. நிலம் ரத்து செய்யப்பட்டதை இந்துக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியாகவும், துரோகமாகவும் பா.ஜ.க. உருவேற்றியது.

அயோத்தி ராமர் கோவில் விவகாரம், உ.பி.யில் கூட பா.ஜ.க.வுக்கு வாக்குகளைப் பெற்றுத் தரவில்லை; குஜராத் படுகொலை போல ஒரு கலவரத்தை நடத்தினால், அதற்கு எதிர்வினையாகக் குண்டு வெடிக்கும் உத்தரவாதம் உண்டே தவிர, நாடெங்கும் 'இந்துக்களின்' வாக்குகளை அள்ள முடியுமாஎன்பது சந்தேகத்திற்குரியதுதான். அணுசக்தி ஒப்பந்தத்தைக் கடுமையாக



படிப்பகம்

www.padippakam.com



எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டைத் தாண்டும் போராட்டத்தின் பொழுது சுட்டுக் கொல்லப்பட்ட ஹுரியத் மாநாட்டுக் கட்சியின் தலைவர் அப்துல் அஜீஸ் ஷேக்கின் அடக்க ஊர்வலம், அரசியல் ஆர்ப்பாட்டமாக நடந்தது.

விமர்சித்தால், அமெரிக்க மாமாவுக்குக் கோபம் வந்து, முதலுக்கே மோசமாகப் போய் விடும். விலைவாசி உயர்வினால், தற்பொழுது பா.ஜ.க. ஆளுங்கட்சியாக உள்ள மாநிலங்களிலும் அதிருப்தி நிலவுகிறது. இப்படி, நாடாளுமன்றத் தேர்தலைச் சந்திக்க ஏதாவதொரு பிரச்சினையின் துணையைத் தேடிக் கொண்டிருந்த பா.ஜ.க.வுக்கு அமர்நாத் நில ரத்து விவகாரம் கிடைத்தது.

விலைவாசி உயர்வினால் விழி பிதுங்கிக் கிடக்கும் "இந்துக்கள்", அமர்நாத் ஆலயத்திற்கு நிலம் ஒதுக்கப்பட்டதையோ, பின்னர் அந்த உத்தரவு ரத்து செய்யப்பட்டதையோ ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. ஆனால், பா.ஜ.க.தான் கஞ்சா சாமியார்களின் பிரச்சினையை, 'தேசிய'ப் பிரச்சினையாக்கச் சதித்திட்டம் போட்டது. காசுமீர் தலைநகர் சிறீநகரை இந்தியாவோடு இணைக்கும் ஜம்மு-சிறீநகர் நெடுஞ்சாலையில் தடைகளை ஏற்படுத்தி, பொருளாதார முற்றுகையை காசுமீர் முசுலீம்களின் மீது திணித்தது, ஆர்.எஸ்.எஸ்-சிவசேனா கும்பல்.

"ஜம்மு இந்துக்களை மட்டுமே நம்பி பொருளாதாரத் தடையை அமல்படுத்த முடியாது என்பதால், பஞ்சாப் போன்ற வெளிமாநிலங்களில் இருந்து பா.ஜ.க. தொண்டர்கள் வரவழைக்கப்பட்டனர். காசுமீர் பள்ளத்தாக்கில் விளைந்த ஆப்பிள், பேரிக்காய் போன்ற பழவகைகளும், பூக்களும் வெளிச்சந்தைக்குச் செல்ல முடியாமல் போனதோடு, பெட்ரோல், சமையல் எரிவாயு, மருந்துப் பொருட்கள் போன்றவை பள்ளத்தாக்கிற்கு எடுத்துச் செல்லப்படுவதும் தடுக்கப்பட்டது. மட்டன் கிடைக்காததால், அங்கே பல திருமணங்கள் தள்ளி வைக்கப்பட்டன" என இப்பொருளாதாரத் தடையின் வெற்றியைப் பற்றி சந்தர் சுடா டோக்ரா என்ற ஜம்முவைச் சேர்ந்த "இந்து" பெருமிதமாகக் குறிப்பிடுகிறார். (அவுட்லுக், ஆக.18).

தேசிய ஒருமைப்பாடு பற்றி வாய்கிழியப் பேசும் மைய அரசு, இச்சட்டவிரோதமான பொருளாதாரத் தடையைத் தடுத்திருக்க வேண்டும். ஆனால் மைய அரசோ, மறைமுகமாக இத்தடையை ஆசீர்வதித்தது. "ஜம்மு சங்கர்ஷ் சமிதி ஜூலை 28 அன்று பொருளாதாரத் தடையை அறிவித்தது. அடுத்த ஆறு நாட்களுக்கு, எந்தவொரு லாரியும் பள்ளத்தாக்கிற்குள் செல்லவோ, அங்கிருந்து வெளியே வரவோ முடியவில்லை. முசுலீம் வியாபாரிகள், கடைக்காரர்கள், காசுமீரில் பதிவு செய்யப்பட்ட லாரிகளை ஓட்டி வந்த ஓட்டுநர்கள் அச்சுறுத்தப்பட்டதோடு, தாக்கவும் செய்யப்பட்டனர். ஆகஸ்டு 2-ஆம் தேதி வாக்கில், லாரிகளுக்குப் பாதுகாப்பு கொடுக்க இராணுவம் வரவழைக்கப்பட்டது. எனினும், அதற்குள் காசுமீரில் அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது" என பிரேம் சங்கர் ஜா என்ற பத்திரிகையாளர் குறிப்பிடுகிறார்.

இந்து மதவெறி அமைப்புகள் திணித்த இப்பொருளாதாரத் தடையுத்தரவுக்குப் பதிலடியாக, "எல்லைக் கட்டுப்பாடு கோட்டைக் கடந்து பாக். வசமுள்ள ஆசாத் காசுமீரின் தலைநகர் முசாஃபராபாத்துக்குச் செல்வோம்" என்ற திட்டம் முன் வைக்கப்பட்டது. காசுமீர் பழ உற்பத்தியாளர்கள், வியாபாரிகள் மற்றும் வர்த்தக அமைப்புகளின் சங்கங்களால் முன் வைக்கப்பட்ட இப்போராட்டத்திற்கு மக்களின் ஆதரவு பெருகியது. இதனால் ஹுரியத் மாநாட்டுக் கட்சி உள்ளிட்ட காசுமீரின் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் அமைப்புகள் மட்டுமின்றி, தேசிய மாநாட்டுக் கட்சி, மக்கள் ஜனநாயகக் கட்சி ஆகிய ஓட்டுக் கட்சிகளும் இப்போராட்டத்தை ஆதரிக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டன.

சிறீநகரையும், முசாஃபராபாத் நகரையும் இணைக்கும் நெடுஞ்சாலை மட்டுமல்ல, சிறீநகரை வெளியுலகத்தோடு இணைக்கும் வேறு சில சாலைகளையும் திறந்து விடவேண்டும் என காசுமீர் மக்கள் வெகுகாலமாகக் கோரி வருகின்றனர். காசுமீரில் 'அமைதி'யை ஏற்படுத்த மைய அரசால் நியமிக்கப்பட்ட ஆலோசனைக் குழுக்களும், இந்தியா-பாக். இடையே நடந்த பேச்சுவார்த்தைகளிலும் இச்சாலைகளைத் திறப்பது

**அப்துல் அஜீஸ் ஷேக்கின் இறுதி ஊர்வலத்தில் ஊரடங்கு உத்தரவையும் மீறி, மூன்று இலட்சம் மக்கள் கலந்து கொண்டனர்.**


படிப்பகம்

www.padippakam.com

தொடர்பாக உத்தரவாதங்கள் அளிக்கப்பட்டுள்ளன. எனினும் மைய அரசு, இச்சாதாரண உரிமையைக் கூட காசுமீர் மக்களுக்கு வழங்க மறுத்து, அவர்களை கடந்த 60 ஆண்டுகாலமாகச் சிறைப்படுத்தியே வைத்திருக்கிறது. இந்த நிலையில் பா.ஜ.க. கும்பல் பொருளாதாரத் தடையை ஏற்படுத்தவே, எல்லைக் கட்டுப்பாட்டைத் தாண்டிச் செல்லும் போராட்டத்தைக் கையில் எடுக்கும் நிலைக்கு காசுமீர் மக்கள் தள்ளப்பட்டனர். இந்தப் போராட்டத்தைக் கையில் எடுக்கவில்லை என்றால், இந்திய அரசு, தங்களைப் பட்டினி போட்டுக் கொல்லும் அடக்குமுறையை அடிக்கடி கையில் எடுக்கும் என்பதை சாதாரண காசுமீரி கூட உணர்ந்து இருந்தார்.




போலீசாரின் மீது கல்லெறிந்து தாக்கும் பெண்: இன்று விடுதலை முழக்கம் ''தீவிரவாதிகளின்'' நிகழ்ச்சி நிரலாக மட்டும் இல்லை.

ஆகஸ்டு 11 அன்று நடந்த எல்லைக் கட்டுப்பாடு கோட்டைத் தாண்டும் போராட்டத்தின் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில், ஹுரியத் மாநாட்டுக் கட்சியின் தலைவர் அப்துல் அஜீஸ் ஷேக் உள்ளிட்டு 12 பேர் கொல்லப்பட்டனர்; இருநூறுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இந்த வீரமரணங்கள் காசுமீர் பள்ளத்தாக்கையே கொதித்தெழச் செய்தன. அப்துல் அஜீஸ் ஷேக்கின் இறுதி ஊர்வலத்தில் ஊரடங்கு உத்தரவையும் மீறி, மூன்று இலட்சம் மக்கள் கலந்து கொண்டனர். மேலும், வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த ஹுரியத் மாநாட்டுக் கட்சியின் தலைவர்கள் மிர்வாயிஸ் ஃபரூக், சையத் அலிஷா ஜிலானி இருவரையும், பொதுமக்கள் போலீசாரோடு மோதி விடுதலை செய்ததோடு, இறுதி ஊர்வலத்திற்குத் தலைமையேற்கும்படியும் செய்தனர்.

**ஜம்முவில் நடந்த போராட்டம் இரும்புக் கரம் கொண்டு ஒடுக்கப் படவில்லை; வெல்வெட் கரம் கொண்டு தடவிக் கொடுக்கப் பட்டது.**

''இந்துக்களை'' உசுப்பேற்றி விட அமர்நாத் பனிலிங்கம் போன்ற மாதிரியை தில்லியில் உருவாக்கி வழிபாடு நடத்தும் அத்வானி.



காசுமீர் பிரச்சினையில் ஐ.நா. மன்றத்தைத் தலையிடக் கோரி, சிறீநகரில் உள்ள ஐ.நா.வின் இராணுவக் கண்காணிப்புக் குழுவினரிடம் மனு அளிப்பதற்காக ஆக.18 அன்று நடத்தப்பட்ட ஊர்வலத்தில் ஏறத்தாழ ஒரு இலட்சம் பேர் கலந்து கொண்டதாக முதலாளித்துவப் பத்திரிகைகளே எழுதியுள்ளன. ''இந்திய ஆதிக்கத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும்; கடந்த இரண்டு பத்தாண்டுகளாக இந்திய இராணுவமும் போலீசும் காசுமீரில் நடத்தியுள்ள போர்க் குற்றங்களைப் பற்றி விசாரணை நடத்த வேண்டும்; ஐ.நா.வின் அமைதிப் படையை நிறுத்த வேண்டும்'' என இம்மனுவில் கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டிருந்தன.

ஆகஸ்டு 11-க்குப் பிறகு நடைபெற்ற போராட்டங்களின் மீது போலீசும், துணை இராணுவப் படைகளும் நடத்திய துப்பாக்கிச் சூடுகளில் 40 பேர் கொல்லப்பட்ட போதும், போராட்டத்தின் வீச்சு தணிந்து போய்விடவில்லை. ''காசுமீர் மாநிலத்தின் வர்த்தக நலனுக்காக, ஜம்மு காசுமீரோடு, ஆசாத் காசுமீரை இணைக்கும் சாலைகளைப் போக்குவரத்திற்குத் திறந்து விடவேண்டும்; அரசியல் காரணங்களுக்காகக் கைது செய்யப்பட்ட காசுமீரிகள் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும்; ஆயுதப் படை சிறப்பு அதிகாரச் சட்டத்தை ஜம்மு-காசுமீரில் இருந்து விலக்கிக் கொள்ள வேண்டும்'' என்ற மூன்று கோரிக்கைகளை முன்வைத்துப் போராட்டம் தொடர்ந்து நடந்து வருகிறது.

காசுமீர் பள்ளத்தாக்கிலும் ஜம்முவிலும் ஒரே சமயத்தில் போராட்டங்கள் நடந்து வந்தாலும், முசுலீம்கள் மீது நடத்தப்பட்ட அளவிற்கு ஜம்மு இந்துக்களின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்படவில்லை. காசுமீர் முசுலீம்கள் நிராயுதபாணிகளா


படிப்பகம்

www.padippakam.com

கப் போராடிக் கொண்டிருந்தபொழுது, ஜம்மு வில் ஆர்.எஸ்.எஸ். கும்பல் திரிசூலத்தையும், கத்திகளையும், பெட்ரோல் குண்டுகளையும் எடுத்துக் கொண்டு போராட்டம் நடத்தினர். ஹூரியத் மாநாட்டுத் தலைவர்கள் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த பொழுது, ஜம்முவின் ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள் சுதந்திரமாக பத்திரிகைகளுக்கு பேட்டி கொடுத்தனர்.

''ஜம்முவில் நடந்த போராட்டம் இரும்புக் கரம் கொண்டு ஒடுக்கப்படவில்லை; மாறாக, வெல்வெட் கரம் கொண்டு தடவிக் கொடுக்கப்பட்டதாக'' மைய அரசின் அதிகாரியே ஒப்புக் கொண்டுள்ளார். (அவுட்லுக், ஆக.25) மைய அரசின் இம்மென்மையான அணுகுமுறை ஒரு புறமிருக்க, காங்கிரசு கட்சியைச் சேர்ந்த கரண் சிங், மதன்லால் சர்மா, லாங் சிங் ஆகிய மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆர்.எஸ்.எஸ். கும்பல் நடத்திவரும் போராட்டத்திற்கு வெளிப்படையாகவே ஆதரவு தெரிவித்துள்ளனர். இந்தச் சாதகமான நிலைமைகளைப் பயன்படுத்திக் கொண்டு ஜம்மு பகுதியை, காசுமீரில் இருந்து பிரித்துவிட வேண்டும் என மனப்பால் குடிக்கிறது, இந்து மதவெறிக் கும்பல்.

இப்பிரிவினையை நியாயப்படுத்துவதற்காக, ''காசுமீர் மாநில அரசால், இந்துக்கள் வாழும் ஜம்மு பகுதி கடந்த 60 ஆண்டுகளாகப் புறக்கணிக்கப்படுவதாக'' ஒரு பச்சைப் பொய்யை ஆர்.எஸ்.எஸ். கும்பல் பரப்பி வருகிறது. இந்து வெறியோடு குறுகிய தேசிய வெறியை கலந்து ஒகேனக்கல் பிரச்சினையை உருவாக்கியதைப் போன்ற அதே நரித்தனம்தான் இது. ஜம்மு வளர்ச்சியடையவில்லையென்றால், இந்திய அரசுதான் காரணமேயொழிய, அதற்கு காசுமீர் முசுலீம்கள் மீது பழிபோடுவது கடைந்தெடுத்த அயோக்கியத்தனம்.

இத்துணை 'களேபரத்துக்கும்' இடையிலும், அமர்நாத் யாத்திரை எவ்வித இடையூறும் இன்றி நடந்து முடிந்திருக்கிறது. சுற்றுலா செல்வதுபோல யாத்திரையில் கலந்து கொண்ட நடுத்தர வர்க்க இந்துக்கள் கூட, வசதி போதவில்லை எனக் குறைபட்டுக் கொண்டதாகத் தெரியவில்லை. அமர்நாத் யாத்திரையை ஆர்.எஸ்.எஸ். கும்பல் அரசியலாக்கிய பிறகு, இந்தப் 'பக்தி' யாத்திரையை முதலாளித்துவ நிறுவனங்கள்தான் ''வழங்குவதாக''க் (ஸ்பான்ஸர்) கூறுகிறார், அரசியல் விமர்சகர் அருந்ததி ராய். (அவுட்லுக், செப்.1, பக்.15).

**அட்டைப்படக் குறிப்பு**

**எல்லைக் கட்டுப்பாடு கோட்டைத் தாண்டி, பாக். வசமுள்ள ஆசாத் காசுமீரின் தலைநகர் முசாஃபராபாத் துக்குச் செல்லும் இந்திய வசமுள்ள ஜம்மு-காசுமீர் மக்களின் போராட்டம்.**


இப்படிப்பட்ட நிலையில், அமர்நாத் ஆலய நிர்வாக வாரியத்திற்கு வனத்துறை நிலத்தை ஏன் மீண்டும் ஒதுக்க வேண்டும்? அப்படியே வசதி வேண்டும் என்றால், அதனை அமர்நாத் ஆலய நிர்வாக வாரியத்தின் மூலம்தான் செய்து தர வேண்டும் என்ற அவசியம் கிடையாது. இந்து மதவெறிக் கும்பலைத் திருப்திபடுத்துவதற்காகவே தொடங்கப்பட்டுள்ள அமர்நாத் ஆலய நிர்வாக வாரியத்தைக் கலைத்துவிட்டு, ஆண்டாண்டு காலமாக இந்த யாத்திரையை நிர்வகித்து வந்த பேடாகுந்த் முசுலீம்களிடயே, பக்தர்களுக்கு வசதி செய்து தரும் பொறுப்பை மீண்டும் ஒப்படைக்கலாம்.

பா.ஜ.க. மட்டுமல்ல, காங்கிரசும் இப்பிரச்சினையை உடனடியாகத் தீர்த்து விடாமல், கொதிநிலையில் வைத்துக் கொள்ளவே விரும்புகிறது. இதன் மூலம் காசுமீரில் நடந்து வரும் சுயநிர்ணய உரிமைப் போரை, இந்து-முசுலீம் மோதலாகச் சீரழித்துவிட அக்கட்சிகள் சதி செய்கின்றன.

தேசிய ஒருமைப்பாடு என்ற கண்ணாடியைக் கழட்டிவிட்டுப் பார்த்தால்தான், பா.ஜ.க. - காங்கிரசு கும்பலின் சதித்தனங்கள் கண்ணுக்குத் தெரியும். ஒரு நூறு ஏக்கர் நிலத்தை 'இந்துக்களுக்கு'க் கொடுக்கக் கூடாது என்ற அற்பத்தனமான போராட்டத்தை காசுமீரி முசுலீம்கள் நடத்திக் கொண்டிருக்கவில்லை; காசுமீரிகளின் சுயநிர்ணய உரிமைக்காக உயிரைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற உண்மை புரியும்.

• மணி

பொருளாதாரத் தடையால் விற்பனைக்கு அனுப்ப முடியாமல் அழுகிப் போன ஆப்பிள் பழங்களைக் காட்டும் விவசாயி அப்துல் மஜீத்.





**அமர்நாத் யாத்திரையை முதலாளித்துவ நிறுவனங்கள் "ஸ்பான்சர்" செய்வதாக அருந்ததி ராய் கூறுகிறார்.**



படிப்பகம்

www.padippakam.com

# அகமதாபாத் குண்டு வெடிப்புகள்: நீதி மறுக்கப்பட்டோர் தொடுத்த போர்

**ஆர்.எஸ்.எஸ். கொலைக் கும்பலைத் தண்டிக்காமல், இசுலாமிய தீவிரவாதத்தை ஒழித்து விட முடியாது.**

ஜூலை 25, 2008 அன்று பெங்களூருவின் எட்டு ஒதுக்குப்புறமான இடங்களில் குறைந்த வீரியம் கொண்ட குண்டுகள் வெடித்தன. அதில் ஏழுபேர் காயமடைய, ஒருவர் கொல்லப்பட்டார். அதற்கு அடுத்த நாள் குஜராத்தின் சவுராஷ்ட்ரா பகுதியில் பொதுக்கூட்டமொன்றில் பேசிய நரேந்திர மோடி ''ஜெய்ப்பூரிலும், பெங்களூருவிலும் குண்டுகள் வெடிக்கலாம், ஆனால், குஜராத்தின் மண்ணில் பயங்கரவாதிகள் அடியெடுத்து வைக்க முடியாது'' என்று முழங்கினார். அன்று மாலையே அகமதாபாத்தின் பல்வேறு இடங்களில் 21 தொடர் குண்டுகள் வெடித்தன. அதில் நான்கு இடங்கள் மோடியின் சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்தவை.

2002 குஜராத் கலவரத்தின் எதிர்வினை எப்போது வேண்டுமானாலும் நடக்கலாம் என்று மற்ற எவரையும் விட மோடிக்கு நன்றாகவே தெரிந்திருக்கும். ஆனாலும் பாசிஸ்ட்டுகள் தமது அதிகார பலத்தை மட்டுமே அபரிதமாக நம்புவார்களே ஒழிய, மற்றெதனையும் சட்டை செய்யமாட்டார்கள். மோடியின் மண்ணில் நடந்த குண்டு வெடிப்பில் 56 அப்பாவி மக்கள் கொல்லப்பட்டும், 200க்கும் மேற்பட்டோர் காயமும் அடைந்தார்கள். அதற்கும் அடுத்த நாளே சூரத்தில் 17 இடங்களில் வைக்கப்பட்டிருந்த குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டு செயலிழக்கப்பட்டன.

சூரத்தில் குண்டுகளை வைத்து பயங்காட்டியது மோடியின் கைவரிசை என்று பூரி சங்கரசாச்சாரியார் குற்றம் சாட்டியிருக்கிறார். தனது ஆசிரமத்தில் இரண்டு சிறுவர்களை நரபலி கொடுத்த ஆஸ்ரம் பாபு எனும் சாமியாருக்கு மோடி ஆதரவளிப்பதால், பூரி சாமியார் இப்படிச் சொல்லியிருப்பதாகக் கருதலாமென்றாலும் அகமதாபாத் குண்டுவெடிப்பிலிருந்து கவனத்தை திசைதிருப்பவே போலீசு டம்மி குண்டுகளை வைத்திருக்கலாம் என்றும் கூறப்படுகிறது. ஒரு வேளை இசுலாமியத் தீவிரவாதிகளே வைத்திருப்பார்கள் எனக் கருதினாலும், மொத்தத்தில் ஒரு பயபீதியை ஏற்படுத்தும் அவர்கள் நோக்கம் வெற்றியடைந்திருக்கிறது என்றே சொல்லவேண்டும்.

கோத்ரா இரயில் எரிப்புக்குப் பிந்தைய கலவரத்தில் ஈடுபட்டும், ஈடுபடாமல் தார்மீக ஆதரவளித்தும் வந்த நடுத்தர வர்க்கம் இப்போது அமைதிகாக்கிறது. உலக அளவில் வைரப்பட்டைதீட்டுவதற்குப் புகழ்பெற்ற சூரத் நகரின் முதலாளிகள் அச்சத்தில் உறைந்து போயுள்ளனர். இந்து ராஷ்டிரத்தின் பரிசோதனைச் சாலையாக குஜராத்தை மாற்றியிருக்கும் மோடிக்கும் தற்போது உறைந்து போயிருக்கும் மக்கள் கோரும் மனநிம்மதியைத் தருவதுதான் பிரச்சினை! கோத்ராவின் போது வெறியூட்டிப் பேசிய மோடி தற்போது அடக்கி வாசிக்கிறார். ஆனாலும் குண்டுவெடிப்புகளிலிருந்து உத்திரவாதமான பாதுகாப்பை அவர் தர முடியாது என்பதை குஜராத் மக்களும் புரிந்திருக்கின்றனர். 2002-இல் நடந்த முசுலீம் மக்கள் மீதான இனப்படுகொலை இப்போது நடைபெறாததன் சூட்சுமம் இதுதான்.

குண்டு வெடிப்புக்கள் 1993-ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பித்தன என்றால் 2003-ஆம் ஆண்டிற்கு பின்னர் மட்டும் வாரணாசி, மும்பைத் தொடர் வண்டி குண்டு வெடிப்பு, மாலேகான், பானிபட்டில் சம்ஜூதா விரைவு வண்டி, ஹைதராபாத் மக்கா மசூதி-லும்பனி உணவகம், லக்னோ-வாரணாசி- பைசாபாத் நீதிமன்றங்கள், ஜெய்ப்பூர், கடைசியாக பெங்களூரு, அகமதாபாத் வரை பல இடங்களில் நடந்திருக்

**அகமதாபாத் குண்டு வெடிப்பில் படுகாயமடைந்துள்ள யாஷ் வியாஸ் என்ற ஒன்பது வயது சிறுவன்.**





படிப்பகம்

www.padippakam.com

கின்றன. ஒவ்வொரு குண்டு வெடிப்பும் திட்ட மிட்ட முறையில், நவீனத் தொழில் நுட்ப வசதியுடன் இலக்குத் தவறாமல் வெடித்திருக் கின்றன. அகமதாபாத் குண்டு வெடிப்பில் கடைசி குண்டு பொது மருத்துவமனையில் வெடித்தது. முந்தைய குண்டு வெடிப்புக்களில் காயமடைந்தோர் மருத்துவமனைக்கு வரும் நேரம் பார்த்து வெடிக்குமாறு நேரம் குறிக்கப் பட்டிருந்தது.

இதில் குண்டுவெடிப்பில் காயம டைந்தோரை மருத்துவமனைக்கு தூக்கி வந்து உதவி செய்தவர்களில் சிலரும் இரக்கமற்ற முறையில் கொல்லப்பட்டிருக்கின்றனர். இத் தகைய சோகங்களை பட்டியலிட்ட பத்திரிக் கைகள் எதுவும் குண்டுகள் ஏன் வெடித்தன என்பதைப் பற்றிய விரிவான ஆய்வுக்குள் செல்லவில்லை. மாறாக இசுலாமியத் தீவிர வாதம், சிமி, லஷ்கர் இ தொய்பா, ஐ.எஸ்.ஐ. சதி என்ற வழக்கமான பெயர்களைப் பட்டிய லிட்டதோடு, இவற்றை இரும்புக் கரம் கொண்டு மத்திய அரசு அடக்கவேண்டும் என் பதோடு முடித்துக்கொண்டன. ''இந்தியா டுடே'' பத்திரிக்கையோ இசுலாமிய பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதில் இந்தியா சுரணையின்றி இருக்கிறது என்று வன்மத்துடன் எழுதியது.



சூரத் நகரில் வெடிகுண்டுகள் 'கண்டுபிடிக்கப்படுகின்றன': பீதியை உருவாக்க மோடி நடத்திய நாடகமா?

இந்த குண்டு வெடிப்புக்களை வைத்து மதவெறி அரசி யலைக் கிளப்பிப் பயன்படுத்திக் கொள்வதில் பா.ஜ.க தயாராக இருந்தாலும், மக்கள் தயாரில்லை. குண்டு வெடிப் புகள் தந்த பீதியும், சோர்வும், விரக்தியும் மக்களைக் கவ்வியி ருப்பதால், அத்வானி சற்றே திகைத்துப் போயிருக்கிறார். ஆனாலும், பொடா சட்டத்தை மீண்டும் கொண்டு வர வேண்டும், இது போன்ற சட்டங்களைச் சட்டப்பேரவையில் இயற்றி மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பியிருக்கும் குஜராத், ராஜஸ்தான் அரசுகளின் கோரிக்கைகள் ஏற்கப்பட வேண்டும், அப்சல் குருவைத் தூக்கில் போடவேண்டும், இசு லாமியத் தீவிரவாதிகளை விசாரணையின்றித் தண்டிக்க வேண்டும் என்றெல்லாம் அத்வானி வழக்கமாக பேசும் விச யங்களை ஒப்புவித்திருக்கிறார். மன்மோகன் சிங்கும் தீவிர வாதிகளை மத்திய அரசு தண்டிக்கும் என்றும், இந்த பயங்கர வாதப் போரில் வெல்வோம் என்றெல்லாம் பேசியிருக்கிறார். தனியார் மயக் கொள்கைகளை வீச்சுடன் அமல்படுத்தும் நேரத்தில் வெடிக்கும் ஒவ்வொரு குண்டும் நாட்டின் நிகழ்ச்சிநிரலை திசைதிருப்புவதால் மத்திய அரசைப் பொறுத் தவரை ஒரு வகையில் ஆதாயம்தான்.

பா.ஜ.கவின் இளைய பங்காளியான பாசிச ஜெயாவும் பொடா சட்டத்தை மீண்டும் கொண்டு வந்து தீவிரவா திகளைக் கடுமையாக தண்டிக்க வேண்டுமென்று வலியுறுத்தி யிருக்கிறார். இத்தகைய மிரட்டல்களுக்கு அஞ்சமாட்டோம் என்பதுதான் சமீப காலமாக அதிகரித்து வரும் குண்டு வெடிப் புகள் நமக்கு உணர்த்தும் சேதி.

•••

1993-இல் நடந்த மும்பய் குண்டுவெடிப்பு, இசுலாமியத் தீவிரவாதத்தின் வருகையை நாட்டிற்கு அறிவித்துவிட்டது. அத்வானியின் இரத்த யாத்திரையும், பாபர் மசூதி இடிப்பை யொட்டி மும்பயில் நூற்றுக்கணக்கான இசுலாமிய மக்கள் சிவசேனா- ஆர்.எஸ்.எஸ் வெறியர்களால் வேட்டையாடப் பட்டதும் ஒரு சில இசுலாமிய இளைஞர்களை ஆத்திரம் கொள்ள வைத்தது. அந்த ஆத்திரத்தை அழித்திருக்க வேண்டு மென்றால், மும்பய்க் கலவரத்தின் சூத்திரதாரிகளான பால் தாக்கரேயும், போலீஸ் அதிகாரிகளும் தண்டிக்கப்பட்டிருக்க வேண்டும். இவர்களை குற்றவாளிகள் என்று ஸ்ரீகிருஷ்ணா கமிஷன் அறிவித்த பிறகும், இன்றைக்கு பதினாறு ஆண்டு களாகியும் தண்டிக்க முடியாத போது, தன் உற்றாரை இழந்த ஒரு இசுலாமிய இளைஞனின் மனது எப்படியெல்லாம் வதை பட்டிருக்கும்? மும்பய்க் குண்டுவெடிப்பின் குற்றவாளிகள் - அதில் பலர் அப்பாவிகள் - தண்டிக்கப்பட்டு, மும்பய்க் கலவரத்திற்கான குற்றவாளிகள் நிரபராதிகளாக உலாவரும் போது கோபம் கொள்ளும் ஒரு இளைஞனது மனம் எந்த நீதியைத் தேடும்?

இந்த சமூக அமைப்பில் நீதி சிறைபட்டிருக்கும் போது, ஆத்திரம் காரிய சாத்தியமான வழிகளைக் குறித்தே ஆலோ சிக்கும். பம்பாய் குண்டுவெடிப்பில் மட்டுமல்ல, கோவை குண்டுவெடிப்பிலோ, தற்போதைய அகமதாபாத் குண்டு வெடிப்பிலோ வரலாறு இதைத்தான் மறுக்கமுடியாமல் நிரூ பிக்கிறது. '98-இல் நடந்த கோவை குண்டுவெடிப்பின் குற்ற வாளிகள், விசாரணை நடந்து முடிந்து இன்று தண்டிக்கப் பட்டிருக்கின்றனர். இதில் பலர் அப்பாவிகள், பலர் வழங்கப் பட்ட தண்டனைக்காலத்தைவிடப் பல ஆண்டுகள் சிறையிலி ருந்தவர்கள், மதானி போன்றவர்கள் நிரபராதி என்று நீதி மன்றம் விடுவித்தாலும், 9 ஆண்டுகள் சிறையிலிருந்த வர்கள். இந்த நூற்றுக்கணக்கான இளைஞர்களின் குடும் பங்கள் சிறைக்காலத்தில் வாழவழியின்றி தத்தளித்தன. பொடா சட்டம் வருவதற்கு முன்பு சாதாரண சட்டப்பிரிவு களின் கீழ்தான் இந்த அடக்குமுறை நடந்திருக்கிறது. இவர்கள் யாருக்கும் தீர்ப்பு அளிக்கப்படும் வரை பிணை கிடைக்கவில்லை. ஆக, பொடா, தடா போன்ற காட்டு மிராண்டிச் சட்டங்கள் இல்லாமலேயே அப்பாவி இசுலாமி யர்களை, அவர்கள் முசுலீமாகப் பிறந்த ஒரே காரணத்தால் இந்த நாட்டின் போலீசு- நீதித்துறை தண்டிக்க முடியு மென்றால், அதை இந்தச் சமூக அமைப்பு அமைதியாக


படிப்பகம்

www.padippakam.com

வேடிக்கை பார்ப்பதன் மூலம் ஆதரிக்க முடியுமென்றால், தீவிரவாதம் ஏன் துளிர் விடாது?

இத்தனைக்கும் மேல், '98 கோவை குண்டு வெடிப்புக்கு முன்பு நடந்த காவலர் செல்வராசு கொலையை ஒட்டி நடந்த கலவரத்தில் பல அப்பாவி முசுலீம் மக்கள் கொல்லப்பட்டது குறித்த வழக்கு இன்றும் முடியவில்லை, யாரும் தண்டிக்கப் படவுமில்லை, சிறையில் வாடவுமில்லை. இந்த அநீதி, இந்திய அரசியல் உலகில் அங்கீகாரத்தைப் பெற்றிருக் கும்போது, இதன் எதிர் விளைவாகத் தோன்றும் தீவிரவாதம் யாருடைய அங்கீகாரத் தையும் பெற வேண்டிய அவசியமில்லையே? நீதி குறித்து இந்த சமூகம் எந்த அளவு பாராமுகமாக இருக்கிறதோ, அந்த அளவு தீவிரவாதமும் தனது செயல் குறித்து கவலைப்படாமல் ஈடுபடுகிறது.



அகமதாபாத் குண்டு வெடிப்பு தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள, ''சிமி'' அமைப்பின் தொண்டர்கள்: தீவிரவாதிகளா? அப்பாவிகளா?

கோத்ரா ரயில் பெட்டி எரிப்புக்குப் பிந்தைய 2002 குஜராத் கலவரங்கள் நாட்டிற்கு புதிய செய்திகள் பலவற்றை தெளிவுபடுத்தின. 2000-த்திற்கும் மேற்பட்ட இசுலாமிய மக்கள் ஆடு-மாடுகளைப் போல, சொல்லப்போனால் அவற்றைவிடக் கேவலமாக, இரக்கமற்ற முறையில் கொல்லப்பட்டனர். இந்த இனப்படுகொலையை விட முக்கியமானது, இந்தக் கலவரத்தை ஒரு முதலமைச்சரின் தலைமையில் அரசாங்கமும், இந்து மதவெறியர்களும் இணைந்து பெரும்பான்மை இந்துக்களின் பெயரில் நடத்தினர் என்பதே. தெகல்காவின் வீடியோ உள்ளிட்ட பல தரப்பினராலும் இவர்களது கோரமான இனப்படுகொலை நிரூபிக்கப்பட்டபோதும், மோடியும் அவரது தளபதிகளும் மீண்டும் தேர்தலில் வெற்றி பெற்றதோடு, தத்தமது அரசு, கட்சிப் பதவிகளில் எவ்வித நெருக்கடியுமின்றி வேலை செய்கின்றனர். கோத்ரா எரிப்புச் சம்பவம் முசுலிம்களால் நடத்தப்படவில்லை என்ற போதிலும், அதற்காகக் குற்றம் சாட்டப்பட்ட பல இசுலாமிய அப்பாவிகள் சிறையில் பிணை மறுக்கப்பட்டு வாடுகின்றனர். இனப்படுகொலை செய்த சங்கப்பரிவார குண்டர்களோ சிலர் மட்டும் வழக்கில் சேர்க்கப்பட்டு, பிணை கிடைத்து வெளியில் இருக்கின்றனர்.

இத்தனைக்கும் பிறகும் கண்ணெதிரே தம் உறவினர்களை கொத்துக்கொத்தாகப் பலிகொடுத்த முசுலீம் இளைஞர்களில் சிலராவது தீவிரவாதத்திற்காகப் பலியாகாமால் போனால் தானே ஆச்சரியப்பட முடியும்? மோடி தலைமையிலான கும்பல் தூக்கிலேற்றப்பட்டிருந்தால், அகமதாபாத்தில் குண்டுகள் நிச்சயம் வெடித்திருக்காது. இனப்படுகொலையின்போது பெரும்பான்மை இந்துக்கள் இந்துமதவெறியர்களை எதிர்த்துப் போராடியிருந்தால், குண்டுகள் செயலிழந்து போயிருக்கும். நடுநிலை பிறழாதது என்று பதற்றப்படும் நீதித் துறையின் வழியாகக் கொஞ்சமாவது நீதி கிடைத்திருந்தால் கூட, அந்த இளைஞர்கள் தீவிரவாதம் எனும் தற்கொலைப் பாதையைத் தேர்ந்தெடுத்திருக்க மாட்டார்கள். ஆயினும் வரலாறு தனது விளைவை உருவாக்கிக் கொண்டுதான் ஆக வேண்டும் என்பதனால், குண்டுகள் இப்போது அடிக்கடி வெடித்துக் கொண்டு இருப்பது மலிவாக மாறிவருகிறது.

•••

அத்வானி வகையறாக்கள் கோருவது போல பொடா சட்டமோ, கடுமையான அடக்குமுறைகளோ இந்தத் தீவிர வாதத்தை வேரறுக்காது. ஆத்திரத்திலும், அவலத்திலும், கையறு நிலையிலும் மையம் கொண்டுள்ள இந்த வேர் ஆழமாகப் பரவியிருக்கிறது. அகமதாபாத் குண்டு வெடிப்பிற்கு பொறுப்பேற்றுக்கொண்ட ''இந்தியன் முஜாகிதீன்கள்'' என்ற இயக்கம் ஊடகங்களுக்கு அனுப்பியிருக்கும் பதினைந்து பக்க மின்னஞ்சலில் அந்த வெறுப்பும், பழிவாங்கும் உணர்வும் கொப்பளிக்கிறது. இந்துக்களை அவர்களது எந்தக் கடவுளும் காப்பாற்றப் போவதில்லை எனவும், அவர்கள் மீது புனிதப்போர் தொடுக்கப்பட்டுள்ளது என்றெல்லாம் அந்தக் கடிதம் வெறுப்பை வெளிப்படுத்துகிறது. பெரும்பான்மை இசுலாமிய மக்களும், மதத் தலைவர்களும் இந்தப் புனிதப் போரை எதிர்த்த போதிலும், ஏற்றுக்கொள்ளாத போதிலும், இந்துக்களைப் பகைவர்களாகக் கருதாவிடினும், என்ன செய்வது என்ற பதிலில்லா கேள்வியை கேட்டுத் தீவிரவாதம் தன்போக்கில் சில இளைஞர்களை வென்றெடுக்கவே செய்கிறது.

அத்வானி உள்துறை அமைச்சராக இருந்த காலத்திலேயே குண்டுகள் வெடித்த வண்ணம்தான் இருந்தன. இப்போது பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில், மோடி போன்ற சர்வாதிகார ஆட்சி நிலவும் மண்ணில் கூட வெடிகுண்டுகள் பெரும் உயிரிழப்புக்களோடு வெடித்துக் கொண்டுதான் இருக்கின்றன. இனி, குண்டுவெடிப்புக்களை வைத்து அரசியல் ஆதாயம் தேடவேண்டிய நேரத்தில், இந்து மதவெறியர்களே குண்டு வைப்பதைச் செய்யமுடியும். தானே, தென்காசி குண்டு வெடிப்புக்கள் அதற்கோர் எடுத்துக் காட்டு. மேலும் இசுலாமியத் தீவிரவாதிகள் போல சர்வ இரகசியமாக குண்டு தயாரிக்கும் வேலையை சங்கப் பரிவாரங்கள் செய்யவேண்டியதில்லை. குஜராத் கலவரத்தின் போது ஆயுதங்களும், துப்பாக்கிகளும், எரிபொருளும் அண்டை மாநிலங்களிலிருந்து வண்டி வண்டியாய் இறங்கின. இந்து மதவெறியர்கள் கலவரம் செய்தாலும், இசுலாமியத் தீவிரவாதத்தின் பெயரால் குண்டு வைத்தாலும் அவர்களுக்கு ஆதாயம்தான்.



படிப்பகம்

www.padippakam.com



**மும்பய்க் கலவரம் தொடர்பாக பதினாறு வருடம் கழித்து நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட சிவசேனா எம்.பி. மதுக்கர் சர்போத்தருக்கு உடனடியாகப் பிணையும் வழங்கப்பட்டது.**

இசுலாமிய மக்களைத் தேசவிரோதிகள் என்று சித்தரித்துக் கொண்டே, தனது இந்து ராட்டிரக் கனவை நிஜமாக்கும் முயற்சிக்கு அது அவசியம்.

சர்வதேச இசுலாமியத் தீவிரவாதம் இந்தியாவிற்கும் வந்துவிட்டதாக பா.ஜ.க, ஊடகங்கள் உள்ளிட்ட பலரும் தெரிவிக்கின்றனர். அல் காய்தாவும், ஐ.எஸ்.ஐ.யும் ஏதோ ஒரு செல்பேசி மூலம் இங்கே குண்டுகளை வெடிக்கச் செய்வது சாத்தியமா என்ன? குண்டுவைப்பதற்கு தேவைப்படும் பல ஏற்பாடுகளைச் செய்வதற்கு உள்ளூர்க்காரர்களின் ஒத்துழைப்பு அவசியம். அதுவும் தனது உயிரைப் பணயம் வைக்கும் சாகச உணர்வுடன் கருத்து ரீதியாக வென்றெடுக்கப்பட்டவர்கள் வேண்டும். அதற்கான சமூக நிலைமைகளை இந்து மதவெறியர்கள் உருவாக்கியிருக்கும் போது அதை அல்கய்தாவோ, ஐ.எஸ்.ஐ.யோ பயன்படுத்திக்கொள்ள முடியுமே? மேலும், அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம் முதல் இன்ன பிற மறுகாலனிய நடவடிக்கைகள் மூலமாக இந்திய அரசு அமெரிக்காவின் கையாளாக மாறி வரும் நிலையில், அமெரிக்காவை எதிர்த்துப் போராடும் அல் காய்தா இந்தியாவையும் குறி வைக்கத்தானே செய்யும்?

இதற்கெல்லாம் மேலாக சமீபத்திய குண்டுவெடிப்புக்களின் குற்றவாளிகள் என போலீசு கைது செய்திருப்பது அப்பாவிகளைத்தான். இந்தியா முழுவதும் விரிவான விசாரணை செய்து இந்த மோசடியை ''தெகல்கா'' வார ஏடு அம்பலப்படுத்தியிருக்கிறது. ஒவ்வொரு குண்டு வெடிப்பின் போதும் குற்றவாளியின் படத்தைக் கணினி மூலம் வரைந்து வெளியிடுவதும், பாகிஸ்தான் காரணமென்று தெரிவிப்பதும், உள்ளூர் இளைஞர்கள் அங்கு சென்று பயிற்சி எடுத்திருப்பதாக அறிவிப்பதுமான இந்த போலீசு செய்திகளைத்தான் தரமான ''ஃப்ரண்ட்லைன்'' முதல் தரம் தாழ்ந்த ''தினமலர்'' வரை வெளியிடுகின்றன. தற்போது தமிழகத்தில் சென்னை அண்ணா மேம்பாலத்தை இசுலாமிய தீவிரவாதிகள் தகர்க்கப் போவதைத் தடுத்து நிறுத்தியதாக மார் தட்டும் போலீசின் நடவடிக்கை, தமிழ் சினிமாவைவிட கேவலமான கற்பனையாகும். ''தெகல்கா''வின் புலனாய்வு இந்தப் பொய்யுரைகளைத் தகர்த்திருக்கிறது.

அத்வானி உள்துறை அமைச்சராக இருந்தபோது ''சிமி'' (SIMI) எனப்படும் இந்திய இசுலாமிய மாணவர் இயக்கம் 1967 சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் மூலம் தடைசெய்யப்பட்டது. இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை இந்தத் தடை நீட்டிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தடைகளுக்காக நியமிக்கப்பட்ட நடுவர் மன்றத்தில் ஒவ்வொரு முறையும் காரணங்களைத் தாக்கல் செய்த அரசு, எந்த ஆதாரத்தையும் காட்டவில்லை. இதை தற்போதைய நீதிபதி கீதா மித்தல் அம்பலப்படுத்தி ''சிமி'' மீதான தடையை இரத்து செய்தார். உடனே மத்திய அரசு உச்சநீதிமன்றத்தில் ''சிமி'' மீதான தடையை தொடருமாறு விலக்கு பெற்றது. இதற்கு முன் ''சிமி'' இயக்கம் செய்த மேல்முறையீடுகளைப் பரிசீலிக்காத உச்சநீதி மன்றம், இப்போது நடுவர் மன்றத்தின் நியாயமான தீர்ப்பைத் தடுப்பதற்கு மட்டும் துடிக்கிறது.

''சிமி'' என்ற இயக்கம் இசுலாமிய வாழ்க்கை முறைகளைத் தீவிரமாக பின்பற்றுதலை, அம்மத மாணவர்களிடையே பிரச்சாரம் செய்கின்ற இயக்கம். மேலும், உலகம் முழுவதும் இசுலாம் பரவவேண்டும் என்பதையும் குறிக்கோளாகக் கொண்டிருந்தாலும், அதை ஜனநாயக வழிகளில் மட்டும் செயல் படுத்திய இயக்கம். பாபர் மசூதி இடிப்பை அடுத்து சங்கப்பரிவாரங்களை எதிர்த்தும், ஆப்கான் மீதான தாக்குதலை அடுத்து அமெரிக்காவை எதிர்த்தும் அரசியல் இயக்கத்தை சிமி தொடர்ந்து நடத்தியது. இதை வைத்தே சிமி தேச விரோத இயக்கம் என்று முத்திரை குத்தி, பா.ஜ.க., காங்கிரசு அரசுகள் தடை செய்து வருகின்றன. இந்த ஆண்டுகளில் நூற்றுக்கணக்கான இசுலாமிய இளைஞர்கள் பல ஆண்டுகள் எந்தக் குற்றமும் செய்யாமல் இந்தியச் சிறைகளில் கழித்திருக்கின்றனர். சிமி தடை செய்யப்பட்டபோது அதன் தலைவராக இருந்த ஃபலாகி பொய்க் குற்றச்சாட்டுக்களின் பெயரில் முப்பது மாதங்கள் சிறையில் கழித்தார்.

சிமி இளைஞர்கள் அரபு நாடுகளில் பணம் பெற்றுக் கொண்டு பாக்-ஆப்கான் சென்று பயிற்சி எடுத்து இந்தியாவில் குண்டு வைப்பதாக ஆளும் வர்க்கம் தொடர்ந்து பொய்யுரைக்கிறது. இதை எதிர்த்துச் சட்டப்பூர்வமாக போராடும் சிமியின் முயற்சிகள் பாசிசத்தின் கைகளால் தடுக்கப்படுவது மட்டும் தெளிவாகத் தெரிகிறது. ஆக, ஜனநாயகப் பூர்வமான வழிகளில் கூட இசுலாமிய இளைஞர்கள் போராடக்கூடாது என்று இந்த அரசியல் அமைப்பு தடை விதிக்கும் போது, அந்த இளைஞர்களின் மனதில் என்ன தோன்றும்? இந்தியாவில் தீவிரவாதம் தோன்றிவிட்டது என்பதைவிட இந்தியாதான் இசுலாமியத் தீவிரவாதத்தைத் தோற்றுவிக்கிறது என்பதே சரி.

இந்து மதவெறியர்களின் கலவரங்களினாலும், இசுலாமியத் தீவிரவாதத்தின் குண்டு வெடிப்பினாலும் இறுதியில் பாதிக்கப்படுவது அப்பாவி இசுலாமிய மக்கள்தான். அவர்கள் வீட்டுக்கதவை ஆர்.எஸ்.எஸ் குண்டர்கள் அல்லது போலீசுக்காரர்கள் தொடர்ந்து தட்டிக் கொண்டே இருக்கிறார்கள். இதற்கிடையில் வாழவும் முடியாமல் சாகவும் முடியாமல் அந்த மக்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். வெடிக்கும் ஒவ்வொரு குண்டும் அம்மக்களைத் தனிமைப்படுத்துவதையும், இந்துமதவெறியர்களின் கைகளை ஓங்கச் செய்வதையும்தான் சாதிக்கிறது. இசுலாமியத் தீவிரவாதம் இசுலாமிய மக்களைக் காப்பாற்றாது. பார்ப்பனியத்தால் இந்து எனும் பெயரில் அடிமைப்படுத்தப்பட்டிருக்கும் பெரும்பான்மை உழைக்கும் மக்களை ஒன்று சேர்த்து போராடும்போதுதான், இந்து மதவெறியை நாட்டிலிருந்து அகற்ற முடியும். இசுலாமிய தீவிரவாதம் இந்த முயற்சிக்கு தடை செய்கிறது. ஆயினும் இந்த தீவிரவாதம் நமது விருப்பு வெறுப்புக்கு அப்பாற்பட்டு தோற்றுவிக்கப்படுகிறது என்பதைப் புரிந்து கொண்டால், நிச்சயம் வழி பிறக்கும்.

**• அரசு**

www.padippakam.com

# அயோத்தி:

# ராம ஜென்ம பூமியா? கிரிமினல் சாமியார்களின் கூடாரமா?

## பார்ப்பனர்-பூமிகார் சாதி சாமியார்கள் சொத்துக்காக மோதிக் கொள்ளும் மைதானம்தான் அயோத்தி!

சங்கர மட முதலாளி ஜெயேந்திரன், அடியாள் கும்பலுக்குப் பணம் கொடுத்து சங்கரராமனைப் போட்டுத்தள்ளிய வரலாற்றுச்சிறப்புமிக்க சம்பவம் யாருக்கும் மறந்திருக்காது. கொலைகாரர்களோடு நெருங்கிப் பழகிய ஜெயேந்திரன் மிச்ச நேரங்களில் சினிமா பக்தைகளுடன் ஆன்மிகத்தை ஆய்வு செய்வதும், அதுவும் போக மேல்மட்டத் தகராறுகளை தீர்க்கும் மேல்கட்டை பஞ்சாயத்தையும் செய்து வந்தார். இந்த ஆன்மீக அவஸ்தைகளைத்தான் ரவுடிகளும் செய்து வருகின்றனர் என்றாலும், அவர்களுக்கு ஜெயேந்திரர் கையில் வைத்திருப்பது போன்ற தண்டமும், லோகக் குரு என்ற புனிதப் பட்டமும் கிடையாது. இருந்தாலும், அவாள்களைப் பொருத்தவரை, சங்கர மடம் என்பது என்னதான் கிரிமினல் வேலை செய்து வந்தாலும் புனிதத்தை இழக்கக்கூடாது; ஏதாவது செய்து அந்தப் புனிதத்தைக் காப்பாற்றியே ஆகவேண்டும் என்பதில் குறியாயிருக்கிறார்கள்.

இராமன் பிறந்த அயோத்தியில் இந்த ஜோடனைகள் எதுவுமில்லை. அங்கே மடங்களும் மாஃபியாக்களும் வேறுபடுவதில்லை என்றால் உங்களுக்குச் சற்று ஆச்சரியமாயிருக்கலாம். எனினும் உண்மை அதுதான். அயோத்தி நகரில் மட்டும் 8,000-த்திற்கும் மேலும், பீகாரில் 7,000-த்திற்கு அதிகமாகவும் மடங்கள் உள்ளன. பெட்டிக்கடைகளை விட மடங்கள் அங்கே அதிகமாக இருப்பதன் காரணம், இந்தியா முழுவதிலிருந்தும் வரும் சுற்றுலா பக்தர்களை வைத்து அங்கே விரவியிருக்கும் பக்தித் தொழில்தான். பாபர் மசூதியை இடித்து இராமனுக்கு கோவில் கட்டப்போவதாக சங்க வானரங்கள் ஊர் ஊராக ஓதியிருப்பதால், அயோத்தி '90-ஆம் ஆண்டுகளுக்குப் பிறகு பிரபலமாகிவிட்டது. அங்கு இருக்கும் மடங்களில் மட்டும் 40,000 மடாதிபதிகள், சாமியார்கள் மற்றும் பூசாரிகள் வேலை வெட்டியில்லாமல், நெய்ச் சோறோ, நெய் சப்பாத்தியோ தின்றுவிட்டுக் காலம் தள்ளுகிறார்கள். இவ்வளவு சாமியார்கள் இருப்பதால் அங்கே எங்கு பார்த்தாலும் ஆன்மீகம் கமழுமென்றுதான் பக்தகோடிகள் எதிர்பார்ப்பார்கள்.

சுற்றுலா பக்தர்கள் கொட்டும் பணம் எனும் லவுகீகம் உப்புச்சப்பற்ற அந்த ஆன்மீகத்தைக் கொள்ளை கொண்டு விட்டபடியால், அயோத்தி சாமியார்களுக்கிடையே குழாயடிச் சண்டையல்ல, கொலைவெறிச் சண்டையே நடக்கிறது. சாமியார்களில் பீகாரிலிருந்து வந்த பார்ப்பன மற்றும் பூமிகார் மேல்சாதியைச் சேர்ந்த சாமியார்கள் மற்றும் மடாதிபதிகள் 25,000 பேர் இருக்கின்றனர். பீகாரைச் சேர்ந்த ஒடுக்கப்பட்ட சாதி மக்கள் கால் வயிற்றுக் கஞ்சிக்காக இந்தியா முழுவதும் நாடோடிகளாக அலையும் போது, பார்ப்பன மேல்சாதி தொந்திகள் மட்டும் அயோத்தியில் நோகாமல் கல்லா கட்டி காலம் தள்ளுகின்றனர்.

திருவாடுதுறையின் முன்னாள் சின்ன ஆதீனம் தன்னைக் கொல்ல முயன்றதாக தற்போதைய பெரிய ஆதீனம் குற்றம் சாட்டியிருந்த கதையெல்லாம் அயோத்தியைப் பொருத்தவரை ஒன்றுமேயில்லை. அங்கே மடங்களின் சொத்துக்களைக் கைப்பற்றுவதற்கு பீகாரிலிருந்து அடியாள் கும்பல்கள் மடாதிபதிகளால் வரவழைக்கப்படுகின்றன. போலீசின் பதிவுப்படி கடந்த பத்தாண்டுகளில் உ.பி. மற்றும் பீகார் மாநிலத்தில் மட்டும் இந்த சொத்துப் பிரச்சினைகளுக்காக நடந்த மோதலில் 150 மடாதிபதிகள் அல்லது சாமியார்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர். இது ஒன்றும் ஐ.எஸ்.ஐ.யோ, லஷ்கர்-இ-தொய்பாவோ செய்த சதியல்ல. காவி உடுத்திய சாதுக்கள் தங்களுக்கிடையே நடத்திய பச்சைக் கொலைகள். அயோத்தியில் மட்டும் கடந்த ஏழு ஆண்டுகளில் 20 சாமியார்கள் சக சாமியார்களால் கொல்லப்பட்டிருக்கின்றனர். இராம ஜென்ம பூமிக்கே இதுதான் கதியெனும்போது, இந்தியா முழுவதும் இராமராஜ்ஜியம் வந்தால் நம் கதி?

அயோத்தி நகரில் மட்டும் எல்லாம் வல்ல இறைவனை நம்ப முற்றும் துறந்திருக்கவேண்டிய இம்முனிவர்களில் 350 பேர் உரிமம் பெற்று துப்பாக்கி வைத்திருக்கிறார்களாம். ஒரு கையில் தண்டம், மறுகையில் துப்பாக்கி! முந்தைய பா.ஜ.க. ஆட்சியில் உ.பி.மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி நடந்த சமயத்தில், பைசலாபாத் மாவட்ட நிர்வாகம் குற்றப் பின்னணி உள்ளோரின் பட்டியலைத் தயாரித்த போது, அதில் இடம்பெற்ற அயோத்தி சாமியார்களின் எண்ணிக்கை 861 குற்றங்களைச் செய்து விட்டு மடங்களில் புகுந்துவிட்டால் போலீசு வரமுடியாது என்ற நிலைமையே இதன் பின்னணி. அப்படி போலீசு புகுந்து சிதம்பரத்தில் தீட்சிதர்களைக் கொத்துக் கொத்தாக தூக்கியது போல செய்தால், விசுவ ஹிந்து

**உ.பி.மற்றும் பீகார் மாநிலங்களில் மட்டும் சொத்துப் பிரச்சினைகளுக்காக 150 சாமியார்கள் கொல்லப்பட்டுள்ளனர்.**



படிப்பகம்

www.padippakam.com

பரிஷத் உடனே இந்து மதத்திற்கு வந்த அநீதி என்று களமிறங்கிவிடும். எனவே, சாதா ரவுடிகளை என்கவுண்டர் செய்யும் போலீசு, சாமியார் ரவுடிகளைக் கைது செய்யவே அஞ்சுகிறது!

ஆர்.எஸ்.எஸ்-இன் இராம ஜென்ம பூமி இயக்கத்தால் இந்து மதவெறியர்களுக்குக் கிடைத்த அரசியல் ஆதாயத்திற்கு நிகரான செல்வாக்கை, இந்தக் கிரிமினல் சாமியார்களும் பெற்றிருப்பதால் மாவட்ட நிர்வாகம் மடங்களுக்குள் நுழைவதற்குத் தயங்குகிறது. சமீபத்தில் அப்படி ஒரு கிரிமினல் சாமியார் கும்பலைத் தேடி உ.பி.மாநில அதிரடைப்படை நுழைந்த போது இந்து மதவெறியர்கள் எதிர்த்தார்கள். அதிரடிப் படையே தேடுமளவுக்கு அந்தக் கும்பல் என்ன குற்றம் செய்தது? கோண்டா ஊரில் உள்ள ஒரு கிராம வங்கியில் பத்து இலட்சம் ரூபாயை மடாதிபதி அருண் சாது கும்பல் கொள்ளையடித்துவிட்டு மடங்களில் தஞ்சம் அடைந்திருக்கிறது. இதே கும்பல் மிரட்டிப் பணம் பறிப்பதும், முக்கிய நபர்களைப் பிணையக் கைதிகளாகக் கடத்திப் பணம் பறித்து வந்ததும் தற்போது அம்பலமாயிருக்கிறது. கோவில் நிர்வாகங்களைக் கைப்பற்றுவதற்கு பிற மடாதிபதிக் கும்பல்களுடன் இந்த அருண் சாது கும்பல் அயோத்தியில் நடத்திய சண்டைகள் அங்கே பிரபலம்.



அயோத்தி கிரிமினல் சாமியார் இராம் விலாஸ் வேதாந்தியுடன் (இடமிருந்து இரண்டாவது) வி.இ.ப. தலைவர் அசோக் சிங்கால் மற்றும் பா.ஜ.க. தலைவர் முரளி மனோகர் ஜோஷி. (கோப்புப் படம்)

இந்தச் சொத்துப் பிரச்சினைகளுக்காக சாமியார் கும்பல்கள் துப்பாக்கியால் சுட்டுக் கொள்வதும், குண்டு வீசிக் கொள்வதும் நிறைய நடந்திருக்கின்றன. பல கோவில் பூசாரிகள் கொல்லப்பட்டிருக்கின்றனர். அயோத்தியில் இந்தச் சண்டைகள் முடிவின்றி நடைபெறுகின்றன. அந்த வட்டாரத்தில் நடைபெறும் குற்றங்களின் மையமாக அயோத்தி மடங்கள் இருக்கின்றன. பல மடாதிபதிகள் பீகாரிலிருந்து அடியாட்களை வரவழைத்து மடங்களில் நிரந்தரமாக வைத்துக் கொள்வதும், பின்னர் தொழில்முறைக் குற்றங்களைச் செய்து பணம் சம்பாதிப்பதையும் தொழிலாகச் செய்து வருகின்றனர். சியாம் மஹாராஜ் எனும் மடாதிபதியின் கும்பல் கான்பூர் தொழிலதிபர் ரவீந்தர் கேடியாவை கடத்தி 18 இலட்சம் பெற்றுக் கொண்டே விடுவித்திருக்கிறது.

இவையெல்லாம் போக இராம ஜன்மபூமி ட்ரஸ்ட்டின் தலைவரான இராம் விலாஸ் வேதாந்தியைப் பற்றி புதிய ஜனநாயகத்தில் முன்னர் எழுதியிருந்தோம். சேது சமுத்திரப் பிரச்சினைக்காக கருணாநிதியின் தலையை வெட்டச் சொன்ன இவர்தான், முசுலீம்களுக்கு எதிரான துவேசத்தைப் பிளறுவதில் பிரபலமானதோடு ஹவாலா மோசடிகளுக்கும் பெயர் பெற்றவர். இவர் சில்லறைச் சாமியார் இல்லையென்பதால், மேல்மட்ட அளவில் முதலாளிகளின் கருப்புக் கோடிகளை வெள்ளையாக மாற்றுவது முதலான சேவைகளைப் பக்த கோடிகளுக்கு கச்சிதமாக செய்து வருகிறார்.

**வைசலாபாத் மாவட்ட நிர்வாகம் கிரிமினல்களின் பட்டியலைத் தயாரித்தபோது, அதில் இடம்பெற்ற அயோத்தி சாமியார்களின் எண்ணிக்கை 86!**

அயோத்தியின் கிரிமினல் புராணம் இதுதான். இந்தச் சாமியார்களை வைத்துதான் விஸ்வ இந்து பரிஷத் தர்ம சன்சாத் எனும் மடாதிபதிகளின் பேரவையைக் கூட்டி பாபர் மசூதி இடிப்பு முதலான அக்கிரமங்களுக்கு நாள் குறிக்கிறது. காசு பணத்துக்காகத் தங்களுக்குள்ளேயே இரத்தக் கவிச்சியோடு கொலை செய்யும் இவர்கள்தான் இந்து மத வெறியைக் கிளப்புவதையும், முசுலீம் மக்களை வன்மம் கொண்டு மிரட்டுவதையும் செய்கிறார்கள் என்பது முக்கியமானது. வன்முறையும், துவேசமும், வெறியும் இவர்களது தொழிலிலும், இரத்தத்திலும் கலந்திருக்கிறது. இந்த காவிக் கயவர்களைத்தான் இந்து தர்மத்தின் இரட்சகர்களாக ஆர்.எஸ்.எஸ் கும்பல் முன்னிறுத்துகிறது. சாதியக் கொடுங்கோன்மையை ஆன்மாவாக வரித்திருக்கும் இந்து தர்மத்திற்கு இந்த ஆன்மீக அடியாட்கள் பொருத்தமாகத்தான் இருக்கிறார்கள்.

வட இந்திய சாமியார்கள் என்றால் ஏதோ கஞ்சாவைப் புகைத்துக் கொண்டு, அரை-முக்கால் நிர்வாணத்தில் ஜடா முடியோடு அலைபவர்கள் என்றுதான் நினைத்துக் கொண்டிருக்கிறோம். சாதா ரவுடிகளையாவது சட்டென்று அடையாளம் கண்டு கொள்ளலாம். ஆனால் காவி ரவுடிகள், மடத்துப் பெருச்சாளிகளாக ஊர் சொத்தைக் கொள்ளையடிப்பதை அவ்வளவு சுலபத்தில் அடையாளம் காண முடியாது. எனினும் அயோத்தி புராணம் காவித் திரையை விலக்கி, மடாதிபதிகள் என்று அழைக்கப்படும் ரவுடிகளைத் தெளிவான விசுவரூப தரிசனமாகக் காட்டுகிறது. பக்த கோடிகள் முட்டாள்தனமாக கன்னத்தில் போட்டுக் கொள்ளாமல் கம்பை எடுத்தால் அயோத்தி முதல் காஞ்சி வரை அலப்பரை செய்யும் ஆன்மீக ரவுடிகளை ஒழித்துக் கட்டலாம்.

● பச்சையப்பன்

www.padippakam.com

# ஊராட்சி போனது உலக வங்கி ஆட்சி வந்தது

## புதிய மாநகராட்சிகள் உருவாக்கப்படுவதின் பின்னே நகர்ப்புறச் சேவைகளைத் தனியார்மயமாக்கும் சதி மறைந்துள்ளது.

திருப்பூர், ஈரோடு, தூத்துக்குடி, வேலூர் நகராட்சிகள் அடுத்தடுத்து மாநகராட்சிகளாகத் தரம் உயர்த்தப் பட்டுள்ளன. பெரும் பொருட்செலவில் இவற்றின் தொடக்க விழாக்கள் கோலாகலமாக நடத்தப்பட்டுள்ளன. நவீன பாதாளச் சாக்கடைத் திட்டங்கள், சாலைகளை அகலப்படுத் துவது, திடக்கழிவு மேலாண்மை எனப் பல்வேறு திட் டங்களைச் செயல்படுத்தி வரும் தி.மு.க. அரசு, நகர்ப்புற மக்களுக்கு வசதிகளைச் செய்து கொடுத்து மேம்படுத்துவதாக மக்களும் கருதுகின்றனர்.

மாநகராட்சிகளின் எண்ணிக்கை திடீரென அதிகரித்திருப் பதன் பின்னணியைப் புரிந்து கொள்ள முதலில் நாம் 'மூன்றாவது தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்' (த.நா.ந.வ.தி.) பற்றித் தெரிந்து கொள்ளவேண்டும்.

47 சதவீதத்துக்கும் அதிகமான மக்கள் நகரங்களில் வாழும் தமிழ்நாட்டில்தான் நகரமயமாக்க வேகம் இந்தியா விலேயே அதிகம் என்பதால், இம்மக்களுக்கு தரமான சேவை செய்திடவும் உள்கட்டுமானங்களை வலுவாக்கிடவும் இத்திட்டம் உருவாக்கப்பட்டது. இத்திட்டத்தினை உரு வாக்கி அதற்கு 8.5 சதவீத வட்டியுடன் 20 ஆண்டுகளில் திருப்பச் செலுத்தும் வகையில் ரூ. 1200 கோடி கடன் தந்தி ருக்கிறது, மறுகட்டுமானம் மற்றும் வளர்ச்சிக்கான பன்னாட்டு வங்கி.

2005-இல் ஜெயலலிதாவால் தொடங்கி வைக்கப்பட்ட இத்திட்டம் மூன்று முக்கிய நோக்கங் களைக் கொண்டுள்ளது. ஒன்று, மாநில, மைய அரசுகளின் பிடியில் இருந்து நகர் மன்றங்களை விடுவித்து, அவற்றை வலிமையான நிறுவனங்களாக்குதல்; இரண்டு, எவ்விதக் கட்டுப்பாடுமின்றி தனியார் மூலதனங்கள் வாயிலாக நகர உள்ளாட்சியின் தேவைகளை விரைவில் பூர்த்தி செய்தல்; மூன்று, உள்ளாட்சியும் தனியாரும் இணைந்து நலத் திட்டங்களை நிறைவேற்றுதல்.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்திய நகர வளர்ச்சிக்காகத் தேவைப் பட்ட 28 ஆயிரம் கோடி ரூபாயைக் கடனாக வழங்க வேண்டுமானால், உள்ளாட்சி அமைப்புகள் மறுசீரமைப்பு செய்யப்பட்டு, அவை மைய, மாநில அரசுகளிடம் இருந்து விடுவிக்கப்பட்டு, உலக நிதி மூலதனத்தை நேரடியாகக் கையாள வகை செய்யப்பட வேண்டும் என உலக வங்கி நிபந்தனை விதித்து, அதன்படி த.நா.ந.வ.தி. வடிவமைக்கப்பட்டது.

இத்திட்டத்தின்படி த.நா.நகர்ப்புற வளர்ச்சி நிதி ஒன்று ஏற் படுத்தப்பட்டது. இந்த அமைப்புக்கு நேரடியாக உலக வங்கி கடன் தந்தது. வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தமிழகமெங்கும் உள்ள நகராட்சிகளில் பாதாளச் சாக்கடைகள், குடிநீர் வழங்கல், திடக்கழிவு மேலாண்மை ஆகியவற்றுக்கு ரூ. 440 கோடி இந்நிதியில் இருந்து ஒதுக்கப்பட்டது.

நகராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ள கடன்கள் மட்டுமல் லாமல், திட்டத்தை வடிவமைத்துத் தருவதிலும் பன்னாட்டு நிறுவனங்கள் ஆதிக்கம் செலுத்த வகை செய்யப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, தூத்துக்குடியின் புதிய பாதாள சாக்கடைத் திட்டத்தை வடிவமைத்தது ''வில்பர்ஸ்மித் அசோசியேட்ஸ்'' எனும் அமெரிக்க நிறுவனம். நாமக்கல்லுக்கான திட்டத்தை வடிவமைத்தது ''தலால்மாட் மெக்டொனால்டு'' எனும் பிரிட்டன் நிறுவனம்.

திண்டுக்கல், விருதுநகர், நீலகிரி, இராமநாதபுரம், கடலூர் ஆகிய நகராட்சிகளுக்கும் இவ்வாறான கழிவுநீர் வடிகால் திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. வளர்ச்சி நிதியில் இருந்து, வைகை அணையில் இருந்து மதுரைக்கு குடிநீர் கொண்டுவர ரூ.10 கோடியும், மதுரையில் திடக்கழிவு மேலாண்மைக்கு ரூ.11.48 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளன.

தூத்துக்குடி நகராட்சி மாநகராட்சியாக மேம்படுத்தப்பட்டதை அறிவிக்கும் விழாவில் மு.கருணாநிதி மற்றும் மு.க.ஸ்டாலின்.





படிப்பகம்

www.padippakam.com

புதிய மாநகராட்சிகளான ஈரோடு, வேலூருக்கு முறையே ரூ.10 கோடியும் ரூ.9 கோடியும் கடனாக வழங்கப் பட்டுள்ளன. உள்ளாட்சி-தனியார் கூட்டுத் திட்டங்களுக்காக த.நா.நகர வளர்ச்சி நிதியில் ஐ.எல்.எப்.எஸ். நிறுவனமும், ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கியும், ஹெச்.டி.எப்.சி.யும் பங்குதாரர்களாகச் சேர்க்கப்பட்டன. (ஹெச்.டி.எப்.சி. வங்கியில் உள்ள உலக வங்கியின் பங்கு ரூ. 400 கோடி). கரூரில் அமராவதி ஆற்றைக் கடக்க உதவும் பாலம் இக் கூட்டுத் திட்டத்தின் கீழ்க் கட்டப்பட்டு, அதனைப் பயன்படுத்துவோரிடமிருந்து சுங்கம் வசூலிக்கும் முறை அறிமுகம் செய்யப்பட்டது.

இதற்காக தமிழ்நாடு சுங்க வசூல் சட்டம் திருத்தப்பட்டு, உள்ளாட்சிகள் தனியாருடன் இணைந்து சாலைகள், பாலங்கள் கட்டிச் சுங்கம் வசூலிக்க வகை செய்யப்பட்டது. இதன்படி மதுரை புற வழிச்சாலை, சென்னை-வளசரவாக்கம் மழை நீர் வடிகால் திட்டம் வடிவமைக்கப் பட்டன. திடக்கழிவு மேலாண்மையிலும் தனியார் கூட்டுத் திட்டம் ஆலந்தூரில் அறிமுகமாகியுள்ளது. ஒவ்வொரு குடும் பமும் மாதந்தோறும் ரூ.150 தரவேண் டுமென அதன் திட்ட அறிக்கை கூறுகிறது.



**நகர்ப்புறக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ஜெர்மன் வங்கியிடமிருந்து 534 கோடி ரூபாய் கடன் பெறும் ஒப்பந்த நிகழ்ச்சியில் உள்ளாட்சித் துறை அமைச்சர் மு.க.ஸ்டாலின் மற்றும் அதிகாரிகள்.**

முதல் நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் 1996-இலேயே தொடங்கப்பட்டு விட்டது. அதற்கும் உலக வங்கிதான் மூளை. இத்திட்டத்தின் மைய நோக்கமே தாராளமயம் என்பதால், அதற்கு ஏற்றபடி உள்ளாட்சி ஊழியர்களுக்கும், தேர்தல் மூலம் தேர்ந்தெடுக் கப்பட்டவர்களுக்கும், புதிய முறைக்கு ஏற்றபடி கணினி மென்பொருள், புதிய தொழில்நுட்பம், நிதி வசூல் திட்ட மேம்பாடு போன்றவற்றில் பயிற்சிகள் தொடர்ச்சியாகத் தரப் பட்டு வருகின்றன. 2006–07-இல் இதற்காக ரூ. 5.44 கோடி ஒதுக்கப்பட்டு, மக்கள் பிரதிநிதிகள் பயிற்சிக்காக வெளிநாடு களுக்குக் கூட அனுப்பப்பட்டனர். 2004-இல் பொன்னம் பட்டி ஊராட்சித் தலைவி சல்மா (எழுத்தாளர்) பாகிஸ்தா னுக்குப் போய் வந்ததும் இத்தகைய திட்டத்தின்கீழ்தான்.

தற்போது தமிழ்நாட்டிலிருக்கும் அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளும் புவியியல் தகவல் அமைப்புடன் ஒருங்கிணைக்கப்பட்டு திட்டமிடல், வருவாய் வகைகள் உயர்த்தப்படல், கட்டிடங்கள், நிலங்கள் குறித்த தகவல்கள் அனைத்தும் கணினிமயமாக்கப்பட்டு வருகின்றன. முதல் கட்டமாக மதுரை, கோவை, திருச்சி, இராசபாளையம், கோபிச்செட்டிபாளையம் ஆகிய உள்ளாட்சி அமைப்புகள், உலகவங்கி மீளாய்வு செய்வதற்கு வசதியாக இணையம் மூலம் இணைக்கப்பட உள்ளன.

கொடுத்த கடன்களை எல்லாம் எவ்வகைகளில் உலக வங்கி திரும்பப் பெறும்? அதற்கான வழிமுறைகளையும் அவ்வங்கியே திட்டத்தில் சொல்லியிருக்கிறது. ரூ.46.4 கோடி மதிப்பிலான தூத்துக்குடி திட்டத்தில் உலக வங்கியின் கடன் ரூ.26 கோடி. இதனை வசூலிக்கும் வகையில், இத் திட்டத்திற்கு ஒவ்வொரு குடும்பமும் ரூ.3 ஆயிரமும், பள்ளி, கடைகள் ரூ.7500-மும், தொழிலகங்கள் ரூ. 10 ஆயிரமும் தர வேண்டும்; இத்திட்டத்தில் இணைக்கப்பட உள்ள மொத்த வீடுகள் 42,955. இவர்களிடமிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ. 26 லட்சம் வசூலிக்கப்பட வேண்டும்; இத்திட்டத்தின் கட்டு மானப்பணிகள் முடிந்த பின்னர் நகராட்சி பராமரிப்பையும் கழிவு நீர் சுத்திகரிப்பையும் தனியாரிடம் விட்டுவிடலாம் என்கிறது திட்ட அறிக்கை.

த.நா.ந.வ.தி. அறிக்கையில் ஏற்கெனவே பத்துக்கும் மேற் பட்ட நகராட்சிகள் சிறப்புப் பிரிவின்கீழ் வகைப்படுத்தப்பட் டிருந்தன. அவற்றிற்கு வழங்கப்பட்ட கடனும் பிற நகராட் சிகளை விட மிகவும் அதிகம். அப்பட்டியலில் இருக்கும் திருப்பூர், ஈரோடு, தூத்துக்குடி, வேலூர் நகராட்சிகள்தான் தற்போது மாநகராட்சிகளாக்கப்பட்டுள்ளன. இவ்வாறு தரம் உயர்த்துவதன் மூலம், சொத்து வரி போன்ற மாநகராட்சி வருவாய் பல மடங்கு உயரும். அதாவது, இனி இந்நகரங் களில் குடியிருக்கும் மக்கள் முன்பைவிட அதிகமாக வரி செலுத்த நேரிடும்.

ஆக, அரசின் கட்டுப்பாட்டிலிருந்து தமிழக நகரங்களின் நிர்வாகங்களைப் பறித்தெடுத்து உலக நிதிமூலதனத்திடம் கொடுக்கும் வேலையைத்தான் மாநில உள்ளாட்சித் துறை செய்துவருகிறது. கடன் வலையில் உள்ளாட்சிகள் சிக்கி உலக வங்கியின் எடுபிடிகளாக அவை மாற்றப்படுவதுதான் நல்லாட்சியா? இந்த 'நல்லாட்சியின்' உண்மையான நிர்வாகி யார்? மு.க.ஸ்டாலினா? உலகவங்கியா?

● அசுரன்



படிப்பகம்

www.padippakam.com

## தெற்கு ஒசெட்டியா:

# அமெரிக்க - ரஷ்ய வல்லரசுகளின் பகடைக்காய்

**அமெரிக்காவும் ரஷ்யாவும் ஐரோப்பாவில் தமது மேலாதிக்கத்தை நிலைநிறுத்தவும், விஸ்தரிக்கவும் பதிலிப் போரைத் தொடங்கியுள்ளன.**

ஆகஸ்ட் 7-ஆம் நாள் பின்னிரவு. ரஷ்யாவை ஒட்டியுள்ள சின்னஞ்சிறு பிராந்தியமான தெற்கு ஒசெட்டியாவின் மீது ஜார்ஜியாவின் போர் விமானங்கள் குண்டு மழை பொழிந்தன. பீரங்கித் தாக்குதலில் அச்சிறு மாநிலத்தின் தலைநகரான ஷின்வெலி தரைமட்டமாக நொறுங்கியது. காகசஸ் மலைப் பிராந்தியமெங்கும் குண்டுகளின் வெடியோசை எதிரொலித்துக் கொண்டிருந்தது. தொடர்ந்து ஐந்து நாட்கள் நீடித்த இப்போர்த் தாக்குதலில் தெற்கு ஒசெட்டியாவின் நாடாளுமன்றக் கட்டடம், மருத்துவமனைகள், பல்கலைக் கழகங்கள், தேவாலயங்கள் என அனைத்தும் நொறுங்கிக் கிடக்கின்றன. இக்கொடிய போர்த் தாக்குதலில் 2,000-க்கும் மேற்பட்ட அப்பாவி ஒசெட்டிய மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 30,000-க்கும் மேற்பட்ட மக்கள் உற்றார் - உறவினர், வீடு-வாசல்களை இழந்து அகதிகளாகியுள்ளனர்.

தெற்கு ஒசெட்டிய மக்களுக்குத் துணையாக ரஷ்ய வல்லரசு தனது படைகளைக் குவித்தது. ரஷ்ய ராணுவம் ஜார்ஜியப் படைகளை தெற்கு ஒசெட்டியாவிலிருந்து விரட்டியடித்ததோடு, ஜார்ஜியாவின் முக்கிய நகரங்கள் மீதும் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தி எச்சரித்தது. அதன்பின்னரே, ஜார்ஜியா போர் நிறுத்தத்தை அறிவித்தது.

•••

சோவியத் ஒன்றியம் 1991-இல் சிதைந்த போது, அதுவரை ரஷ்யாவுடன் ஐக்கியப்பட்டிருந்த ஜார்ஜியா தனிநாடாகப் பிரிந்து சென்றது. ஜார்ஜியாவின் வடபகுதியில் ஒசெட்டியர்கள் எனும் தேசிய இனச் சிறுபான்மையினர் உள்ளனர். காகசஸ் மலையின் தெற்கேயுள்ள இப்பகுதி தெற்கு ஒசெட்டியா என்றழைக்கப்படுகிறது. வடக்கு ஒசெட்டியா, ரஷ்யாவுடன் இணைந்துள்ளது.

ஜார்ஜியா தனிநாடாகியபோது, தெற்கு ஒசெட்டியர்கள் சுயாட்சி உரிமை கோரிப் போராடினர். அதேபோல ஜார்ஜியாவின் மேற்குப் பகுதியிலுள்ள அப்காசியர்கள் எனும் சிறுபான்மை தேசிய இனத்தினரும் சுயாட்சி உரிமை கோரி போராட்டங்களைத் தொடர்ந்தனர். இவற்றை ஜார்ஜியா அரசு மிருகத்தனமாக ஒடுக்கி, இப்பிராந்தியங்கள் ஜார்ஜியாவின் ஆதிபத்திய உரிமை என்று கொக்கரித்தது.

மறுபுறம், இவ்விரு தேசிய இனச் சிறுபான்மையினர் வரலாற்று ரீதியாகவும் கலாச்சார ரீதியாகவும் ரஷ்யாவுடன் நெருங்கிய பிணைப்பைக் கொண்டவர்கள் என்று நியாயவாதம் பேசும் ரஷ்ய வல்லரசு, இவ்விரு சிறுபான்மை தேசிய இனத்தவரைப் பாதுகாப்பது என்ற பெயரில் அவற்றுக்கு ஆயுத உதவியும் பயிற்சியும் அளித்து வந்தது. ரஷ்ய ஆதரவுடன் ஜார்ஜிய ராணுவத்தின் மீது இவ்விரு தேசிய இனங்களின் 'போராளிகள்' தாக்குதல் தொடுப்பதும், அதற்கெதிராக ஜார்ஜியா எதிர்த்தாக்குதல் நடத்துவதும் தொடர்ந்த நிலையில், பதற்றத்தைத் தணிப்பது என்ற பெயரில் ரஷ்யா மற்றும் ஜார்ஜிய நாடுகளின் 'அமைதிப் படைகள்' இப்பிராந்தியங்களில் நிறுத்தப்பட்டு கண்காணித்து வந்தன.

இந்நிலையில், சீனாவில் ஒலிம்பிக் போட்டிகள் தொடங்கவிருப்பதையொட்டி உலகின் கவனம் திரும்பியிருந்த நிலையில், ஜார்ஜியப் படைகள் தெற்கு ஒசெட்டியா மீது போர்த் தாக்குதலை நடத்தின. ரஷ்ய 'அமைதிப் படைகள்' மீதே ஜார்ஜியப் படைகள் தாக்குதலை நடத்தி பல சிப்பாய்களைக் கொன்றதும், ரஷ்ய வல்லரசு தனது பீரங்கிப் படைகளைக் குவித்து எதிர்த்தாக்குதலை நடத்தியது. ரஷ்யப் போர் விமானங்கள் ஜார்ஜியாவின் தலைநகர் திபில்சி மட்டுமின்றி, பல முக்கிய நகரங்கள் - துறைமுகங்கள் மீதும் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியது.

ஜார்ஜியாவோ அமெரிக்க விசுவாச நாடு. அமெரிக்க ராணுவத்திடம் சிறப்புப் பயிற்சியும் ஆயுத உதவியும் பெற்றுள்ள ராணுவத்தைக் கொண்டுள்ள நாடு. ஜார்ஜிய ராணுவம்,






படிப்பகம்

www.padippakam.com

அமெரிக்கப் படைகளோடு இணைந்து ஈராக்கை ஆக்கிரமித்து நிலை கொண்டுள்ளது. அமெரிக்கத்தலைமையிலான ஏகாதிபத்தியங்களின் ராணுவக் கூட்டணியில் (நேட்டோ) இணைய ஜார்ஜியா விண்ணப்பித்துள்ளது. அமெரிக்க ஏவுகணைத் தளங்களும் ராணுவத் தளங்களும் ஜார்ஜியாவில் நிறுவப் பட்டுள்ளன.



தெற்கு ஒசெட்டியா மீது ஆக்கிரமிப்புப் போர் தொடுக்கும் ஜார்ஜியப் படைகள்.

மேலும், பாரசீக வளைகுடாவை இணைக்கும் முக்கிய போக்குவரத்துப் பாதையில் ஜார்ஜியா அமைந்துள்ளதால், தனது உலக மேலாதிக்க போர்த்தந்திர முக்கியத்துவம் கருதி அமெரிக்க வல்லரசு ஜார்ஜியாவைத் தனது செல்லப் பிள்ளையாகக் கருதுகிறது. அமெரிக்க சார்பு முதலாளித்துவவாதியாக இருந்த போதிலும், அதிபர் ஷெவர் நாட்சே-யை 2003-இல் ஆட்சிக் கவிழ்ப்பு மூலம் அகற்றிவிட்டு, அமெரிக்க விசுவாச கைக்கூலி சாகாஷ்வில்லி-யை புதிய அதிபராக்கியதன் மூலம் ஜார்ஜியாவைத் தனது பொம்மை அரசாகவே இயக்கி வருகிறது, அமெரிக்க வல்லரசு. எனவே, அதன் கண்ணசைவு இல்லாமல் ஜார்ஜியா இப்போர்த் தாக்குதலை நடத்தியிருக்கவே முடியாது.

ஜார்ஜிய ராணுவத்தின் எண்ணிக்கை 26,900 பேர்கள் தான். ரஷ்ய ராணுவமோ அதைவிட 25 மடங்கு பெரியது. ஜார்ஜியாவிடமுள்ள ராணுவக் கவச வண்டிகள், போர்விமானங்களை ஒப்பிட்டால் ரஷ்ய வல்லரசு அதைவிட 100 மடங்கு வலுவானது. ரஷ்ய வல்லரசுடன் ஜார்ஜியா மோதினால் அதனை மூட்டைப் பூச்சியைப் போல ரஷ்யா நசுக்கி விடும் என்பது ஜார்ஜியாவுக்குத் தெரியும். எனினும், தெற்கு ஒசெட்டியா மீதும் ரஷ்ய 'அமைதிப் படைகள்' மீதும் ஜார்ஜியா போர்த்தாக்குதலை நடத்தி வம்பிழுக்கக் காரணம் என்ன?

பின்னிலைக்குத் தள்ளப்பட்ட போதிலும் இன்னமும் இராணுவ வலிமை மிக்க ரஷ்ய வல்லரசை ஆத்திரமூட்டி போருக்கு இழுப்பது; போரைக் காரணம் காட்டி பொருளாதார நிர்பந்தங்கள் கொடுத்து முடக்க முயற்சிப்பது; முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகளின் மீதான ரஷ்ய வல்லரசின் பொருளாதார - வர்த்தக மேலாதிக்கத்தைத் தகர்ப்பது; ரஷ்யா எத்தகைய அரசியல் - ராணுவ உத்திகளை மேற்கொள்ளும் என்பதை அறிவதற்கான வெள்ளோட்டமாக இப்போரை நடத்தி சோதிப்பது - என தனது உலக மேலாதிக்க போர்த்தந்திர திட்டத்திற்கேற்பவே ஜார்ஜியாவை ஏவிவிட்டு அமெரிக்க வல்லரசு இப்போரை நடத்தியுள்ளது.

ஏற்கெனவே 1998-இல் ரஷ்ய வல்லரசை ஒட்டியுள்ள பால்டிக் நாடுகள் முதல் போலந்து, செக்கோஸ்லாவியா, ஹங்கேரி ஆகிய நாடுகள் அமெரிக்காவின் ராணுவக் கூட்டணி நாடுகளாக மாற்றப்பட்டன. 1999-இல் ஜார்ஜியா வழியாக பாரசீக வளைகுடாவை இணைக்கும் எண்ணெய் - எரிவாயு குழாய்களைப் பதித்து அமெரிக்கா தனது மேலாதிக்கத்தை நிறுவியது. 2002-இல் ரஷ்யாவை ஒட்டியுள்ள உஸ்பெகிஸ்தான், கிர்கிஸ்தான் ஆகிய நாடுகளில் அமெரிக்க இராணுவத் தளங்கள் நிறுவப்பட்டன. 2004-இல் ரஷ்யாவை அடுத்துள்ள உக்ரைனில் ஆட்சிக் கவிழ்ப்பு நடத்தப்பட்டு அமெரிக்க விசுவாச ஆட்சி நிறுவப்பட்டது. இவ்வாறு ரஷ்ய வல்லரசைச் சுற்றிலும் பல நாடுகளில் அமெரிக்க தளங்கள் நிறுவப் பட்டுள்ளன. இதுதவிர துருக்கி, இஸ்ரேல், ஆப்கான், இந்தியா ஆகிய கூட்டாளி நாடுகளின் துணையோடு ரஷ்ய வல்லரசை அமெரிக்கா சுற்றி வளைக்க முடியும். அதற்கான ஒத்திகையாகவே அமெரிக்கா இப்போரை நடத்தியுள்ளது. எனவே தான், ''இனிமேல் இது ஜார்ஜியா விவகாரமல்ல; மாறாக, அமெரிக்க நலன்கள் பற்றிய விவகாரம்'' என்று கூறியுள்ளார், ஜார்ஜியாவின் அமெரிக்க விசுவாச அதிபர் சாகஷ்வில்லி.

அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்களும் ஐ.நா. மன்றமும் இப்போரை உடனடியாக நிறுத்த வேண்டுமென்று பெருங்கூச்சலிட்டனவே தவிர, ஜார்ஜியா மீது எந்தக் கட்டுப்பாடும் விதிக்க முன்வரவில்லை. ஐரோப்பாவில் முன்னாள் யுகோஸ்லாவியா நாடு சிதறி பல தேசிய இன நாடுகளாகப் பிளவுபட்டபோது, செர்பிய நாடு தனது ஆதிபத்திய உரிமை என்ற பெயரில் கொசாவோ பிராந்தியத்தை வலுக்கட்டாயமாக இணைத்துக் கொண்ட போது, அமெரிக்க தலைமையிலான ஏகாதிபத்தியங்கள் இதனை ''ஆக்கிரமிப்பு'' என்று சாடின. அமெரிக்கா ராணுவக் கூட்டணி (நேட்டோ) நாடுகளின் படைகள் 1999-இல் செர்பியா மீது பத்து வார காலத்துக்குப் போர் தொடுத்து அந்நாட்டை மீண்டெழ முடியாதபடி நாசமாக்கின. ஆனால், செர்பியாவைப் போலவே இன்று ஜார்ஜியா, தெற்கு ஒசெட்டியாவை வலுக்கட்டாயமாக இணைத்துக் கொண்டுள்ளதை அவை வெட்கமின்றி நியாயப் படுத்துகின்றன. இது ஜார்ஜியாவின் தேசிய ஒருமைப்பாடு பற்றிய பிரச்சினை என்று நழுவிக் கொள்கின்றன. தெற்கு


படிப்பகம்

www.padippakam.com

ஒசெட்டியாவிலிருந்து ரஷ்யப் படைகள் வெளியேற வேண்டுமென கூச்சலிடும் அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்கள், ஜார்ஜியப் படைகளும் வெளியேற வேண்டுமெனக் கோரவோ, தெற்கு ஒசெட்டியாவுக்கு சுயாட்சி உரிமை வழங்கக் கோரவோ முன்வரவில்லை

தெற்கு ஒசெட்டியர்களுக்கு குடியுரிமையும் பாஸ்போர்ட்டும் வழங்கியுள்ள ரஷ்ய வல்லரசும் அச்சிறுபான்மை தேசிய இனத்துக்கு சுயாட்சி உரிமை வழங்கக் கோரவில்லை. சிறுபான்மை தேசிய இனங்களைப் பாதுகாப்பது என்ற முகமூடியுடன் அவற்றை ரஷ்யாவுடன் இணைத்துக் கொள்வதிலேயே குறியாக இருக்கிறது. கடைசியில், ரஷ்யா மற்றும் அமெரிக்க ஏகாதிபத்தியங்களின் போர்த்தந்திர சதுரங்கப் பகடைக் காயாக தெற்கு ஒசெட்டியா மாற்றப்பட்டு விட்டது. அவற்றின் போர்த்தந்திர - மேலாதிக்க நோக்கங்களுக்கேற்ப மீண்டும் போர் மூளவோ, தணியவோ செய்யலாம் என்பது நிரந்தர விதியாகி விட்டது.

1991-இல் சோவியத் ஒன்றியம் சிதறி, பல்வேறு தேசிய இனங்கள் தனித்தனி நாடுகளாகப் பிரிந்தபோது, தேசிய இன விடுதலையே உலகின் முதன்மையான போக்காக மாறிவிட்டது என்று முதலாளித்துவ இனவாதிகள் ஆரவாரம் செய்தனர். ஆனால் அது ஏகாதிபத்தியவாதிகளால் ஊதிப் பெருக்கப்பட்ட கட்டுக்கதை என்பதை வரலாறு நிரூபித்துக் காட்டி விட்டது. தனித்தனி நாடுகளாகப் பிரிந்த ரஷ்ய தேசிய இனங்கள், ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நின்று சுயசார்புடன் தேசியப் பொருளாதாரத்தைக் கட்டியமைக்கவோ, சொந்த மக்களிடம் ஜனநாயகத்தை நிலைநாட்டவோ முன்வரவில்லை. அமெரிக்கக் கூட்டணி நாடுகளாகவும், விசுவாச அடியாள் நாடுகளாகவும், பாசிச ஆளும் கும்பலைக் கொண்ட நாடுகளாகவும் அவை சீரழிந்தன. தேசிய இன விடுதலை என்ற முகமூடியுடன் அமெரிக்கா தலைமையிலான மேற்கத்திய ஏகாதிபத்தியங்கள் இந்நாடுகளில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொண்டதுதான் நடந்தேறியுள்ளது. நேற்றைய கொசாவோ போர் மட்டுமல்ல; இன்றைய தெற்கு ஒசெட்டியா போரும் இந்த உண்மையை மீண்டும் மெய்ப்பித்துக் காட்டிவிட்டது.

● குமார்

## கேரளா:

# சனாதனிகள் - பாதிரிகள் - முசுலீம் மதவெறியர்களின் புனிதக் கூட்டு!

கடந்த ஜூன் மாதத்தில் பள்ளிக் கூடங்கள் திறக்கப்பட்டதிலிருந்து கேரள மாநிலமெங்கும் கிறித்தவர்களும் முஸ்லீம்களும் சாதி இந்துக்களும் ஓரணியில் திரண்டு போராட்டத்தில் குதித்துள்ளனர். எதிர்க்கட்சியான காங்கிரசும் அதன் கூட்டணிக் கட்சிகளும் அவர்களது போராட்டத்தை ஆதரித்தும், இடதுசாரி கூட்டணி ஆட்சியை எதிர்த்தும் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளன. காங்கிரசின் மாணவர் சங்கங்கள் வகுப்புகளைப் புறக்கணித்துவிட்டு 7-ஆம் வகுப்பு சமூக அறிவியல் பாடப் புத்தகங்களை தெருவிலே போட்டுக் கொளுத்தி வருவதோடு, பொதுச் சொத்துக்களையும் நாசப்படுத்துகின்றன. தனியார் பள்ளிக் கட்டணக் கொள்ளைக்கு எதிராகவோ, அரசின் கல்விக் கட்டண உயர்வுக்கு எதிராகவோ அவர்கள் இந்தப் போராட்டத்தை நடத்தவில்லை. பின், எதற்காக இந்தப் போராட்டம்?

"இளைய தலைமுறையினரின் சிந்தனையை நஞ்சாக்கும் 7-ஆம் வகுப்பு (ஆங்கில வழி) சமூக அறிவியல் பாடநூலை ரத்து செய்!" என்பதே அவர்களது போராட்டத்தின் மைய முழக்கம். வகுப்புகள் புறக்கணிப்பு, 7-ஆம் வகுப்பு சமூக அறிவியல் பாடப் புத்தகங்கள் கட்டுகட்டாக பறிக்கப்பட்டு தீயிட்டு எரிப்பு, சாலை மறியல், பேருந்துகள் மீது கல்வீச்சு, கண்டனப் பேரணி - என கேரளத்தின் பல பகுதிகளில் போராட்டங்கள் தொடர்கின்றன. காங்கிரசு ஆதரவு ஆசிரியர் சங்கங்கள் இப்பாடப்புத்தகப்படி நாங்கள் பாடம் நடத்த மாட்டோம் என்று அரசுக்கு எச்சரிக்கை விடுத்தன. ஜூலை மாதத்திற்குள் இப்பாடபுத்தகத்தை ரத்து செய்யாவிட்டால் மாநிலம் தழுவிய கிளர்ச்சி செய்யப் போவதாக முஸ்லிம் லீகும் 12 முஸ்லிம் அமைப்புகளும் அரசுக்குக் கெடு விதித்தன. கேரள அரசியலில் மிகப் பெரிய சர்ச்சையை உருவாக்கியுள்ள 7-ஆம் வகுப்பு (ஆங்கில வழி) சமூக அறிவியல் பாட நூலில் அப்படி என்னதான் ஆட்சேபகரமாக இருக்கிறது?

''ஜீவனுக்கு எந்த மதமுமில்லை'' என்ற தலைப்பிலான பாடம் இதோ:

''ஜீவனைப் பள்ளியில் சேர்ப்பதற்காக அவனது பெற்றோர்கள் அழைத்து வருகின்றனர். அப்பெற்றோர்கள் இருக்கையில் அமர, தலைமையாசிரியர் விண்ணப்பத்தை நிரப்பத் தொடங்குகிறார்.

'உங்கள் மகனின் பெயர் என்ன?'

'ஜீவன்'

'நல்ல பெயர்; தந்தையின் பெயர் என்ன?'

'அன்வர் ரஷீத்'

'தாயார் பெயர்?'

'இலட்சுமி தேவி'

தலைமையாசிரியர் தலையை உயர்த்தி பெற்றோரைப் பார்த்துவிட்டு மீண்டும் கேட்கிறார்.

கேரளாவில் ஏழாம் வகுப்பு மாணவர்களுக்கான "ஜீவனுக்கு மதமில்லை" என்ற பாடம்.





படிப்பகம்

www.padippakam.com

'இச்சிறுவன் எந்த மதத்தைச் சேர்ந்தவன்? அதை நான் குறிப்பிட்டாக வேண்டுமே!'


'அவ்வாறு குறிப்பிட வேண்டிய அவசியமில்லை. நாங்கள் எந்த மதத்தையும் சாராதவர்கள் என்றே குறிப்பிடுங்கள்.'

'சாதி?'

'அதையும் குறிப்பிட வேண்டிய அவசியமில்லை. நாங்கள் எந்தச் சாதியையும் சேர்ந்தவர்களில்லை.'

தலைமையாசிரியர் நாற்காலியில் சாய்ந்தபடி காட்டமாகக் கேட்கிறார்.

'உங்கள் மகன் பெரியவனாக வளர்ந்த பிறகு, ஒரு குறிப்பிட்ட மதத்தைச் சார்ந்தவனாக இருக்க வேண்டும் என்று உணர்ந்தால் என்ன செய்வது?'



கேரளாவின் மலப்புரத்தில் ஏழாம் வகுப்புப் பாட புத்தகங்களைத் தூக்கி எறிந்து வெறியாட்டம் போடும் முசுலீம் மாணவர் இயக்கம்.

'அப்படி அவன் உணர்கிறபோது எந்த மதத்தைத் தெரிவு செய்ய விரும்புகிறானோ அம்மதத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளட்டும்.'

- இதுதான் அந்தப் பாடப்பகுதி. இது, இளைய தலைமுறையினரின் சிந்தனையை நஞ்சாக்கி விடுமாம். மக்களின் மத உணர்வுகளைப் புண்படுத்தி விட்டதாம். நாத்திகக் கண்ணோட்டத்தில், கம்யூனிசசித்தாந்தத்தைத் திணிக்கிறதாம். சமூக அமைதியைச் சீர்குலைத்து பிளவையும் வெறுப்பையும் குழந்தைகளின் நெஞ்சில் ஊட்டுகிறதாம். பெற்றோரின் நல்லொழுக்கத்தையும் அறவியலையும் சீர்குலைக்கிறதாம். குழந்தைகளைத் தறுதலைத்தனமாக வளர்க்கத் தூண்டுகிறதாம். எனவேதான் சாதி-மத வேறுபாடுகளைக் கடந்து முஸ்லிம்களும் கிறித்தவர்களும் சாதி இந்துக்களும் ஓரணியில் திரண்டு போராடுகிறார்களாம்.

இப்பாடப் பகுதி, ஏதோ ஆளும் 'இடதுசாரி' கூட்டணி தன்னிச்சையாகவும் தான்தோன்றித்தனமாகவும் உருவாக்கித் திணித்ததைப் போல மதவாத அமைப்புகள் குற்றம் சாட்டுகின்றன. ஆனால் இப்பாடப் பகுதியானது, கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான தேசியக் குழு (NCERT) தயாரித்துள்ள பாடத்திட்டத்தின் அடிப்படையில் கேரள அரசின் பாடத்திட்டக் குழுவால் உருவாக்கப்பட்டுள்ளது. இது குறித்து கேரள மாநில அரசும் கல்விமைச்சரும் விரிவாக விளக்கமளித்த போதிலும், பிற்போக்குவாதிகள் அதனை ஏற்கவில்லை. கேரளத்தின் வலுமிக்க இந்து சாதிய நிறுவனமான நாயர் சொசைட்டி, மற்றும் கிறித்துவ, இஸ்லாமிய நிறுவனங்களே பெரும்பாலான கல்விக் கூடங்களை கையில் வைத்திருப்பதால், அவை போராட்டத்தைத் தீவிரப்படுத்துகின்றன. நாடாளுமன்றத் தேர்தல் நெருங்குவதால், காங்கிரசு கூட்டணிக் கட்சிகள் இதனை தெருப்போராகத் தீவிரப்படுத்தி அரசியல் ஆதாயமடையத் துடிக்கின்றன.

ஏற்கெனவே ஆட்சி செய்த இந்து வெறி பாரதிய ஜனதா அரசு, வரலாற்றைத் திருத்தி எழுதி கல்வியைக் காவிமயமாக்கும் முயற்சியில் இறங்கி அதில் ஓரளவு வெற்றியும் பெற்றது. இன்றும் கூட நாடெங்கும் இந்துவெறி அமைப்புகள் நடத்திவரும் பள்ளிகளில் இந்துத்துவ கல்வி போதனையே தொடர்கிறது. அவையெல்லாம் பிஞ்சு மனங்களை நஞ்சாக்கும் செயலாக கிறித்துவ, இஸ்லாமிய அமைப்புகளுக்குத் தெரியவில்லை. சாதி-மத மற்றவராக குழந்தைகளைப் பள்ளியில் சேர்ப்பதுதான் அபாயகரமானதாம்!

இப்பாடப்பகுதியில் உள்ள கருத்துக்கள் மத நம்பிக்கைக்கு எதிரானதாக இல்லை. மதத்தையோ மத நம்பிக்கைகளையோ சாடவுமில்லை. ஆனால், இப்பாடப் பகுதியில், எந்த மதத்தையும் சாதியையும் சாராதவர் என்று குறிப்பிடுவதே மத நம்பிக்கைக்கு எதிரானது என்று குதிக்கிறார்கள் பிற்போக்கு சாதி-மதவாதிகள். இப்பிற்போக்குக் கும்பல்களின் போராட்டங்களைக் கண்டு அரண்டு போயுள்ள ஆளும் 'இடதுசாரிகள்', அரசு சார்பில் விளக்கம் - கலந்தாலோசனை கூட்டம், உயர்மட்டக் கல்வியாளர் குழுவை அமைத்து பரிசீலிப்பது என அரசு ரீதியான நடவடிக்கைகளை அறிவித்து சாந்தப்படுத்த முயற்சிக்கிறதே தவிர, மதச்சார்பற்ற - ஜனநாயக சக்திகளைத் திரட்டி மக்களிடம் பிரச்சாரத்தை மேற்கொண்டு பிற்போக்கு சாதி-மத சக்திகளைத் தனிமைப்படுத்த முன்வரவில்லை.

மதச் சுதந்திரம் என்பது, ஒரு மதத்தைத் தெரிவு செய்யும் உரிமை மட்டுமல்ல; மதத்தை மறுக்கும் உரிமையும் தான். ஆத்திகனாகவோ, நாத்திகனாகவோ வாழும் உரிமையும் மத உரிமை தான். இந்தக் கருத்துக்களே இப்பாடப் பகுதியில் சொல்லப்பட்டுள்ளது. ஒரு சமூகத்தில் வாழும் மனிதன் ஒரு மதத்தை, ஒரு சாதியைச் சேர்ந்தவனாகத்தான் இருக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்த முடியாது. அவ்வாறு செய்வது மனித உரிமைகளை மறுக்கும் மிகப் பெரிய வன்கொடுமை.

படித்தவர்கள் நிறைந்த மாநிலமாக நாட்டிலேயே முதலிடம் வகிக்கும் கேரளம், பிற்போக்கு சாதி-மத சக்திகளை அம்பலப்படுத்தி தனிமைப்படுத்தாவிட்டால், அது இருண்ட காலத்திற்குள் தள்ளப்படுவதை யாராலும் தடுக்க முடியாது.

● மனோகரன்



படிப்பகம்

www.padippakam.com

## ஆந்த்ராக்ஸ் பீதி:

# அமெரிக்காவே குற்றவாளி!

**ஆந்த்ராக்ஸ் தாக்குதலுக்கு முசுலீம் தீவிரவாதிகள்தான் காரணம் என்ற அமெரிக்காவின் குற்றச்சாட்டு பச்சைப் பொய்.**

அமெரிக்காவின் நியூயார்க் நகரில் இருந்த உலக வர்த்தக மையக் கட்டிடங்கள் தகர்க்கப்பட்டதையடுத்த சில தினங்களில், "ஆந்த்ராக்ஸ்" என்ற நச்சுக் கிருமியின் உயிர் அணுக்கள் தடவப்பட்ட கடிதங்கள், சில அமெரிக்க பத்திரிக்கை நிறுவனங்கள், ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த செனட்டர்களைக் குறி வைத்து அனுப்பப்பட்டன. மர்மமான முறையில் நடந்த புதிய வகையான இத்தாக்குதலில் ஐந்து அமெரிக்கர்கள் கொல்லப்பட்டனர்.

தீவிரவாதிகளிடம் அணு ஆயுதம் இருப்பதாகக் கூறிவந்த அமெரிக்கக் கூலிப் பிரச்சாரக் கும்பல், ஆந்த்ராக்ஸ் தாக்குதல் தீவிரவாதிகள் தொடங்கியிருக்கும் உயிரியல் யுத்தம் எனப் பீதியூட்டின. ஈராக் மீது ஓர் ஆக்கிரமிப்புப் போரைத் தொடுக்க வேண்டும் எனத் திட்டம் போட்டுக் காத்திருந்த அமெரிக்க ஆளும் கும்பல், அமெரிக்க மக்களை மூளைச் சலவை செய்ய ஆந்த்ராக்ஸ் தாக்குதலையும் பயன்படுத்திக் கொண்டது.

ஆந்த்ராக்ஸ் கிருமி தடவப்பட்ட கடிதம் யார் வீட்டுக்கு வருமோ என்ற பீதி ஒருபுறமிருக்க, அமெரிக்க உளவு அமைப்பான "எஃப்.பி.ஐ." யார் வீட்டுக் கதவைத் தட்டுமோ என்ற அச்சத்திலும் அமெரிக்க மக்கள் நடுங்கிக் கொண்டிருந்தார்கள். ஏனென்றால், எஃப்.பி.ஐ., வெள்ளைத் தோல் அல்லாத அந்நியர்களை மட்டுமல்ல, அமெரிக்க விஞ்ஞானிகளைக் கூட விட்டு வைக்காமல், விசாரணை நடத்தியது. உயிரியல் விஞ்ஞானிகள் அனைவரும் சந்தேகப் பட்டியலில் சேர்க்கப்பட்டனர்.


விசாரணை என்ற பெயரில் எஃப்.பி.ஐ. நடத்திய சித்திரவதை, அவமானப்படுத்தல்களைத் தாங்கிக் கொள்ள முடியாத பல பாகிஸ்தானியர்கள், மூட்டை முடிச்சைக் கட்டிக் கொண்டு அமெரிக்காவைவிட்டு வெளியேறிப் போனார்கள். ஒரு மருத்துவரின் திருமணம் எஃப்.பி.ஐ. விசாரணையால் தடைப்பட்டுப் போனது; அவரின் தொழிலும் முடங்கிப் போனது. ஒரு நுண் உயிரியல் விஞ்ஞானி விசாரணையின் கடுமையைத் தாங்கிக் கொள்ள முடியாமல், குடிக்கு அடிமையாகி, அதனாலேயே மாண்டு போனார்.

அமெரிக்க இராணுவ மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தில் பணியாற்றி வந்த ஸ்டீவன் ஜே.ஹாட்ஃபில் மற்றும் புருஸ் எட்வர்ட்ஸ் இவின்ஸ் என்ற இரு நுண்ணுயிரியல் ஆராய்ச்சியாளர்கள் முக்கியமான குற்றவாளிகளாகச் சித்தரிக்கப்பட்டனர். எனினும், ஹாட்ஃபில் மீதான சந்தேகமும், குற்றச்சாட்டுக்களும் நிரூபிக்கப்படாமல் போகவே, அவருக்கு அமெரிக்க அரசு 46 இலட்சம் அமெரிக்க டாலர் நட்ட ஈடாக கொடுத்தது.

கடித உறைகளில் தடவப்பட்டிருந்த ஆந்த்ராக்ஸ் கிருமியின் மரபணு வடிவமைப்பும்; இவின்ஸின் ஆய்வுக் கூடத்தில் இருந்த ஆந்த்ராக்ஸ் கிருமிகளின் மரபணு வடிவமைப்பும் ஒரே மாதிரியாக இருந்ததை ஆதாரமாகக் காட்டித்தான், எஃப்.பி.ஐ., இவின்ஸைக் குற்றவாளியெனக் கூறியது. இவின்ஸ், எஃப்.பி.ஐ.யால் கைது செய்யப்படுவதற்கு முதல் நாளே தற்கொலை செய்து கொண்டு மாண்டு போனார்.

அதேசமயம் இவின்ஸோடு வேலை பார்த்துவந்த சகோதர விஞ்ஞானிகளோ, "இவின்ஸைக் கைது செய்ய ஒரே மாதிரியாகத் தெரிந்த மரபணு வடிவமைப்புதான் ஆதாரமென்றால், அமெரிக்காவிலுள்ள பெரும்பாலான நுண்ணுயிர் ஆராய்ச்சியாளர்களையும் குற்றவாளிகளின் பட்டியலில் சேர்க்க வேண்டியிருக்கும். ஏனென்றால், இவின்ஸின் ஆய்வ

**எஃப்.பி.ஐ.யின் சந்தேகப்பட்டியலில் இருந்த அமெரிக்காவின் நுண்ணுயிரியல் ஆராய்ச்சியாளர் புருஸ் எட்வர்ட்ஸ் இவின்ஸ்.**






படிப்பகம்

www.padippakam.com

கத்தில் மட்டுமின்றி, வேறு சில ஆய்வகங்களிலும், விஞ்ஞானிகளிடம் கூட கடித உறையில் தடவப்பட்டிருக்கும் ஆந்த்ராக்ஸை ஒத்த ஆந்தராக்ஸ் கிருமிகள் இருக்கின்றன'' எனக் கூறி, இவின்ஸின் மீதான எஃப்.பி.ஐ.யின் குற்றச் சாட்டை மறுத்தார்கள்.

மேலும், ''இவின்ஸ்தான் எஃப்.பி.ஐ.க்காகக் கடித உறைகளில் தடவப்பட்டிருந்த ஆந்த்ராக்ஸ் கிருமிகளை ஆய்வு செய்து, அதன் கொடிய நச்சுத்தன்மை பற்றி அமெரிக்க அரசுக்குத் தெரிவித்தார். அந்த ஆய்வின் மூலமாகக் கூட, கடித உறையில் காணப்பட்ட ஆந்த்ராக்ஸ் கிருமிகள் அவரின் ஆய்வுக் கூடத்துக்குப் பரவியிருக்கலாம்'' என்றும் இவின்ஸுக்கு ஆதரவாகப் பல விஞ்ஞானிகள் கருத்துக்களைத் தெரிவித்தார்கள்.

இவின்ஸ் குற்றவாளியா, இல்லையா என்பது குறித்து எஃபி.பி.ஐ.க்கும், விஞ்ஞானிகளுக்கும் இடையே வாதப் பிரதிவாதங்கள் நடந்து வந்த நிலையில், அமெரிக்காவைச் சேர்ந்த 16 உயிரியல் பாதுகாப்பு விஞ்ஞானிகளும், நிபுணர்களும், ''கடித உறையில் தடவப்பட்டிருக்கும் ஆந்த்ராக்ஸ் உயிரணுக்கள் சாதாரண ரகத்தைச் சேர்ந்தவை அல்ல; அக்கிருமிகள் ஆயுத வகையைச் சேர்ந்தவை'' என அமெரிக்க மருத்துவக் குழு இதழில் அம்பலப்படுத்தி எழுதினார்கள்.

எஃபி.பி.ஐ. விசாரணைக்குப் பயந்து தற்கொலை செய்து கொண்ட இவின்ஸும், ''அமெரிக்காவின் ஆயுத ஆராய்ச்சி நிறுவனமான ஃபோர்ட் டெட்ரிக்கில்கூட இந்த ரக ஆந்த்ராக்ஸ் கிருமிகள் கிடையாது'' என்ற கருத்தைத் தெரிவித்திருந்தார். மேலும், ஆந்த்ராக்ஸ் தாக்குதல் பற்றி நடந்த பல்வேறு ஆய்வுகளிலும், ''கடிதத்தில் தடவப்பட்டிருந்த ஆந்த்ராக்ஸ் கிருமிகளை அவ்வளவு எளிதாக யாரும் தயாரித்து விட முடியாது. நவீன வசதிகளைக் கொண்ட உயிரியல் ஆயுதங்களைத் தயாரிக்கும் ஆராய்ச்சிக் கூடங்களில் இருந்துதான் இந்தக் கிருமி வெளியேறியிருக்கக் கூடும்'' எனக் கருத்துக் கூறப்பட்டிருந்தது.

ஆனால், எஃப்.பி.ஐ.யின் விசாரணையோ, தனிநபர்களைக் குற்றஞ்சுமத்திக் கைது செய்வதில்தான் குறியாக இருந்தது. அமெரிக்க அரசியல்வாதிகளோ அல்-காய்தா மீது பழி போட்டு, முசுலீம் மத வெறுப்பைத் தூண்டிவிட்டுக் கொண்டிருந்தார்கள். அமெரிக்காவின் பிரதான ஆயுத ஆய்வுக் கூடமான ஃபோர்ட் டெட்ரிக்கில் இருந்து ஆந்த்ராக்ஸ், இபோலா உள்ளிட்டப் பல நச்சுக் கிருமிகளின் மாதிரிகள் காணாமல் போனது பற்றியோ, நுண்ணுயிர் பற்றி ''ஆய்வு'' நடத்தும் பன்னாட்டு நிறுவனங்களின் ஆய்வுக் கூடங்களையோ, எஃப்.பி.ஐ. தனது விசாரணை வட்டத்துக்குள் கொண்டு வர வேயில்லை. அதனால்தான் என்னவோ, இத்தாக்குதலை நடத்தியது யார் என்பது கண்டுபிடிக்கப்படாமல் இன்றும் ''மர்மமாகவே'' இருந்து வருகிறது. விசாரணை வேறு மாதிரி நடந்திருந்தால், ''எங்கப்பன் குதிருக்குள் இல்லை'' என்ற உண்மை ஒருவேளை அம்பலமாகியிருக்கலாம்.

இந்தத் தாக்குதலை நடத்திய குற்றவாளியை மும்முரமாகத் தேடிக் கண்டுபிடிப்பதைவிட, அமெரிக்க அரசு உயிரியல் ஆயுதங்களைத் தயாரித்துக் குவித்து வைத்துக் கொள்ள இந்தத் தாக்குதலை ஒரு சாக்காகப் பயன்படுத்திக் கொண்டது என்பதே உண்மை.

- 2001-க்கும் 2007-க்கும் இடைபட்ட ஆறு ஆண்டுகளில் அமெரிக்க அரசு உயிரியல் ஆயுதப் பாதுகாப்பு தொடர்பாகச் செலவழித்த தொகை 3,600 கோடி பில்லியன் டாலராக (1,44,000 கோடி ரூபாய்) அதிகரித்தது.

**தீவிரவாதிகளைக் கண்டு பயப்படுவதைவிட, நுண்ணுயிரியல் ஆய்வுக்கூடங்களில் நடைபெறும் விபத்துக்களை கண்டுதான் அமெரிக்க மக்கள் அச்சம் கொள்ள வேண்டியிருக்கும்.**

- நுண்ணுயிர் தொடர்பான ஆய்வுகளை நடத்துவதற்கு 20 நவீன ஆராய்ச்சிக் கூடங்கள் நிறுவப்பட்டன.
- தற்பொழுதுள்ள தடுப்பு மருந்துகளுக்கு கட்டுப்படாத நோய்களை உருவாக்கும் ஆந்த்ராக்ஸ் கிருமிகளை, மரபணு மாற்று முறையில் கண்டுபிடிக்கும் ஆய்வுக்கூடம் அமெரிக்காவின் நெவேதாவில் நிறுவப்பட்டது.
- உயிரியல் ஆயுதங்களைத் தயாரிப்பதைக் கட்டுப்படுத்துவது, கண்காணிப்பது தொடர்பாக சர்வதேச அளவில் ஒரு ஒப்பந்தத்தை உருவாக்க நடந்த முயற்சிகளை, அமெரிக்க அரசு இந்த ஆந்த்ராக்ஸ் தாக்குதலைக் காட்டிச் சீர்குலைத்தது.

மனித குலத்திற்குப் பேரழிவு ஏற்படுத்தக்கூடிய அமெரிக்க அரசின் இந்த ஆயுத வெறியை, அந்நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானிகளே ஏற்றுக் கொள்ள மறுத்து வருகின்றனர். அமெரிக்காவைச் சேர்ந்த 750 நுண்ணுயிர் ஆராய்ச்சியாளர்கள், அமெரிக்க அரசின் தேசிய சுகாதாரக் கழகத்திற்கு எழுதிய கடிதத்தில், ''உயிரியல் ஆயுதங்களைத் தயாரிக்கக் கோடி கோடியாகச் செலவழித்து வரும் அமெரிக்க அரசு, மக்களைத் தாக்கி நோய்களை உருவாக்கும் நுண்ணுயிர் பற்றிய ஆய்வைப் புறக்கணிப்பதன் மூலம், மக்களின் நலவாழ்வு, சுகாதாரத்தை அபாயகரமான நிலைக்குத் தள்ளி விடுவதாக''க் குற்றம் சுமத்தியுள்ளனர்.

ரிச்சர்ட் இபிரைட் உள்ளிட்ட பல விஞ்ஞானிகள், ''உயிரியல் ஆயுதங்களைத் தயாரிப்பது தொடர்பாக புதிது புதிதாக ஆய்வுக் கூடங்களைத் திறப்பதும்; அந்த ஆராய்ச்சியில் நூற்றுக்கணக்கான பேரை ஈடுபடுத்துவதும் அமெரிக்க மக்களுக்கு முழுமையான பாதுகாப்பைத் தந்து விடாது; தீவிரவாதிகளைக் கண்டு பயப்படுவதைவிட, இந்த ஆய்வுக் கூடங்களில் நடைபெற வாய்ப்புள்ள விபத்துக்களையும், அதை மூடி மறைக்க அரசு செய்யும் எத்தனிப்புகளையும் கண்டுதான் அமெரிக்க மக்கள் மிகவும் அச்சம் கொள்ள வேண்டியிருக்கும்'' என எச்சரித்துள்ளனர்.

இட்லரின் நாஜிக் கும்பல், ஜெர்மன் நாடாளுமன்றத்துக்குத் தாங்களே தீ வைத்துக் கொளுத்திவிட்டு அந்தப் பழியை கம்யூனிஸ்டுகள் மீது போட்டது. அதுபோல, இந்த ஆந்த்ராக்ஸ் தாக்குதலின் பின்னே அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சதிகூட மறைந்து கிடக்கலாம். போர் வெறியையும், ஆயுத வெறியையும் நியாயப்படுத்திக் கொள்ள, அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு ஒரு காரணம் வேண்டுமே!

***— இங்கிலாந்தில் உள்ள கேம்பிரிட்ஜில் இயங்கி வரும் ''பொறுப்புணர்வுமிக்க மரபியல் கவுன்சிலின்'' முன்னாள் தலைவர் திரு.சுஜாதா பைரவன், 13.08.08 ஹிந்து நாளிதழில் வெளியிட்டிருந்த ஆதாரங்களின் அடிப்படையில் இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.***


படிப்பகம்

www.padippakam.com

# பிணக்காடாகிறது ஈராக்

## அமெரிக்க ஆக்கிரமிப்பால் கொல்லப்பட்ட ஈராக்கியர்களின் எண்ணிக்கை பத்து இலட்சத்தைத் தாண்டிவிட்டது.

ஈராக் தலைநகர் பாக்தாத்தின் பன்னாட்டு விமானநிலையத்தில், கடந்த ஜூன் 25 அன்று பரபரப்பான காலை நேரத்தில் பொதுமக்கள் செல்லும் பாதையில் கார் ஒன்று அனைத்து விதமான பாதுகாப்புப் பரிசோதனைகளையும் முடித்து விட்டுச் செல்கிறது. அலுவலக வேலைகள் தொடங்க இன்னும் சற்று நேரமே இருக்கும் நிலையில், 8.40 மணிக்கு அமெரிக்க இராணுவ வண்டி ஒன்றில் இருந்து 9 வீரர்கள் அக்காரை நோக்கிச் சரமாரியாகச் சுடுகின்றனர். சிறிது நேரத்துக்கெல்லாம் அக்கார் தீப்பற்றி எரிந்து போகிறது.

அந்தக் காரில் இருந்தவர்கள் அனைவரும் பயங்கரவாதிகளா? இல்லை.

அதே விமான நிலையத்தில் இருக்கும் ரஷீத் வங்கியின் மேலாளர் ஹபீத் அபோத் மஹ்திதான் அக்காரை ஓட்டி வந்தவர். பெண் ஊழியர்கள் இருவரையும் வங்கிக்குத் தனது காரிலேயே அவர் அழைத்து வந்து கொண்டிருந்த போதுதான் இவ்வாறு கண்மூடித்தனமான துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. நூறு முறைக்கும் மேலே சுடப்பட்டு சல்லடையாக்கப்பட்ட காரின் எஞ்சின்தீப்பற்றி மூவருமே சாம்பலாகி விட்டனர்.

உடனே அமெரிக்க இராணுவம் ''மூன்று குற்றவாளிகள் அமெரிக்க வீரர்கள் மீது தாக்குதல் தொடுக்க முயன்றனர்; திருப்பச் சுட்டபோது கார் கட்டுப்பாட்டை இழந்து சுவற்றில் மோதி வெடித்ததில் மூன்று குற்றவாளிகளும் மாண்டனர்'' என அவசர அவசரமாக அறிக்கை ஒன்றை வெளியிட்டது. இராணுவ வண்டியில் இரண்டு இடங்களில் எதிரிகளின் துப்பாக்கிக் குண்டுகள் துளைத்திருப்பதாகவும் மேலும் அது கதையளந்துள்ளது.

மஹ்தியின் கார் குண்டுகளால் துளைக்கப்பட்ட செய்தி அறிந்ததும், அவரது ஆறாவது மகன் முகம்மது ஹபீத் அங்கு விரைந்திருக்கிறார். தன் கண் முன்னாலேயே தீப்பிழம்புகளுக்கு இரையாகிக் கொண்டிருந்த தனது தந்தையை நெருங்க விடாமல் அமெரிக்கப் படைவீரர்கள் அவரைத் தடுத்து விட்டனர். மஹ்தியின் ஆறு குழந்தைகளையும் அநாதைகளாக்கி விட்ட அமெரிக்க இராணுவமோ பத்தாயிரம் டாலரை இழப்பீடாக அக்குடும்பத்துக்கு வழங்க முன்வந்தது. அதை வாங்க மறுத்த அக்குடும்பத்தினர், ''இப்படுகொலையில் ஈடுபட்ட அமெரிக்க ஆக்கிரமிப்புப் படையினர் ஈராக்–அமெரிக்க நீதிமன்றங்களில் நிறுத்தப்பட்டு உரிய நீதி வழங்கப்பட வேண்டும்'' என்றனர்.

இவ்வெறிப்படையினர் ஈராக் பிரதமர் நூரி–அல்–மாலிக்கியின் உறவினர் ஒருவரைக் கூட ஜூன் மாத இறுதியில் இவ்வாறு கொன்றுள்ளனர். ஈராக்கின் வடக்கு சலாஹுதின் மாநில கவர்னரின் உறவினர் ஒருவரையும், 17 வயது இளைஞர் ஒருவரையும் எவ்விதக் காரணமின்றியும் ஜூலையில் கொன்றுள்ளனர். இவ்வாறு நடத்தப்பட்ட எந்தக் கொலைகளுக்கும் நீதி விசாரணைகள் கிடையாது.

இப்படுகொலைகள் ஈராக் முழுவதிலும் கொந்தளிப்பை உருவாக்கி விட்டது. ஐ.நா. சபை விதித்த காலக்கெடு முடிவடையவுள்ள நிலையில், ஈராக்கை விட்டு அமெரிக்கப்படை விரைவில் வெளியேற வேண்டும் எனும் குரல் நாடெங்கும் ஒலித்தது. அமெரிக்கப்படை சொன்ன பச்சைப் பொய்யை ஈராக்கில் இருக்கும் அமெரிக்கக் கைக்கூலி அரசின் இராணுவத் தலைமை கூட நம்பத் தயாராக இல்லை. விமான நிலையக் கார் படுகொலை, அப்பட்டமான பச்சைப் படுகொலைதான் என்று அந்நாட்டின் இராணுவத் தலைவரே சொல்லியிருக்கிறார்.

அமெரிக்கா ஈராக்கில் திணித்திருக்கும் ஜனநாயகத்தின் இலட்சணம்: அகதி வாழ்க்கை.





படிப்பகம்

www.padippakam.com

வேறு வழியின்றி விசாரணையை நடத்திய அமெரிக்க ஆக்கிரமிப்புப் படைத் தலைமை, ஒரு மாதம் கழித்து ''கொல்லப்பட்டவர்கள், அப்பாவிகள்'' என்றும் ''சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்'' என்றும் அறிவித்திருக்கிறது.


இன்னொரு நாட்டை ஆக்கிரமித்திருப்பதே கிரிமினல் குற்றம். அதிலும் அங்கிருக்கும் அப்பாவி குடிமக்கள் மீது காட்டுமிராண்டித்தனமாய்த் தாக்குதல் நடத்திக்கொண்டு இருப்பதை என்னவென்று சொல்வது?

இது ஏதோ ஒருமுறை பதற்றத்தில் நடந்து விட்டது என விட்டுவிட

# அமெரிக்க பயங்கரவாதத்தின் இரத்த சாட்சி!

பாகிஸ்தானின் கராச்சியை சேர்ந்த ஆஃபியா சித்திகி என்ற பெண் மருத்துவர், அமெரிக்காவின் மாசாசூட்ஸ் பல்கலைக்கழகத்தில் நரம்பியலில் மேற்படிப்புப் படித்தவர். மூன்று குழந்தைகளுக்குத் தாயான அவர் 2001-இல் இரட்டைக்கோபுரம் தகர்க்கப்பட்ட பிறகு, அமெரிக்காவில் முசுலிம்கள் நிம்மதியாய் வாழ முடியாத நிலை ஏற்பட்டதால் குடும்பத்துடன் கராச்சி திரும்பினார். தனது கணவர் தன்னை விவாகரத்து செய்ததால், வேலை தேட மீண்டும் அமெரிக்கா சென்று வேலை கிடைக்காமல் 2003-இல் நாடு திரும்பிய சித்திகி, அந்த ஆண்டே காணாமல் போய்விட்டார். 2004-இல் இருந்து சித்திகி, ஆப்கானிஸ்தானில் இருக்கும் அமெரிக்க சித்திரவதைக் கூடமான பக்ராம் விமானதளத்தில் அடைக்கப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்டு வருவதாக பிரிட்டன் பத்திரிக்கையாளர் ரிட்லீ அண்மையில் சொல்லி இருந்தார். கைதி எண் 650 எனும் பெயரில் அடைபட்டிருந்த சித்திகியை பக்ராம் சிறையில் இருக்கும் எவருமே கண்ணால் பார்க்கக்கூட அனுமதிக்கப்பட்டதில்லை. பெண் அழுகைக்குரல் ஒன்றால் மட்டுமே அவர் அக்கொட்டடியில் அடைபட்டிருந்தது பிற கைதிகளுக்குத் தெரிய வந்தது. பலமுறை அவர் அச்சிறையில் அமெரிக்க இராணுவத்தால் பாலியல் வன்முறைக்கு ஆளாகியுள்ளார். 2004-இல் அமெரிக்க உளவுத்துறையின் தேடப்படுவோர் பட்டியலில், அல்கொய்தாவிற்காக வைரம் கடத்தினார் என்று டாக்டர் சித்திகியின் பெயரும் இடம் பெற்றிருந்தது.

கிட்டத்தட்ட 5 ஆண்டுகளுக்கும் மேல் சித்திரவதைக் கொடுமை அனுபவித்த டாக்டர் சித்திகியை 2008 ஜூலை 17-இல் தான் ஆப்கன் போலீசார் கைது செய்ததாகக் கூறி நியூயார்க் நீதி மன்றத்தில் நிறுத்தினர். அவர் மீதான அல்கொய்தா தொடர்பேதும் குற்றப்பத்திரிக்கையில் இடம் பெறவில்லை. வைரம் கடத்திய கதைக்கும் ஆதாரம் காட்ட முடியவில்லை. மாறாக, ஆப்கானிஸ்தானில் சந்தேகப்படும்படியான வேதியல் திரவம் அடங்கிய பாட்டில், குண்டு தயாரிக்கும் செய்முறைப் புத்தகம் முதலானவற்றை வைத்திருந்ததாகக் கைது செய்ததாகவும், ஜூலை 18 அன்று கேட்பாரற்றுக் கிடந்த ரைபிள் ஒன்றை எடுத்து அமெரிக்க இராணுவ வீரர்களை நோக்கிச் சுட முயன்றதாகவும் அவர் குற்றம் சாட்டப்பட்டுள்ளார். 50 கிலோவுக்கும் குறைவான மெலிந்த உடம்பை வைத்துக்கொண்டு துப்பாக்கியைத் தூக்கிச் சுட முடியாது என்பது ஒருபுறமிருக்க, ஐந்து ஆண்டுகள் அவரை வெளி உலகே தெரியாமல் அடைத்து வைத்ததற்கும், கொட்டடியில் வைத்துப் பாலியல் வன்முறை செய்ததற்கும், சித்திகி செய்த குற்றம்தான் என்ன? முசுலீமாகப் பிறந்ததுதான் அவரின் ஒரே குற்றமா? அவர் கைதானபோது அவர் பொறுப்பிலிருந்த அவரது மூன்று குழந்தைகளின் கதி என்ன என்ற கேள்விக்கு அமெரிக்காவோ ஆப்கானிஸ்தானோ இதுவரை பதில் ஏதும் சொல்லவில்லை.



ஆஃபியா சித்திகி: கைது செய்யப்படுவதற்கு முன்னரும், (மேல்படம்); அதன் பின்னரும்.

''டாக்டர் சித்திகியை விடுதலை செய்!'' என்ற முழக்கத்துடன் கராச்சியில் மனித உரிமை அமைப்புகளும் பெண்கள் அமைப்புகளும் பெருமளவில் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன.

அமெரிக்க பயங்கரவாத கொடூரத்திற்கு இதைவிட வேறென்ன சாட்சியம் வேண்டும்?

ஆஃபியா சித்திகியை விடுதலை செய்யக் கோரி, பாகிஸ்தானில் மகளிர் அமைப்புகள் நடத்திய ஆர்ப்பாட்டம்.





படிப்பகம்

www.padippakam.com

முடியாது. 2003-இல் அமெரிக்கா அந்நாட்டின் மீது படை எடுத்ததில் இருந்தே இவ்வாறான படுகொலைகள் தொடர்ச்சியாக நடந்தவாறுதான் உள்ளன. சென்ற ஆண்டில்கூட பாக்தாத்தின் போக்குவரத்து நெரிசலான இடத்தில் அங்கிருந்த வாகனங்கள் மீது அமெரிக்க ஆக்கிரமிப்புப் படைகள் நூற்றுக்கும் மேற்பட்ட ரவுண்டுகள் சுட்டுப் பல பொதுமக்களைக் கொன்ற சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. பாக்தாத்தில் மட்டுமன்றி நாடு முழுக்க பொதுமக்கள் மீதும், ஆம்புலன்சு வண்டிகள், மருத்துவமனைகள் மீதும் சுட்டு, வெறிபிடித்த மிருகமாய் ஆக்கிரமிப்புப் படை நரவேட்டையாடி வருகிறது.

பிரிட்டனின் புள்ளிவிவர நிறுவனமான "ஓ.ஆர்.பீ", இதுவரை பத்து இலட்சம் ஈராக்கியருக்கும் மேல் கொல்லப்பட்டு விட்டதாக ஆதாரத்துடன் கூறியுள்ளது. ஈராக்கில் இருபது சதவீத குடும்பங்களில் யாராவது ஒருவர் கொல்லப்பட்டுள்ளனர். பாக்தாத்திலோ 40 சதவீதம் பேர் தங்கள் குடும்பத்தில் ஒருவரைப் பலி கொடுத்துள்ளனர். கொல்லப்பட்ட அத்தனை பேரும் போராளிகளோ அல்லது பயங்கரவாதிகளோ இல்லை. எல்லோருமே அப்பாவிப் பொதுமக்கள்.

இவ்வளவு கொடூரங்களும் எதற்காக? ஜனநாயகத்தை வழங்கவா, அல்லது உலகைக் காக்கவா? இல்லை. எண்ணெய் மேலாதிக்க வெறிக்காகத்தான் உலக நாகரிகத்தின் தொட்டிலான ஈராக்கில் கேள்விமுறையின்றி நாய்களை போல மக்களைக் கொல்கிறது, அமெரிக்கா.

குவாண்டனாமோ, அபு கிரைப் சித்திரவதைக் கூடங்களில் மனித உரிமைகளைக் காலில் போட்டு மிதித்து, பிடிபட்ட கைதிகளை வதைக்கும் அமெரிக்காதான், மிதக்கும் சிறைகளை உருவாக்கி உலகெங்கும் மனித குலத்துக்கு எதிரான கடுங்குற்றங்களைப் புரிந்து வருகிறது. ஈராக்கில் அது நிலைகொண்டிருக்கும் ஒவ்வொரு நாளும் அங்குள்ள மக்கள் படுகொலைக்குள்ளாகின்றனர்.

போர்க்குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட வேண்டிய பயங்கரவாத அமெரிக்காவுக்கு மனித உரிமை, ஜனநாயகம் பற்றிப் பேச ஏதாவது யோக்கியதை இருக்கிறதா?

• இரணியன்

# "அவர்களுக்கு நிலம் சொந்தமாய் இருந்தது!"

## - ஆந்திராவில், சி.பொ.மண்டலத்தால் நிலத்தை இழந்துவிட்ட தாழ்த்தப்பட்ட விவசாயிகளின் போராட்ட வாழ்வு.

அண்மையில் ஆந்திர மாநிலம் மெகபூப் நகர் மாவட்டத்தின் ஜட்செர்லா தொகுதிக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் 13 விவசாயிகள் சுயேச்சைகளாகக் களமிறங்கினர். அவர்கள் தேர்தலில் நின்றது சட்டசபைக்குச் செல்வதற்கு அல்ல. சிறப்புப் பொருளாதார மண்டலம் எனும் பேரால் தங்கள் நிலம் பறிக்கப்பட்டதை எதிர்த்துப் பிரச்சாரம் செய்யவே இத்தேர்தலில் நின்றனர். 8 ஆயிரத்துக்கும் மேல் வாக்குகளைப் பிரித்து இதற்கு முந்தைய தேர்தலில் வென்ற தெலுங்கானா ராஷ்டிர சமிதியை மூன்றாம் இடத்திற்குத் தள்ளியுள்ளனர்.

ஜட்செர்லா தொகுதியில் இருக்கும் போலபள்ளி, முதுரெட்டிபள்ளி ஆகிய இரண்டு ஊர்களில் கிட்டத்தட்ட 1,000 ஏக்கர் வரை மருந்து ஆலைகளுக்கான சிறப்புப் பொருளாதார மண்டலம் நிறுவ அரசே நிலத்தைக் கைப்பற்றி, அங்கிருந்த பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பழங்குடியினரின் வாழ்க்கையில் மண்ணை அள்ளிப்போட்டு விட்டது.

2003-ஆம் ஆண்டில் 'பசுமைப்பூங்கா' அமைப்பது என்ற பெயரில் நில அளவை ஆரம்பிக்கப்பட்டதும், அப்பகுதியில் உள்ள விவசாயிகள் திரண்டெழுந்து சாலைமறியல் செய்தனர். தலைநகர் வரை போராட்டத்தை எடுத்துச் சென்று சட்டசபை முன் ஆர்ப்பாட்டமும் நடத்தினர். 2005-ஆம் ஆண்டில், 'பசுமைப்பூங்கா' என்ற பெயரில் கையகப்படுத்தப்பட்ட நிலங்களில், ஐதராபாத்தைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வரும் அரோபந்தோ பார்மா எனும் மருந்துக் கம்பெனிக்கான சிறப்புப் பொருளாதார மண்டலம் தொடங்கப்பட்டது. தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி அமைந்திருக்கும் போலபள்ளி கிராம நிலத்தின் சந்தை மதிப்போ ரூ. 20 லட்சத்தும் மேல். ஆனால், இழப்பீடாக ஏக்கருக்கு வெறும் 18 ஆயிரம் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது. இதிலும் அதிகார வர்க்கம் மோசடி செய்து ஏய்த்தது போக, பாதிக்கும் குறைவான தொகைதான் பலருக்கு கிடைத்துள்ளது.

போலபள்ளியில் மட்டும் 300 குடும்பங்கள் அரோபந்தோ மருந்து ஆலைக்காக தாங்கள் குடியிருக்கும் வீட்டைத் தவிர, அனைத்து நிலங்களையும் இழந்து விட்டன. இக்குடும்பங்களில் யாராவது இறந்தால் புதைக்கக் கூட அவர்களுக்கு அங்கே இடமில்லை.

1966-ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 42 லட்சம் ஏக்கர் நிலங்களை நிலமில்லாத ஏழை மக்களுக்கு வழங்கி இருப்பதாக ஆந்திர அரசு சொல்லி வந்துள்ளது. இவ்வாறு வழங்கப்பட்ட நிலம் விற்கப்பட முடியாதது என்பதை மையமாகக் கொண்டு 1977-ஆம் ஆண்டு "சட்டவிதி 9"-ஐக் கொண்டு

பசுமை தொழில் பூங்காவிற்காகக் கையகப்படுத்தப்பட்டுள்ள நிலப்பகுதியும், அதனை அறிவிக்கும் விளம்பரப் பலகையும்.




படிப்பகம்

www.padippakam.com

வந்தது. தமிழ்நாட்டின் பஞ்சமி நிலங்களைப்போல ஆந்திர விவசாயிகளுக்கு இச்சட்டப்பாதுகாப்பு அமைந்திருந்தது.

ஆனால், வலக்கையால் கொடுத்து இடக்கையால் பிடுங்கிக் கொண்ட கதையாக, ''சட்டவிதி 9'' ஐயும் அவசரமாகத் திருத்தி, சிறப்பு பொருளாதார மண்டலங்களின் பெயரால் தடையின்றி நிலங்களை பறிக்க ஆளும் காங்கிரசு அரசு வகை செய்து விட்டது. இந்தத் திருத்தத்தின்படி அரசு வழங்கிய நிலங்களில் நெடுநாள் பயனின்றிக் கிடக்கும் நிலங்களையும், வேறொருவருக்குக் கைமாற்றப்பட்ட நிலங்களையும் வாங்கவும் விற்கவும் முடியும்.

இப்படித் தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மக்களுக்கு நிலங்கள் வழங்கி விட்டதாகப் பெருமை பேசிவந்த அரசே அந்நிலங்களைப் படுங்கவும் வழி செய்துள்ளது. போலபள்ளியில் நெல், கம்பு, மிளகாய், கொள்ளு ஆகிய பயிர்கள் எல்லாம் விளைந்து கொண்டிருந்த நிலங்களை பயனில்லாத நிலங்கள் என்று அரசு மோசடியாக அறிவித்துத்தான், நிலங்கள் சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்குக் கைமாற்றப்பட்டன.

நிலங்களை இழந்தவர்கள் அற்ப சொற்ப தொகையை மட்டுமே இழப்பீடாகப் பெற்றுள்ளனர். அவர்களுக்கு மாற்றிடமும் தரப்படவில்லை. இழப்பீட்டை அதிகமாக்கித் தர அவர்கள் கோரியபோது, ''கொடுக்கும் காசோலைகளை இப்போதே வாங்கினால் உண்டு. தாமதித்தால் இதுவும் கிடைக்காது'' என்று அச்சுறுத்தப்பட்டனர்.

பதினைந்து ஆண்டுகாலமாக, கிடைத்த நிலத்தை வைத்து ஏதோ வாழ்க்கைப்பாட்டை ஒப்பேற்றி வந்த தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர் இன்று நிலமற்ற கூலிகளாக வீதியில் வீசியெறியப்பட்டுள்ளனர்.

நேற்றுவரை தங்களுக்குச் சொந்தமாக இருந்த நிலத்தை இழந்து, இன்று அதே நிலத்தில் அவர்கள் சிறப்புப் பொருளாதார மண்டல திட்டப் பணிகளுக்காகக் கூலி வேலை செய்கின்றனர். கட்டுமானப் பணிகள் முடிந்த பிறகு அவர்களுக்கு அங்கு கூலி வேலை கிடைக்கவும் வாய்ப்பில்லை. சிறப்புப் பொருளாதார மண்டலத்தால் நிலங்களை இழந்தவர்களின் குடும்பங்களுக்கு வேலை கொடுக்கப்படும் என்ற உறுதிமொழிகூட இன்றுவரை பின்பற்றப்படவில்லை. 2005-க்குப் பின்னர் 41 பேர் வரை அக்குடும்பங்களில் இயற்கைக்கு மாறான மரணத்தைத் தழுவியுள்ளனர். இதுவரை மாரடைப்பென்றால் என்னவென்றே அறியாத அந்த உழைப்பாளிகள் மாரடைப்பாலும், நிலம் பறிக்கப்பட்டதைச் சகிக்க முடியாமல் தற்கொலை செய்தும் மாண்டுள்ளனர். அவர்களின் பிணங்களைப் புதைக்க ஆறடி நிலம் கூட அவர்களிடம் இல்லை.

''போலபள்ளி சிறப்புப் பொருளாதார மண்டல வியாதிரேகா அய்க்கிய சங்காதனா'' எனும் அமைப்பின் கீழ் ஒன்று சேர்ந்த நிலமிழந்த குடும்பங்கள்,



ஜட்செர்லா இடைத்தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிட்ட போலபள்ளி கிராம தாழ்த்தப்பட்ட விவசாயிகள்.

தங்கள் பிரச்சினையை இந்தியா வெங்கும் தெரிவிக்கத் தேர்தலும் ஒரு வழி என்று கருதினர். அவர்களில், தேர்தல் முன்தொகைப் பணம் (ரூ. 10 ஆயிரம்) கட்ட வாய்ப்பு வசதி கொண்ட 13 பேர்கள் மட்டும் வேட்புமனு தாக்கல் செய்து, நிலம் பறிக்கப்பட்ட விசயத்தையே தேர்தல் பிரச்சாரமாக்கினர்.

தேர்தல் முடிந்த பிறகு மாவட்ட ஆட்சியர் போலபள்ளி மக்களுக்கு 10 ஏக்கர் நிலத்தை மட்டும் திருப்பித் தந்திருக்கிறார். அந்த நிலத்தில்தான் இப்போது இறப்பவர்களைப் புதைக்கின்றனர்.

தேர்தலில் நின்றதால் மக்களிடையே அனுதாபம் மட்டுமே உருவானது. அந்த அனுதாபமும் 8,000 வாக்குகளாக மாற்றப்பட்ட பின்னர் கரைந்து போனது. தங்களை வாழ வைக்கும் நிலத்தை மீட்கப் போராடினால், இறந்தவர்களைப் புதைக்க மட்டும் நிலம் கொடுக்கிறது அரசு.

போலி ஜனநாயகத் தேர்தல்களைப் புறக்கணித்துப் போராடி வரும் நக்சல்பாரிகள் உட்பட பல அமைப்புகளையும், தேசிய நீரோட்டத்திற்கு அழைக்கின்றன ஓட்டுக்கட்சிகள். போலபள்ளி மக்களும் அந்த நீரோட்டத்தின் கையாலாகாத்தனத்தை தங்கள் அனுபவத்தால் உணர்ந்து விட்டனர். இனி அவர்களுக்கு இருப்பது ஒரே வழிதான். அதுதான் சிறப்புப் பொருளாதார மண்டலத்தையும், அதனைக் கொண்டுவந்த தனியார்மயம் - தாராளமயத்தையும் துரோக ஆட்சியாளர்களையும் விரட்டியடிக்கும் புரட்சிகர போராட்டப் பாதை!

சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்காக நிலம் பறிக்கப்பட்டு விட்டதால், முன்பு தங்களுக்குச் சொந்தமாக இருந்த நிலத்தில், தற்பொழுது கூலி வேலை செய்யும் போலபள்ளி கிராம மக்கள்.



● செங்கதிர்

www.padippakam.com

# தோழர் அனுராதாகாந்தி அவர்களுக்குச் சிவப்பஞ்சலி!



கம்யூனிசப் புரட்சியாளரும் இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மாவோயிஸ்ட்)யின் மத்தியக் கமிட்டி உறுப்பினருமான தோழர் அனுராதா காந்தி, கடந்த ஏப்ரல் 12-ஆம் நாளன்று மலேரியா நோய் தாக்குதலால் மரணமடைந்து விட்டார். தலைமறைவு புரட்சிகர வாழ்க்கையின் காரணமாக, அவர் மறைந்து விட்ட துயரச் செய்தி மிகத் தாமதமாகவே தெரிய வந்துள்ளது.

1970-களில் மும்பையில் கல்லூரி மாணவியாக இருந்த காலத்தில் முற்போக்கு மாணவர் இயக்கம் மூலம் நக்சல்பாரி புரட்சிகர அரசியலைக் கற்றுணர்ந்த அவர், அவசரநிலை பாசிச ஆட்சியைத் தொடர்ந்து ''ஜனநாயக உரிமைகள் பாதுகாப்புக் கமிட்டி''யைத் (CPDR) தொடங்கி மனித உரிமைப் போராளியாகச் செயல்பட்டார். நாக்பூர் பல்கலைக்கழகத்தில் சமூகவியல் பேராசிரியராகப் பணியாற்றிய போது, தொழிற்சங்க இயக்கத்திலும் தாழ்த்தப்பட்டோர் உரிமைக்கான போராட்டங்களிலும் ஈடுபட்டு பலமுறை அவர் சிறையிடப்பட்டார். மும்பையிலிருந்து அப்போது வெளிவந்த ''கலம்'' (KALAM) எனும் புரட்சிகர மாணவர் பத்திரிகையின் முக்கியத் தூணாக விளங்கினார். பின்னாளில் மாவோயிஸ்ட் கட்சியின் கோரிக்கையை ஏற்று, வேலையை உதறி எறிந்துவிட்டு பஸ்தார் பழங்குடியினப் பெண்கள் மத்தியில் புரட்சிப் பணியாற்றினார். அண்மைக் காலமாக, ஜார்கண்ட் மாநிலத்தில் பழங்குடியினப் பெண்களை அரசியல்படுத்தி அமைப்பாக்கும் பணியில் ஈடுபட்டு வந்தார். கடந்த ஏப்ரல் மாதத்தில் மலேரியா நோய் தாக்கி, தலைமறைவு வாழ்க்கையின் இடர்ப்பாடுகள் காரணமாக உரிய சிகிச்சை பெறமுடியாமல், தாமதமாக அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி தனது 54-வது வயதிலேயே மரணமடைந்து விட்டார்.

நாக்பூரில் அவர் அனைத்து மகாராஷ்டிரா தொழிலாளர் சங்கத்தில் (AMKU) பணியாற்றிக் கொண்டிருந்த காலத்தில், நமது அழைப்பை அன்புடன் ஏற்று 17.11.1990 அன்று மதுரையில் நடந்த புதிய ஜனநாயகம் இதழின் 6-ஆம் ஆண்டு விழாவில் பங்கேற்று சிறப்புரையாற்றிச் சிறப்பித்தார்.

உயர்கல்வி கற்று பேராசிரியராகப் பணியாற்றிய போதிலும், அவ்வேலையைக் கைவிட்டு புரட்சிப் பணியாற்றுவதில் அவர் கொண்ட பேரார்வம், மக்களின் விடுதலையை தனது உயிர்மூச்சாகக் கொண்டு செயல்பட்ட அவரது தன்னலமற்ற அர்ப்பணிப்பு, மாவோயிஸ்டு கட்சியின் மத்தியக் கமிட்டி உறுப்பினராக தன்னை உயர்த்திக் கொண்ட அவரது புரட்சிகரப் பேராற்றல், தலைமறைவு வாழ்க்கையின் பல்வேறு இடர்ப்பாடுகளை எதிர்கொண்டு புரட்சிப் பணியாற்றிய அவரது தீரம், கடின உழைப்பு, எளிய வாழ்வு ஆகிய உயரிய கம்யூனிசப் பணிகளை உறுதியாகப் பற்றி நின்று, அவரது இலட்சியக் கனவை நிறைவேற்ற புரட்சிப் பாதையில் தொடர்ந்து முன்னேறுவோம்!

— ஆசிரியர் குழு

# ''அணுசக்தி துரோக ஒப்பந்தம்: அம்பலமானது நாடாளுமன்ற போலி ஜனநாயகம்!''

## – புரட்சிகர அமைப்புகளின் தொடர்பிரச்சார இயக்கம்

நம்பிக்கை வாக்கெடுப்பையொட்டி மீண்டும் அழுகி நாறிய நாடாளுமன்ற போலி ஜனநாயகத்தை வீழ்த்திவிட்டு, மக்களுக்கு அதிகாரமளிக்கும் புதிய ஜனநாயகப் புரட்சிக்கு அணிதிரளுமாறு மக்களை அறைகூவி, ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் கடந்த 22.7.08 அன்று தமிழகமெங்கும் அணுசக்தி துரோக ஒப்பந்தத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்தின. அதன் தொடர்ச்சியாக, ''அடிமையாக்குகிறது அணுசக்தி ஒப்பந்தம்; கொல்லுகிறது விலைவாசி; நாறுகிறது நாடாளுமன்றம்; இனி நாட வேண்டியது நக்சல்பாரி பாதையே!'' எனும் முழக்கத்துடன் இவ்வமைப்புகள் தமிழகமெங்கும் வீச்சாகப் பிரச்சார இயக்கத்தை நடத்தி வருகின்றன.



சென்னையில்...

6.8.08 அன்று ஈரோடு-அக்கிரகாரம், மாணிக்கம் பாளையம் - சூளை பகுதியில் தெருமுனைக் கூட்டங்கள், 11.8.08 அன்று ஈரோடு மாவட்டம் வெள்ளக் கோவிலில் பொதுக்கூட்டம், 13.8.08 அன்று கோவில் பட்டியில் பொதுக்கூட்டம், 14.8.08 அன்று சென்னை - பச்சையப்பன் கல்லூரி அருகே அரங்கக் கூட்டம், அதேநாளில் மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் பொதுக்கூட்டம், 16.8.08 அன்று மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே ஆலம்பட்டியில் பொதுக்கூட்டம், 17.8.08 அன்று சேலம் மாவட்டம் ஓமலூர் அருகே ஆனைக்கவுண்டம்பட்டியில் பொதுக்கூட்டம், அதேநாளில் சென்னை-திருவெற்றியூரில் அரங்கக்கூட்டம், 21.8.08 அன்று மதுரை மாவட்டம்


படிப்பகம்


www.padippakam.com

திருமங்கலம் அருகே சாத்தாங்குடியில் பொதுக் கூட்டம், 22.8.08 அன்று தேனி மாவட்டம் தேவாரத் தில் பொதுக்கூட்டம், 25.8.08 அன்று சென்னை பல்லாவரத்தில் தெருமுனைக் கூட்டம் என தொடர்ச்சி யாக இவ்வமைப்புகள் பிரச்சார இயக்கத்தை நடத்தி வருகின்றன. கேலிச்சித்திர கண்காட்சி, சிறுவர்களின் கலைநிகழ்ச்சி, குறுநாடகங்கள், ம.க.இ.க. மையக் கலைக்குழுவின் புரட்சிகர கலை நிகழ்ச்சி ஆகியவற் றோடு நடத்தப்பட்ட இப்பிரச்சார இயக்கம் உழைக் கும் மக்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றுள்ளது. அணுசக்தி துரோக ஒப்பந்தத்தை எதிர்க்கும் அதி காரமே இல்லாத நாடாளுமன்ற போலி ஜனநாயகத் தையும், துரோகிகளான ஓட்டுக் கட்சிகளையும் திரை கிழித்துக் காட்டிய இப்பிரச்சார இயக்கம், நக்சல்பாரி புரட்சிப் பாதையில் போராட மக்களை அறைகூவு வதாக அமைந்தன.

— பு.ஜ. செய்தியாளர்கள்



உசிலம்பட்டியில்...



# தி.க. வீரமணியின் இலாபவெறி

"பெரியார் எழுதிய வைகளும் பேசியவைகளும் பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்திற்கு மட்டுமே சொந்தமான அறி வுசார் உடைமைகளாகும் – சொத்துகளாகும்" என்று பெரி யாரின் பெயரைச் சொல்லிப் பிழைப்பு நடத்தும் வீரமணி அண்மையில் அறிவிப்புச் செய்திருக்கிறார்.

அறிவுசார் சொத்துடைமை என்பது ஏகாதிபத்தியத்தின் கண்டுபிடிப்பு. அதுவும் விற் பனைச் சரக்குகளுக்குத்தான் பொதுவாக இதனைப் பயன் படுத்துகின்றனர். அந்த வகையில் கொள்கைகள், சிந்த னைகளுக்கும் காப்புரிமை பெற்றிருப்பது உலகிலேயே தி.க. மட்டுமாகத்தான் இருக்கும்.

பெரியார் தி.க.வினர், பெரியார் நடத்திய "குடியரசு" இதழ் முழுவதையும் மறு அச்சு செய்து வெளியிட முன்வந்துள்ளனர். இதனால் ஆத்திரம் அடைந்த வீரமணி, இவ்வாறு தனது அறிவுசார் சொத்துடைமையை யாராவது வெளியிட்டால் சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

எவ்வளவு பெரிய கோபம்? பெரியார் சிலையை இந்து மக்கள் கட்சிக் கருங்காலிகள் உடைத்தபோது வராத கோபம்! பெரியார் சிலைகள் அடுத்த பத்தாண்டுகளில் தமிழ்நாட்டில் இருக்காது என எச்.ராஜா எனும் இந்துவெறி பயங்கரவாதி மேடையேறி முழங்கியபோது வராத கோபம்!

பெரியார் என்ன சினிமாவுக்கா கதை எழு தினார்? வழக்கமாக சினி மாக் கழிசடைகள்தான் என் கதையை திருடிவிட்டார்கள் என்று நீதிமன்றம் போய்க் காசு பார்ப்பார்கள். இப்போது வீரமணியும் அதே வழிமுறையைக் கையில் எடுத்து விட்டார்.

சமூக நோய்க்கான மருந்து பெரியார்தான் என்றும் சுயமரியாதை வாழ்வே சுகவாழ்வு என்றும் மேடைதோறும் முழங்கும் "த மிழர் தலைவரோ" அந்த மருந்துக்குத் தான் மட்டுமே ஏகபோக முதலாளி என் கிறார்.

வீரமணி கூறும் சுயம ரியாதைச் சுகவாழ்வு என்ப துதான் என்ன? பார்ப்பனி யத்தை எதிர்க்காமல் வாழவும், வாழ்வியல் சிந்தனை எனும் பெயரால் "போராடாதே, கோப் படாதே, வயிற்றுப்புண் வந்து விடும்" என்றும் கற்றுத் தந்து சுயமரியாதையைக் காயடித்து மலடாக்குவதும்தானே?

இனி, வீரமணி கும்ப லிடமிருந்து பெரியாரை விடுவிக்க வேண்டும் என்றால் ஒரே வழிதான் இருக்கிறது. பெரியாரின் படைப்புகளை மட்டு மல்ல; அவர் விட்டுச் சென்ற சொத்துக்களையும் மக்களுடை மையாக்க வேண்டும். போலிப் பகுத்தறிவுவாதி வீரமணியி டமிருந்து பெரியார் சம்பந்தப்பட்ட அனைத்தையும் மீட்டு மக்களுக்குச் சொந்தமாக்கத் தன்மானமுள்ள தமிழர்கள் அனைவரும் ஓரணியில் திரண்டு போராட வேண்டும்.

● கதிர்


படிப்பகம்

# மாற்றுப் பயிர்த் திட்டம்: விவசாயிகள் விட்டில் பூச்சிகளா?



**மாற்றுப் பயிர்த் திட்டம் உணவுத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தக்கூடிய ஏகாதிபத்திய சதியாகும்.**

கடந்த 20 ஆண்டுகளாக விவசாயம் மற்றும் விவசாயிகளின் வாழ்க்கை நெருக்கடிக்கு உள்ளாகி வரும் நிலையில், அரசும் தனியார் நிறுவனங்களும் விவசாயிகளுக்கு ஒரு மாற்றுப் பாதையை காட்டுவதாகப் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி வருகின்றன. இத்திட்டங்கள், பாரம்பரிய உணவு மற்றும் தானிய உற்பத்தியில் உள்ள நிலங்களில் இம்மண்ணுக்கே அறிமுகம் இல்லாத புதிய பயிர்களையும் மற்றும் ஏற்றுமதிக்கான பயிர்களையும் விவசாயம் செய்ய வழிகாட்டுதல் கொடுக்கின்றன. இதை விவசாய விஞ்ஞானிகள் பன்முகப் பயிர் (Crop diversification) விவசாயம் என்கிறார்கள். பன்முக விவசாயத்தை மேற்கொள்வதே விவசாயிகளை நெருக்கடியிலிருந்து மீட்டெடுக்கும் என்கிறார்கள். இதனடிப்படையில் மைய விவசாய அமைச்சர் சரத்பவார், ''கோதுமை, அரிசி உற்பத்தியைக் குறையுங்கள்; மாற்றுப் பயிர்களைப் பயிரிடுங்கள்'' என விவசாயிகளைப் பார்த்து அறிவுரை கூறி வருகிறார்.

இந்த மாற்றுப் பயிர் விவசாயத்திற்கு அடிக்கல் நாட்டியது பா.ஜ.க. கூட்டணி அரசு. மாற்றுப்பயிர் விவசாயத்தை ஜூலை 8, 2004 அன்று தேசியத் தோட்டகலைத் திட்டத்தின் ஊடாக (National horiculture Mission-NHM) அமல்படுத்தியது. இத்திட்டத்தின் அடிப்படையில் பழங்கள், காய்கள், வாசனைப் பொருட்கள், மருத்துவச் செடிகள், மலர்கள், தென்னை, பாக்கு, முந்திரி, கோக்கோ, ஹெர்கின், நெல்லி, காட்டாமணக்கு, சர்க்கரைச் சோளம், மற்றும் பல்வேறு புதிய வகைப் பயிர்கள் பயிரிட விவசாயிகள் ஊக்குவிக்கப்படுகின்றனர். இத்தகைய பயிர்களை வல்லுனர்கள் ''தோட்டப்பயிர்'' என்று வரையறுத்துள்ளனர். மேலும் இந்தப் புதிய திட்டத்தைத் தவிர, கடந்த 20 ஆண்டுகளாக ஏற்றுமதிக்கான விவசாயத்தையும் அரசு முன்னுக்குத் தள்ளி வருகிறது.

இவற்றின் விளைவாக 1990 முதல் 2004 வரையிலான காலகட்டத்தில் உணவு மற்றும் சிறு தானிய உற்பத்தியிலிருந்த 72.7 லட்சம் ஹெக்டேர் விவசாய நிலம் மாற்றுப் பயிர் - தோட்டப்பயிர் விவசாயத்திற்காகத் திருப்பப்பட்டுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டுமே 7.6 லட்சம் ஹெக்டேர் நிலம் தோட்டப் பயிர்களுக்கென மாற்றியமைக்கப்பட்டுள்ளது. 1991-இல் 1.02 லட்சம் டன் பழங்களை ஏற்றுமதி செய்த இந்தியா இப்பொழுது 5 லட்சம் டன்னுக்கு மேல் ஏற்றுமதி செய்கிறது.

இதைத் தவிர, ஏற்றுமதிக்கு என்றே உருளை, கத்திரி, வெங்காயம், தக்காளி, பூசணி போன்றவையும் உற்பத்தி செய்யப்பட்டு, மேலை நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன. மேலும், தேசிய தோட்டக்கலைத் திட்டத்தின் கீழ் தற்சமயம் உற்பத்தியாகும் 1,570 லட்சம் டன் தோட்டப் பயிர்களை 2011-இல் 3,000 லட்சம் டன்னாக உயர்த்த இலக்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த இலக்கை நிறைவு செய்வதற்காக

நெல்லை மாவட்டத்திலுள்ள மானூர் சுற்றுப் பகுதிகளில் நெல்லுக்கு மாற்றாகப் பயிரிடப்பட்டுள்ள சூரியகாந்தி சாகுபடி.



www.padippakam.com

தேசிய தோட்டக்கலைத் திட்டத்தின் கீழ் 1,100 கோடி ரூபாய் மத்திய அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 18 மாநிலங்களில் (தமிழகம் உட்பட) 418 மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக மேலும் பல இலட்சக்கணக்கான விவசாய நிலங்கள் தோட்டப்பயிர்களின் கீழ் கொண்டுவரப்பட உள்ளது.

இன்னொரு பக்கம், கடந்த சில ஆண்டுகளாக விவசாயத்தில் ஏற்படும் இடுபொருட்களின் விலையேற்றம், தொடர்ச்சியான நட்டம் மற்றும் விவசாயப் பணிகளுக்கு ஆட்கள் பற்றாக்குறை ஆகியவற்றின் காரணமாக, பெரிய விவசாயிகள், சிறிய விவசாயிகள் என்ற வேறுபாடின்றி எல்லோரும் தோட்டப்பயிர் விவசாயத்தில் இறங்கியுள்ளனர். இன்னும் குறிப்பாகக் கூறினால், மூன்று மாத அல்லது 6 மாத குறுகிய காலப் பயிரை விட்டுவிட்டு, நிலத்தில் ஆண்டாண்டு காலமாய் நிற்கும் பயிர்களைத் தேர்வு செய்கின்றனர். இப்பயிர்களுக்கு ஆரம்பத்தில் மட்டும் கூடுதல் முதலீடு தேவைப்படுகிறது; அதேசமயம், அன்றாடப் பராமரிப்புக்கு விவசாயக் கூலியாட்கள் தேவைப்படுவதில்லை. இந்த பின்னணியில் மா, சப்போட்டா, நெல்லி, தென்னை, பாக்கு, தேக்கு, சவுக்கு, மூங்கில், அகத்தி, தீக்குச்சி மரம், யூகலிப்டஸ் மற்றும் சந்தன மரம் போன்ற பயிர்கள், உணவு மற்றும் சிறுதானிய உற்பத்திக்கான விளைநிலங்களையும், எண்ணெய் வித்துகள் மற்றும் பருப்பு வகைக்கான உற்பத்தி நிலங்களையும் ஆக்கிரமித்து வருகின்றன.

ஒரு பக்கம் ஏற்றுமதிக்கான தேசிய தோட்டக்கலைத் திட்டம்; மறுபுறம் உலகமயமாக்கலால் விவசாயத்தில் ஏற்படும் நெருக்கடியினால் விவசாயத்தில் (குறிப்பாக பயிர்களில்) ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள், உணவுப் பற்றாக்குறையை நோக்கி நாட்டைத் தள்ளி வருகின்றன.

1993-94-இல் மலர் சாகுபடி வெறும் 53,000 ஹெக்டேர் நிலத்தில் நடந்து வந்தது. இது தற்சமயம் 1,16,000 ஹெக்டராக விரிவடைந்துள்ளது. தற்சமயம் ஒட்டு மொத்த மலர் சாகுபடியில் தமிழகம் முன்னிலை வகிக்கிறது. இந்தியாவில் கொய் மலரை ஏற்றுமதி செய்வதற்காக 150-க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் இருக்கின்றன. 1993-94-இல் 18.83 கோடி ரூபாயாக இருந்த கொய் மலர் ஏற்றுமதி, 2006-07-இல் 400 கோடி ரூபாயாக விரிவடைந்துள்ளது. ஒசூர் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் நூற்றுக்கணக்கான ஏக்கர்களில் கொய்மலர் பயிரிடப்பட்டு வருகிறது. இங்கு உற்பத்தியாகும் கொய் மலர்கள் பெங்களூரு வழியாக ஐரோப்பா மற்றும் தென்மேற்கு ஆசிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

**காட்டாமணக்குப் பயிரிட்டு நட்டமடைந்ததாகக் கூறும் கோபி அருகேயுள்ள செம்மாண்டம்பாளையம் கிராம விவசாயி தங்கவேலு.**



**மாற்றுப் பயிர் உற்பத்தியை 2011 ஆம் ஆண்டுக்குள் 3,000 இலட்சம் டன்னாக உயர்த்த 1,100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.**

'90-களின் ஆரம்பத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட ஹெர்கின் (வெள்ளரிக்காயைப் போன்றது), கர்நாடக மாநிலத்தில் மட்டும் 41,600 ஏக்கரில் பயிரிடப்படுகிறது. இந்த ஹெர்கின் உள்நாட்டுச் சந்தைக்கு வருவதில்லை. முழுக்க முழுக்க ஏற்றுமதிக்குத்தான். ஐரோப்பா, அமெரிக்கா மற்றும் ரஷ்யாவில் ஹெர்கினை ''வினிகர்'' என்றழைக்கப்படும் திரவத்தில் ஊற வைத்து ஊறுகாய் போல் சாப்பிடுகின்றனர். இரண்டு ஆண்டுகளுக்கு முன் நாமக்கல், சேலம் மற்றும் துறையூர் போன்ற பகுதிகளில் ஒப்பந்த விவசாயத்தின் அடிப்படையில் ஹெர்கின் பயிரிடப்பட்டது. இந்த பகுதிகளில் செயல்பட்ட ஒப்பந்த விவசாய நிறுவனம் கொள்முதல் செய்து கொள்வதாக வாய்மொழி உத்தரவாதம் கொடுத்திருந்தது. ஆனால், உற்பத்தியான ஹெர்கினை கொள்முதல் செய்ய வரவில்லை. இதனால் நூற்றுக்கணக்கான விவசாயிகள் நட்டமடைந்தனர்.

இந்திய அளவில் 80-களின் ஆரம்பத்தில் வெறும் 3,000 ஹெக்டேராக இருந்த நெல்லி விவசாயம், தற்சமயம் 50,000 ஹெக்டேருக்கு மேல் விரிவடைந்துள்ளது. தமிழகத்தில் மட்டும் 5,500 ஹெக்டேர் நிலம் நெல்லி உற்பத்தியின் கீழ் உள்ளது. வீட்டுத் தேவைக்காக வளர்க்கப்பட்ட சப்போட்டா செடி இன்று 2,800 ஹெக்டேருக்கு மேல் பயிரிடப்படுகிறது. இதைத்தவிர தான்தோன்றித்தனமாக சில நிறுவனங்கள் பேரிச்சம்பழம் பயிரிட விவசாயிகளை வலியுறுத்தி வருகின்றன. தமிழகத்தில் மட்டும் சுமார் 2000 ஏக்கர் பரப்பில் பேரிச்சம்பழம் பயிரிடப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் மல்லசமுத்திரம் மற்றும் அதனை ஒட்டிய கிராமங்களில் 200-க்கும் மேற்பட்ட ஏக்கரில் இப்பயிர் பயிரிடப்பட்டுள்ளது.

காட்டாமணக்கு, சக்கரைச் சோளம் போன்ற பயிர்கள் பயோ டீசலுக்காக நாடெங்கும் பரவலாகப் பயிரிடப்பட்டு வருகின்றன. மத்திய-மாநில அரசுகள் பல லட்சக்கணக்கான விவசாய நிலங்களை மேற்குறிப்பிட்ட பயிர்களுக்குத் திருப்பி விடத் திட்டம் போட்டுள்ளன. பொதுவாக இந்தத் தோட்டப்பயிர்கள் விவசாயத்தில், பன்னாட்டு மற்றும் தரகு முதலாளிகள் ஆதிக்கம் செலுத்துகின்றனர். பெரும்பான்மையான தோட்டப்பயிர் விவசாயம், ஒப்பந்த விவசாயத்தின் அடிப்படையிலேயே நடைபெறுகிறது. நெஸ்ட்லே, ஐடிசி, பெப்சிகோ, பாரதி ரிலையன்ஸ், டாடா மற்றும் பல நிறுவனங்கள் ஒப்பந்த விவசாயத்தை மேற்கொள்கின்றன. ஒப்பந்த விவசாயத்தில் பங்கேற்கும் விவசாயிகளுக்கு இந்நிறுவனங்கள் நிர்ணயிக்கப்பட்ட விலைகளைக் கொடுப்பதில்லை என்பது நாடறிந்த உண்மையாகும். இதைத் தவிர ஒப்பந்த விவசாய நிறுவனங்கள் அதிக இலாபத்தைச் சுருட்டுவதற்காக, ஒரே நேரத்தில் குறிப்பிட்ட வட்டாரத்தில் பல்லாயிரம் ஹெக்டேர் பரப்பளவில் ஒரு குறிப்பிட்ட பயிரைப் பயிரிட விவசாயிகளை நிர்ப்பந்திக்கின்றன. இதனால் விவசாயத்தின் பன்


படிப்பகம்

www.padippakam.com

முகத்தன்மை அழிக்கப்பட்டு, நிலம் சத்தின்றி மலடாகிப் போவதும் நிலத்தடி நீர் வரையின்றி உறிஞ்சப்படுவதும் தொடர்கிறது. மேலும் அளவுக்கு மீறிப் பூச்சி மருந்து, களைக்கொல்லி மருந்து, பூ பூக்க மருந்து, காய் கனியாக மருந்து மற்றும் இரசாயன உரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் நிலமானது உடனடியாகச் சீரமைக்க முடியாத அளவுக்கு நஞ்சாகிப் போகின்றது.

இப்படிப்பட்ட ஒப்பந்த விவசாய நிறுவனங்களுக்கு தேசியத் தோட்டக் கலைத் திட்டத்தின் கீழ் 26.91 லட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவும் குளிர் சாதன வசதியும் கொண்ட 596 கிடங்குகளை அமைக்க 192 கோடி ரூபாயை மத்திய அரசு மானியமாகக் கொடுத்துள்ளது. இதைத் தவிர, தோட்டபயிர் விவசாயத்தில் கிடைக்கும் கொள்ளை இலாபத்தைக் கண்ட பன்னாட்டு நிறுவனங்களும் தரகு முதலாளிகளும் 800 கோடி ரூபாயை முதலீடு செய்துள்ளனர்.

உலகமயமாக்கலின் பின்னணியில் விவசாயத்திற்கு வந்த தொடர் நெருக்கடிகள், இந்திய அரசின் ஏற்றுமதிக்கான விவசாயக் கொள்கை மற்றும் அதன் தொடர்ச்சியாக தேசிய தோட்டக்கலை திட்டம் ஆகியவை நெல், கோதுமை, சோளம், கம்பு, கேழ்வரகு, மொக்கை சோளம் போன்ற பெருந்தானியங்களையும், தினை, வரகு, குதிரை வாலி, பனி வரகு, சாமை போன்ற சிறுதானியங்களையும் அவரை, துவரை, மொச்சை, காராமணி, கொத்தவரை, கொள்ளு, நரிப்பயிறு, குத்துகடலை, உளுந்து, பாசிப்பயறு போன்ற பயிர்களையும் பெரும்பான்மையான எண்ணெய் வித்துக்களையும் விவசாயிகளிடமிருந்தும், நிலங்களிலிருந்தும் அப்புறப்படுத்தி விட்டன.

இப்பொழுது இந்திய அரசால் முன் வைக்கப்படும் திட்டம் நகரத்தின் மேட்டுக்குடிகளுக்கும், மேலை நாடுகளின் உணவு மற்றும் நுகர்வுக்கும் தேவையான பொருட்களை உற்பத்தி செய்யவே வடிவமைக்கப்பட்டுள்ளது. இது, நாட்டின் தற்போதைய அரை-குறையான உணவுப் பாதுகாப்பை மேலும் சிக்கலாக்கும். இந்திய மக்கள், தமது உணவுக்காக அந்நிய நாடுகளிடம் கையேந்தும் நிலைக்கு தள்ளப்படும் அபாயத்தில் சிக்க வைக்கப்பட்டுள்ளனர்.

● சுடர்

## போஸ்கோ தீர்ப்பு:

# நீதிக்குத் தூக்கு!

**உச்ச நீதிமன்றம் பன்னாட்டு நிறுவனங்களின் கைப்பாவை என்பது மீண்டும் நிரூபணமாகியிருக்கிறது.**

தென் கொரியாவைச் சேர்ந்த நிறுவனமான போஸ்கோ, ஒரிசா மாநிலத்தில் தனது இரும்பு உருக்காலையை நிறுவிக் கொள்ள அனுமதி அளித்துத் தீர்ப்பளித்திருக்கிறது, உச்சநீதி மன்றம். 55,000 கோடி ரூபாய் முதலீட்டில் இரும்பு உருக்காலையை அமைக்கத் திட்டமிட்டுள்ள போஸ்கோ, ஆலை அமைப்பது தொடர்பாக உச்சநீதி மன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள இரண்டு ஆலோசனைகளை முழு மனதுடன் ஏற்றுக் கொண்டுள்ளது.

போஸ்கோ தொடங்கவுள்ள இரும்புச் சுரங்கம் மற்றும் உருக்காலையால் ஒரிசாவின் பாரதீப் பகுதியில் உள்ள பெரும் வனப்பகுதியே மொட்டையடிக்கப்படும் என்பதால், சுற்றுச்சூழலை நிர்வகிப்பதற்கு ஒரு கமிட்டியை அமைக்க வேண்டும் என்பது ஒரு ஆலோசனை. காடுகளை அழித்து விட்டுச் சுற்றுச்சூழலை எப்படி பாதுகாப்பது? இந்த கமிட்டி மரம் நடும் திட்டத்தின் மூலம் சுற்றுச் சூழலை பாதுகாக்கப் போகிறதா என்பது போன்ற கேள்விகளுக்குள் எல்லாம் உச்சநீதி மன்றம் சென்றதாகத் தெரியவில்லை; கமிட்டி என்பதோடு பிரச்சினையை முடித்து விட்டது.

காடுகள் அழிக்கப்படுவதால் அதில் இருந்து துரத்தப்படும் பழங்குடி இன மக்களுக்கு நிவாரண உதவி வழங்க 73.5 கோடி ரூபாயை ஒதுக்க வேண்டும் என்பது இரண்டாவது ஆலோசனை. ஒரிசா மாநில அரசு போஸ்கோவுடன் போட்டுக் கொண்டுள்ள ஒப்பந்தத்தின்படி, ஏறத்தாழ 10 இலட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள இரும்புத் தாது அதன் கைக்குப் போகப் போகிறது. இரும்புத் தாதுவை வெட்டி எடுத்து விற்கும்போது, இன்றைய நிலவரப்படி அதனின் மதிப்பு ஏறத்தாழ 28 இலட்சம் ரூபாய் கோடியைத் தொடும். எனவே, நிவாரண உதவிக்காக 73.5 கோடி ரூபாயை ஒதுக்க வேண்டும் என்பது சுண்டைக்காய் பணம்தான்.

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த வேதாந்தா என்ற நிறுவனத்தின் துணை நிறுவனமான ஸ்டெர்லைட், ஒரிசாவில் அலுமினிய ஆலை தொடங்குவது தொடர்பாக உச்சநீதி மன்றத்தில் நடந்த மற்றொரு வழக்கில், ''அழிக்கப்படும் காடுகளுக்கு ஏற்ற சந்தை விலையைத் தீர்மானிக்கலாம்'' எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. ''எதற்கும் ஒரு விலையுண்டு'' என்ற பணக்காரத் திமிர்தான் உச்சநீதி மன்றத்தின் இந்தத் தீர்ப்பு. பாலியல் பலாத்காரம், கொலை போன்ற கிரிமினல் குற்றங்களைப் பொழுதுபோக்காகச் செய்யும் குற்றவாளிகளுக்குத் தண்டனை கொடுக்காமல், அவர்களுக்கு அபராதம் விதித்து மன்னித்து விடலாம் என்பது எத்தகைய அநீதியானதோ, அத்தகைய வக்கிரம் நிறைந்தது இத்தீர்ப்பு.

ஒரிசாவில் கொட்டிக் கிடக்கும் இரும்புத் தாது, பாக்சைட், குரோமியம், நிலக்கரி, சுண்ணாம்புக்கல், அலுமினியம் போன்ற மூலவளங்களைக் கொள்ளையடிக்க 37 அந்நிய நிறுவனங்கள் ஒப்பந்தம் போட்டுக் கொண்டு காத்துக் கிடக்கின்றன. உச்சநீதி மன்றத்தின் இந்த இரண்டு தீர்ப்புகளும் அவற்றின் வயிற்றில் பாலை வார்த்திருக்கின்றன.

சில நீதிபதிகள் தவறாகக் கொடுத்து விட்ட தீர்ப்புகளாக, போஸ்கோ, வேதாந்தா வழக்குகளைப் பார்க்க முடியாது. கேரளாவின் பிளாச்சிமடா கிராமத்தில் இயங்கிவரும் கோக் ஆலை நிலத்தடி நீரை உறிஞ்சக் கூடாது என அக்கிராம மக்கள் போராடிய பொழுது, கோக்கிற்கு ஆதரவாகத் தீர்ப்பளித்தது கேரள உயர்நீதி மன்றம். சிறப்புப் பொருளாதார மண்டலங்களைத் தடை செய்ய முடியாது; பொதுத்துறை நிறுவனங்களை அடிமாட்டு விலைக்கு தனியாருக்கு விற்பதைத் தடுக்க முடியாது எனத் தனியார்மயத்திற்கு ஆதரவாக இந்திய நீதிமன்றங்கள் பல தீர்ப்புகளை அளித்திருக்கின்றன. மக்களின் போராட்டங்களால் தனியார்மயத்திற்கு எவ்விதப் பங்கமும் வந்து விடக்கூடாது


படிப்பகம்

www.padippakam.com



ஒரிசா தலைநகர் புவனேசுவரில், போஸ்கோ நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டுள்ள சலுகைகளை எதிர்த்தும், ஒப்பந்தத்தை ரத்து செய்யக் கோரியும் போஸ்கோ நிர்வாக அலுவலகம் முன் நடந்த ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)

என்பதில் ஓட்டுக் கட்சிகளைவிட இந்திய நீதிமன்றங்கள்தான் முனைப்பாக இருக்கின்றன.

''தனியார்மயம் - தாராளமயம் என்பது அரசின் பொருளாதாரக் கொள்கை; அதில் நாங்கள் தலையிட முடியாது'' எனக் கூறி, தனியார்மயத்தின் அத்துணை மோசடிகளையும் இந்திய நீதிமன்றங்கள் நியாயப்படுத்தி வருகின்றன. அதேசமயம், இந்திய நீதிமன்றங்கள் இந்தத் ''தலையிடாக் கொள்கை''யை எல்லா வழக்குகளிலும் பின்பற்றுவதில்லை.

சேது சமுத்திரத் திட்டம் அரசின் பொருளாதார முடிவாக இருந்தாலும், அத்திட்டம் ராமர் பாலத்தை நாசப்படுத்தும் எனக் 'கண்டுபிடித்து', அதன் பாதையை மாற்றச் சொல்லி உத்தரவு போடுகிறது, உச்சநீதி மன்றம்.

இடஒதுக்கீடு அரசின் கொள்கை முடிவாக இருந்தாலும், அதில் தலையிட்டு, மேல்சாதிவெறிக் கும்பலுக்கு ஆதரவாக, கல்வி வியாபாரிகளுக்கு ஆதரவாக அக்கொள்கையை நீர்த்துப் போகச் செய்கிறது, உச்சநீதி மன்றம்.

''பந்த்'' நடத்தக் கூடாது; வேலை நிறுத்தம் செய்யக் கூடாது'' எனத் தடை போட்டு இந்திய அரசியல் சாசனம் உழைக்கும் மக்களுக்கு வழங்கியுள்ள உரிமைகளைக் காலில் போட்டு மிதிக்கின்றன, இந்திய நீதிமன்றங்கள். பன்னாட்டு நிறுவனங்களின் நலன் என்றால் அதற்கு ஒரு கண்ணாடி; உழைக்கும் மக்களின் நலன் என்றால் அதற்கு வேறொரு கண்ணாடி என்பதுதான் இந்திய நீதிமன்றங்களின் கொள்கை.

ஓட்டுக் கட்சிகளும், அதிகார வர்க்கமும் தனியார்மயம் - தாராளமயம் என்ற பெயரில் உழைக்கும் மக்களின் வாழ்வாதாரங்களையம், அரசியல் உரிமைகளையும் ஒவ்வொன்றாகப் பறித்து வருகின்றன. இதற்கு எதிராகப் போராடும் மக்கள், நீதிமன்றம் மூலமாவது தங்களுக்கு நீதி கிடைக்காதா என்று நம்பிப் போனால், நீதிபதிகளோ பன்னாட்டு நிறுவனங்களின் கங்காணிகளாகச் சோரம் போய்க் கிடக்கிறார்கள். அதிகாரமிருந்தால், ஒரே தீர்ப்பில் இந்தியாவைப் பன்னாட்டு நிறுவனங்களின் அடிமை நாடு என்று அறிவிக்கவும் இந்திய நீதிபதிகள் தயங்க மாட்டார்கள்.

இவர்களின் துரோகத்தால் இந்திய மக்கள் தோற்கடிக்கப்பட்டு விட்டனர் என்பது உண்மையானாலும், சோர்ந்து போய் நம்பிக்கையை இழந்து விட முடியாது. பன்னாட்டு நிறுவனங்களின் ஆதிக்கத்திற்கு எதிரான போராட்டத்தில் இனி என்ன வழியைத் தீர்மானிப்பது? யாரை நம்புவது? என முடிவு செய்ய வேண்டிய தருணமிது.

ஆளும் வர்க்கம், ஓட்டுக் கட்சிகள், போலீசு, நீதிமன்றம் என்ற இந்திய அரசியல் அமைப்பின் அத்துணை உறுப்புகளும், பன்னாட்டு நிறுவனங்களுக்கு ஆதரவாகவும்; மக்களுக்கு எதிராகவும் செயல்படும் பொழுது இந்த அரசியல் அமைப்பையே குழி தோண்டி புதைக்கும்படியாகப் போராட்டத்தைத் தீவிரப்படுத்த வேண்டும். அரசியல் அமைப்பை மாற்றுவது என்றால், தேர்தல் மூலம் ஆளும் கட்சியைத் தோற்கடித்து, எதிர்க்கட்சிகளிடம் அதிகாரத்தை அளிப்பதல்ல. தேர்தலைப் புறக்கணித்து, இன்னுமொரு சுதந்திரப் போராட்டத்தை, பகத்சிங் வழியில், ஆயுதம் ஏந்திப் போராடும் நக்சல்பாரிகளின் வழியில் நடத்துவதுதான் இந்திய மக்கள் முன்னுள்ள ஒரே மாற்றுப் பாதை; அதுதான், பன்னாட்டு நிறுவனங்கள் திணிக்கும் மறுகாலனி ஆதிக்கத்தை முறியடிக்கும் பாதை!

● தனபால்


படிப்பகம்

www.padippakam.com

# பெட்ரோல்-டீசல் விலையேற்றம்:

# குளிர் காயும் அமெரிக்கா

**கச்சா எண்ணெய் விலையேற்றத்தால் ஆதாயமடையும் நாடுகளில் அமெரிக்காவுக்கே முதலிடம்.**

கச்சா எண்ணெய் விலையைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக கடந்த ஜூன் மாத இறுதியில் மேற்கு ஆசியாவில் உள்ள ஜெட்டா நகரில், கச்சா எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகள், மேற்குலக ஏகாதிபத்திய நாடுகள், இந்தியா உள்ளிட்ட சில ஏழை நாடுகள் பங்கு கொண்ட மாநாடு நடந்தது. இம் மாநாட்டில் கச்சா எண்ணெய் விலையைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக உருப்படியான யோசனைகள் கூட வைக்கப்படவில்லை என்ற போதும், இந்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் எண்ணெய் விலைக்குக் காரணமான உண்மையைப் போட்டு உடைத்தார். ''கச்சா எண்ணெய் விலை உயர்வுக்கு முன்பேர வர்த்தகச் சூதாடிகள்தான் காரணமே ஒழிய, சந்தைக்கும் விலை உயர்வுக்கும் சம்பந்தமேயில்லை'' என்றார், ப.சிதம்பரம். அவரின் இந்த ஒப்புதல் வாக்குமூலம், திருட்டு வழக்கில் ''அப்ரூவர்'' ஆகிவிட்ட குற்றவாளியின் சாட்சியத்திற்கு நிகரானது. பாம்பின் கால் பாம்புக்குத் தானே தெரியும்.

ப.சிதம்பரம் மட்டுமல்ல, கச்சா எண்ணெய் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் சவூதி அரேபியாவும் இந்த உண்மையை ஒத்துக் கொண்டுள்ளது. சவூதி அரேபியாவின் எண்ணெய் வள அமைச்சர் இன்னும் ஒருபடி மேலே போய், ''மேற்காசிய எண்ணெய் வளத்தைக் கைப்பற்றிக் கொள்வதில் ஏகாதிபத்திய நாடுகளிடையே நடந்துவரும் போட்டியும் கச்சா எண்ணெய் விலை உயர்வுக்குக் காரணம்'' எனக் கூறியிருக்கிறார். (பிசினஸ்லைன், ஜூலை 4).

இவ்வளவு ஏன், அமெரிக்க நாடாளுமன்றத்தின் நிரந்தர துணைக் குழுவொன்று எண்ணெய் மற்றும் எரிவாயுவின் விலை உயர்வுக்கும் சந்தை சூதாட்டத்திற்கும் இடையேயுள்ள உள்ள தொடர்பை ஆராய்ந்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அதில், ''இணைய தளம் வழியாக நடைபெறும் சூதாட்ட வர்த்தகம், எண்ணெய் விலையைக் கணிசமான அளவு உயர்த்தியிருப்பதை நிரூபிப்பதற்குப் போதுமான சாட்சியம் இருப்பதாக''க் குறிப்பிட்டுள்ளது. (ஃப்ரண்ட்லைன், ஜூலை 4, பக்:19)

திருடனுக்குத் தேள் கொட்டினால் அலறவா முடியும்? அதனால் அமெரிக்க அரசும், முதலாளித்துவப் பொருளாதார நிபுணர்களும் இந்த அறிக்கை பற்றி மூச்சு விடாமல் மூடி மறைத்துவிட்டனர். ''எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகள் சந்தையின் தேவையைவிடக் குறைவாகக் கச்சா எண்ணெயை உற்பத்தி செய்து வருவதும்; இந்தியா மற்றும் சீனாவின் கச்சா எண்ணெய் தேவை அதிகரித்து வருவதும்தான் விலை உயர்வுக்குக் காரணம்'' என்பதுதான் அமெரிக்காவின் வாதம். இங்கிலாந்து, ஜெர்மனி உள்ளிட்ட சில மேற்குலக நாடுகள் அமெரிக்காவிற்குப் பின்பாட்டு பாடி வருகின்றன.

ஒரு முழுப் பொய்யைவிட அரைகுறை உண்மை ஆபத்தானது என்பார்கள். அமெரிக்கா, கச்சா எண்ணெய் விலை உயர்வு குறித்து அளித்துவரும் விளக்கம் அந்த ரகத்தைச் சேர்ந்தது.

2007-ஆம் ஆண்டில், இந்தியாவும் சீனாவும் இறக்குமதி செய்த கச்சா எண்ணெயின் அளவு, 2006-ஆம் ஆண்டைவிட 8.7 சதவீதம் அதிகரித்தது உண்மைதான் என்றாலும், அமெரிக்காவோடு ஒப்பிட்டால், இந்தியா, சீனாவின் கச்சா எண்ணெய் நுகர்வு குறைவானதுதான். உலகில் உற்பத்தியாகும் கச்சா எண்ணெயில், இந்தியா ஏறத்தாழ 3 சதவீதமும்; சீனா 8 சதவீதமும்தான் பயன்படுத்துகின்றன. அந்நாடுகளின் பொருளாதார வளர்ச்சி இதற்கு மேல் கச்சா எண்ணெய்

**உணவுப் பொருட்கள் மற்றும் கச்சா எண்ணெய் விலை உயர்வுக்கும், முன்பேர வர்த்தகச் சூதாட்டத்துக்கும் இடையே தொடர்புள்ளதா என்பது குறித்து விசாரணை நடத்தும் அமெரிக்க அரசின் பாதுகாப்பு மற்றும் அரசாங்க விவகார கமிட்டி.**





படிப்பகம்

www.padippakam.com

நுகர்வைக் கோரவில்லை. ஆனால் பொருளாதார மந்தத்தில் சிக்கிக் கொண்டுள்ள அமெரிக்காவோ உலகின் மொத்த கச்சா எண்ணெய் உற்பத்தியில் 24 சதவீதப் பங்கை நுகர்ந்து தள்ளுகிறது.

அமெரிக்க அரசின் எரிசக்தித் தகவல் நிர்வாக அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், 2008-ஆம் ஆண்டில் சர்வதேச கச்சா எண்ணெய் தேவை, உற்பத்தியைவிட 1.2 சதவீதம்தான் அதிகமாக இருக்கும் எனக் குறிப்பிட்டுள்ளது. தேவை இவ்வளவு குறைவாக உயரும் என எதிர்பார்க்கப் படும் பொழுது, 2008-ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களுக்குள்ளாகவே கச்சா எண்ணெயின் விலை 140 சதவீதம் அதிகரித்துவிட்டது.

இலாபத்தை அதிகரித்துக் கொள்வதற்காக, தேவையை விட உற்பத்தியைக் குறைத்துவிடுவது முதலாளித்துவ பொருளாதாரத்தில் புதிய விசயமல்ல. குறிப்பாக, ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் விலை 200 அமெரிக்க டாலரைத் தாண்டிப் போகும் எனப் பீதி கிளப்பப்படுவதால், கச்சா எண்ணெயைத் தோண்டியெடுக்கும் நாடுகள் அனைத்துமே இந்தத் தில்லுமுல்லுவில் ஈடுபட்டுள்ளன. ஆனால், இந்தத் தில்லுமுல்லைக் கட்டுப்படுத்த முடியாத கையறு நிலையில் இருப்பதைப் போல அமெரிக்கா தன்னைக் காட்டிக் கொள்வதுதான் வேடிக்கையானது.

கச்சா எண்ணெய் உற்பத்தியில் உலகில் முதலிடம் வகிக்கும் சவூதி அரேபியா, அமெரிக்காவின் அடியாள் என்பது உலகமே அறிந்த உண்மை. ஆனாலும், அமெரிக்கா தேவைக்கு ஏற்ப உற்பத்தியைக் கூட்டச் சொல்லி சவூதி அரேபியாவிற்குக் கட்டளை போட மறுக்கிறது. இப்படிக் கட்டளை போடுவது சுதந்திர வர்த்தகத்தைப் பாதிக்கும் என்றால், அமெரிக்கா தனது சொந்த நாட்டில் இதுவரை தோண்டி எடுக்காமல் இருக்கும் கச்சா எண்ணெயை எடுத்து, சந்தையில் கொட்டப் போவதாக ஒரு மிரட்டலாவது விட்டிருக்கலாம். அதையும் செய்ய மறுக்கிறது, அமெரிக்கா.

டாலர் மதிப்புச் சரிவு, பொருளாதார மந்தத்தால் பாதிக்கப் பட்டுள்ள அமெரிக்காவிற்கு, கச்சா எண்ணெய் விலை உயர்வு இன்னுமொரு தலைவலியாகத் தானே இருக்கும் என்று நாம் நினைக்கலாம். ஆனால், அமெரிக்க ஆளும் கும்பலோ கச்சா எண்ணெய் விலை உயர்வை வாராது வந்த மாமணியாகத் தான் பார்க்கிறது; வீட்டுக் கடன் பிரச்சினையால் நட்டமடைந்துள்ள அமெரிக்க வங்கிகளும், நிதி ஆதிக்கக் கும்பலும் கச்சா எண்ணெய் விலை உயர்வைப் பயன்படுத்திக் கொண்டுக் கரையேறிவிட முயலுவதால், கச்சா எண்ணெய் விலை சரிந்து விடக் கூடாது என்றே அமெரிக்கா விரும்புகிறது.

சொல்லப் போனால், இந்த விலை உயர்வைத் தொடங்கி வைத்ததே அமெரிக்காவின் ஈராக் மீதான மேலாதிக்கப்போர் தான். ஈராக் ஆக்கிரமிப்புப் போருக்கு முன்பாக ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் விலை 25 டாலராக இருந்தது. இது, சனவரி 2004-க்கும் ஏப்ரல் 2007-க்கும் இடைபட்ட காலத்தில் 65 டாலராக உயர்ந்தது. அடுத்த ஒரே ஆண்டிற்குள் ஒரு பீப்பாய் எண்ணெய் விலை 145 டாலரைத் தொட்டது. இவ்விலை உயர்வினால் சவூதி அரேபியா, ஈரான், ரசியா, நைஜீரியா, குவைத் உள்ளிட்ட எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகள் மட்டுமல்ல, எண்ணெய் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனங்களும் கொழுத்த இலாபம் அடைந்து வருகின்றன.

**அமெரிக்கா, உலகின் மொத்த கச்சா எண்ணெய் உற்பத்தியில் 24 சதவிகிதப் பங்கை நுகர்ந்து தள்ளுகிறது.**

உலக எண்ணெய் வளத்தில் ஏறத்தாழ 25 சதவீதப் பங்குகள் அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனங்களிடம் இருப்பதாகக் கூறப்படுகிறது. அமெரிக்காவின் எக்ஸான்-மொபில் என்ற நிறுவனத்திற்கு மட்டும், உலகின் 21 நாடுகளில் எண்ணெய் வயல்கள் சொந்தமாக உள்ளன. சவூதி அரேபியா ஒவ்வொரு நாளும் 1 கோடி பீப்பாய் எண்ணெயைத் தோண்டி எடுக்கிறது என்றால், எக்ஸான்-மொபில் பல்வேறு நாடுகளில் உள்ள தனது எண்ணெய் வயல்களில் இருந்து ஏறத்தாழ 68 இலட்சம் பீப்பாய் எண்ணெயை உறிஞ்சிக் கொட்டுகிறது. எண்ணெய் உற்பத்தியில் அமெரிக்காவின் ஆதிக்கம் நிலவுவதைச் சுட்டிக் காட்டும் சிறிய உதாரணம் இது. எதிர்காலப் பயன்பாட்டுக்காக, அமெரிக்கா, தன்து நாட்டிலுள்ள எண்ணெய் வயல்களைப் பயன்படுத்தாமல், பாதுகாத்து வருவது தனிக்கதை.

எண்ணெய் விலையேற்றத்தால், எக்ஸான்-மொபிலின் கடந்த ஆண்டு இலாபம் நான்கு இலட்சம் கோடி ரூபாயைத் தொட்டுள்ளது. எக்ஸான்-மொபில், செவ்ரான்க்ராப், கோங்கோபிலிப்ஸ் உள்ளிட்ட அமெரிக்க எண்ணெய் நிறுவனங்கள், அமெரிக்க அரசிற்கு கடந்த ஆண்டு வரியாக மட்டும் ஏறத்தாழ ஐந்து இலட்சம் கோடி ரூபாயைக் கட்டியிருப்பதாகக் கூறப்படுகிறது.

சவூதி அரேபியாவிற்கு அடுத்து எண்ணெய் வளம் நிறைந்த நாடு ஈராக்தான். ஈராக்கில், இன்னும் கண்டுபிடிக்கப்படாத எண்ணெய் வளம் ஏராளம் இருப்பதாகவும் கூறப்படுகிறது. சதாம் ஆட்சியின்பொழுது, நாட்டுமையாக்கப்பட்டிருந்த எண்ணெய் வயல்கள், ஈராக் ஆக்கிரமிப்புப் போருக்குப் பிறகு அமெரிக்கமயமாக்கப்படுகின்றன. போரில் சதாமை வீழ்த்தி பாக்தாத் நகருக்குள் நுழைந்த அமெரிக்கப் படைகள், சதாம் பதுக்கி வைத்திருப்பதாகச் சொல்லப்பட்ட பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்களைத் தேடி அலையவில்லை. மாறாக, ஈராக்கின் எண்ணெய் அமைச்சரவை அலுவலகத்திற்குள் நுழைந்து அதனைத் தனது கட்டுப்பாட்டுக்குள் எடுத்துக் கொண்டன. ''ஷெல்'' எண்ணெய் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் பிலிப் கரோலை எண்ணெய் அமைச்சரவையின் ஆலோசகராக நியமித்தது, அமெரிக்கா.

ஈராக்கில்; குர்து இன மக்கள் வாழும் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள எண்ணெய் வயல்களில் இருந்து கச்சா எண்ணெய் எடுப்பதற்காக 20 ஒப்பந்தங்களை அமெரிக்கா போட்டுக் கொண்டுள்ளது. தற்பொழுது ஈராக்கின் தெற்கே, சன்னி மற்றும் ஷியா முசுலீம்கள் வாழும் பகுதிகளில் உள்ள மிகப் பெரும் எண்ணெய் வயல்கள், அமெரிக்காவின் எக்ஸான்-மொபில், ஷெல்; பிரிட்டனின் பிரிட்டிஷ் பெட்ரோலியம்; அமெரிக்க-பிரான்சு கூட்டு நிறுவனமான டோட்டல் ஆகிய நான்கு நிறுவனங்களுக்குத் தாரை வார்க்கப்பட்டுள்ளன.

www.padippakam.com

இந்த எண்ணெய் வயல்களைக் குத்தகைக்கு எடுக்க ரசியா, சீனா, இந்தியா உள்ளிட்டு பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 46 நிறுவனங்கள் ஈராக் பொம்மை அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டிருந்தன. ஆனால், இந்த நான்கு நிறுவனங் களைத் தவிர்த்து, பிற நாட்டு நிறுவனங்கள் போட்டியிட அனு மதிக்கப்படாமல், குத்தகை முடிவு செய்யப்பட்டது. ஈராக் பொம்மை அரசு இந்த நான்கு நிறுவனங்களுக்குத் தர வேண் டிய இலாப ஈவுத் தொகை, தொழில்நுட்ப ராயல்டி தொகை ஆகியவற்றைப் பணமாக இல்லாமல், கச்சா எண்ணெயாகத் தர வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

இப்படிப்பட்ட நிலையில், கச்சா எண்ணெயின் விலை மீண்டும் பழைய நிலைக்கு — ஒரு பீப்பாய் 25 அமெரிக்க டாலருக்கு - உடனடியாகச் சரிந்துவிட அமெரிக்கா அனும திக்குமா? ''தற்பொழுது புழக்கத்திலுள்ள எண்ணெய் வயல் கள் அனைத்தும் வயது முதிர்ந்து விட்டன; அதனால் உற்பத் தியை அதிகரிப்பது சாத்தியமில்லை'', ''உலகின் எண்ணெய்த் தேவையும் உற்பத்தியும் உச்சத்தை எட்டிவிட்டன; அதனால் உற்பத்தியை இதற்கு மேல் அதிகரிக்க வாய்ப்பில்லை'', ''புதிய எண்ணெய் வயல்களைக் கண்டுபிடிப்பதும், உருவாக் குவதும் உடனடியாக சாத்தியமில்லை'', எனப் பல்வேறான ஆய்வு அறிக்கைகளை மாற்றி மாற்றி வெளியிடுவதன் மூலம், கச்சா எண்ணெய் சந்தை ஒரு பரபரப்பு நிலையிலேயே இயங்க வைக்கப்படுகிறது. இதன் மூலம், கச்சா எண்ணெயின் விலை தடாலடியாகச் சரிந்துவிடாமல் பாதுகாக்கப்படுகிறது.

குறிப்பாக, கச்சா எண்ணெய் மீது நடைபெற்று வரும் முன் பேர ஊக வாணிபம் இரண்டு வழிகளில் அமெரிக்காவுக்குப் பயன்படுகிறது. செயற்கையாக ஊதிப் பெருக்க வைக்கப்பட் டுள்ள கச்சா எண்ணெயின் விலை, தடாலடியாகச் சரிந்து விடாமல், ஊக வாணிபம் மூலம் முட்டுக் கொடுக்கப்படுகி றது. இரண்டாவதாக, வீட்டுக் கடன் பிரச்சினையில் சிக்கி நட் டமடைந்துள்ள அமெரிக்க வங்கிகளும், பல்வேறு நிதி நிறுவனங்களும் உடனடி இலாபம் ஈட்டுவதற்கான வழியாக இதனைத் தேர்ந்து எடுத்துள்ளன.

**ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு 62,000 கோடி ரூபாயாக இருந்த முன்பேர சூதாட்டத்தின்மதிப்பு, இன்று 10,40,000 கோடி ரூபாய்!**

எண்ணெய் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் மீது நடைபெறும் முன்பேர வர்த்தகத்தின் மதிப்பு ஐந்தாண்டு களுக்கு முன்பு வரை 1,300 கோடி அமெரிக்க டாலராக (ரூ. 62,000 கோடி) இருந்தது. அது, இன்று ரூ. 10,40,000 கோடி ரூபாயாக வீங்கிப் போய் விட்டது. இந்த வீக்கம்தான், 60 சதவீத கச்சா எண்ணெய் விலை உயர்வுக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது. (தி ஹிந்து, 3.7.08)

அத்தியாவசியப் பண்டங்களின் மீது நடைபெறும் இந்த முன்பேர வர்த்தகம், அமெரிக்காவின் நியூயார்க் வாணிபச் சந்தையிலும்; இலண்டனில் உள்ள ''இண்டர்கான்டினேன் டல் சந்தையிலும்'' தான் நடைபெற்று வருகிறது. இந்த இரண்டு சந்தைகளும் கடுமையான கண்காணிப்புக்கு உட் படாமல், ''சுதந்திரமாக'' இயங்க அனுமதிக்கப்பட்டுள்ள தால், எந்தெந்த நிறுவனங்கள் ஊக வாணிபத்தில் பங்கு பெறு கின்றன? எவ்வளவு இலாபம் சம்பாதிக்கின்றன? என்பதெல் லாம் மர்மமாகவே இருப்பதாக முதலாளித்துவ பத்திரிகை களே புலம்புகின்றன. அமெரிக்காவைச் சேர்ந்த கோல்டு மேன் சாக்ஸ், மார்கன் ஸ்டான்லி, சிட்டி குரூப், ஜே.பி.மார்கன் சேஸ் ஆகிய நான்கு நிதி நிறுவனங்கள்தான் இந்தச் சூதாட்டத்தில் பெரும் பங்கு வகிப்பதாகக் கூறப்படுகிறது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, சர்வ தேச கச்சா எண்ணெய் வர்த்தகம் அமெரிக்க டாலரிலேயே நடைபெற்று வருவது, அமெரிக் காவுக்கு மிகவும் சாதகமான அம்சம். எண் ணெய் வர்த்தகம் மூலம் அரபு ஷேக்குகளுக் குக் கிடைக்கும் அமெரிக்க டாலரின் பெரும்ப குதி, அமெரிக்க வங்கிகளிலும், அமெரிக்க அரசு வெளியிடும் பத்திரங்களிலும் தான் முத லீடு செய்யப்படுகிறது. ''பெட்ரோ டாலர்'' என்று அழைக்கப்படும் இந்த முதலீடு, அமெ ரிக்காவின் உள்நாட்டுப் பொருளாதாரத்தில் ஏற்படும் நெருக்கடிகளைச் சமாளிக்கும் கேட யமாகப் பயன்படுவதோடு, அமெரிக்காவின் உலக மேலாதிக்கத்திற்கான ஆயுதமாகவும் பயன்படுகிறது. எனவே, அமெரிக்கா கச்சா எண்ணெய் விலை உயர்வு குறித்துப் புலம்புவ தெல்லாம் வெறும் நாடகம்தான். ஒரு பீப்பாய் கச்சா எண்ணெயின் விலையை 200 அமெ ரிக்க டாலராக ஊதிப் பெருக்க வைப்பதுதான் அமெரிக்காவின் உள்ளார்ந்த நோக்கம்!

• ரஹீம்

**டீசல் மற்றும் பெட்ரோல் விற்பனையில் செயற்கையான தட்டுப்பாட்டை உருவாக்குவதன் மூலம் எரிபொருள் விலை உயர்வை ஏற்றுக் கொள்ளும் மனோநிலைஉருவாக்கப்படுகிறது.**



Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

www.padippakam.com

# “அணுசக்தி ஒப்பந்தம்-இந்தியாவை அடிமைப்படுத்தும் ஒப்பந்தம்!”

## - மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் (HRPC) அணுசக்தி ஒப்பந்த நகல் எரிப்புப் போராட்டம்

இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே கையெழுத்தாகியுள்ள அணுசக்தி ஒப்பந்தம், இந்தியாவை அமெரிக்க வல்லரசுக்கு அடிமைப்படுத்தும் ஒப்பந்தம். இந்திய அணு விஞ்ஞானிகள் தோரியத்தைப் பயன்படுத்தி அணுசக்தி தயாரிக்க மேற்கொண்டுள்ள சுயசார்பான ஆய்வை ஒழித்துக் கட்டி, யுரேனியத்திற்காக அமெரிக்காவைச் சார்ந்திருக்கும் நிலையை இந்தியா மீது திணிக்கும் துரோக ஒப்பந்தம்.

இந்திய-அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம், அமெரிக்காவின் ''ஹைடு'' சட்டத்திற்குக் கட்டுப்பட்டது. இச்சட்டத்தின் படி, இந்தியாவின் அணுசக்தித் துறையை மட்டுமின்றி, நமது நாட்டின் வெளியுறவுக் கொள்கைகளைத் தீர்மானிக்கும் உரிமையினைக் கூட அமெரிக்கா எடுத்துக் கொண்டுள்ளது. இந்த உண்மைகளை மூடி மறைத்து விட்டு, நாட்டின் மின்சாரத் தேவையை நிறைவு செய்யவே இந்த ஒப்பந்தம் என்று அமெரிக்கக் கைக்கூலிகளும் ஆட்சியாளர்களும் அப்பட்டமாகப் புளுகுகின்றனர். உண்மையில் இந்த ஒப்பந்தம், அமெரிக்காவின் உலக மேலாதிக்கப் போர்த்தேரில் இந்தியாவைப் பிணைக்கும் நாட்டு விரோத-மக்கள் விரோத ஒப்பந்தமாகும்.

மேலும் இந்த ஒப்பந்தத்தின் மூலம், பத்தாண்டுகளுக்குப் பின்னர் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டாலும், அது நமது நாட்டின் மின்சாரத் தேவையில் ஏறத்தாழ 5% மட்டுமே நிறைவு செய்யும். இப்பெருந்தொகையைக் கொண்டு அனல், புனல், காற்றாலை, சூரிய ஒளி மூலம் மின்சாரம் தயாரிக்க முதலீடு செய்தால் குறுகிய காலத்தில் கூடுதல் மின்சாரம் பெற முடியும். இந்த வாய்ப்புகளைப் புறக்கணித்து விட்டு மிக அதிக விலை கொண்ட அணு மின்சாரம் தயாரிக்கத் துடிக்கிறது, அமெரிக்க விசுவாச அரசு.

— இந்த உண்மைகளை விளக்கிப் பிரச்சாரம் செய்த மனித உரிமைப் பாதுகாப்பு மையம் (HRPC), கடந்த ஆகஸ்டு 15 போலி சுதந்திர நாளில் நாட்டின் அரைகுறை இறையாண்மையையும் அமெரிக்காவுக்கு அடகு வைக்கும் இந்த அடிமை ஒப்பந்தத்தின் நகல் எரிப்புப் போராட்டத்தையும் ஆர்ப்பாட்டத்தையும் திருச்சியில் நடத்தியது. விண்ணதிரும் முழக்கங்களுடன் திருச்சி மையப் பேருந்து நிலையம் பெரியார் சிலையருகே காலை 11 மணியளவில் நடந்த ஆர்ப்பாட்டத்துக்கு மனித உரிமை பாதுகாப்பு மையத்தின் பொதுச் செயலாளர் வழக்குரைஞர் போஜகுமார் தலைமை தாங்கினார். தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்து இவ்வமைப்பின் மாவட்டக் கிளை அமைப்பாளர்களும் முன்னணியாளர்களும் வழக்குரைஞர்களும் தோழமை அமைப்பினரும் திரண்டு நடத்திய இந்த ஆர்ப்பாட்டத்துக்குப் பின்னர், இந்திய-அமெரிக்க அணுசக்தி துரோக ஒப்பந்த நகல் எரிக்கப்பட்டது. நெருப்பைப் பொருட்டலம் கட்டிய கதையாக, இதனைத் தடுக்க முயன்ற போலீசார் முன்னணியாளர்களைக் கைது செய்து போலீசு வண்டியில் ஏற்றினர். அவ்வண்டியிலிருந்தும் முன்னணியாளர்கள் முழக்கமிட்டபடியே எரிப்புப் போராட்டத்தைத் தொடர்ந்தனர். கைதான போராளிகள் அனைவரும் நிபந்தனை அடிப்படையில் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

வீதியில் இறங்கி உணர்வுபூர்வமாக இவ்வமைப்பினர் நடத்திய இப்போராட்டம், அணுசக்தி ஒப்பந்தத்தின் அடிமைத்தனத்தையும் துரோகத்தனத்தையும் அம்பலப்படுத்திக் காட்டியுள்ளதோடு, உழைக்கும் மக்களிடமும் மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் நாட்டுப்பற்றார்களிடமும் புதிய நம்பிக்கையை விதைத்துள்ளது.

— பு.ஜ. செய்தியாளர்கள்.











படிப்பகம்

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85
Regd. No: TN/CC(S)Dn/190/06-08 Licenced to Post without pre-payment WPP No: TN/PMG/CCR/WPP-562/06-08

www.padippakam.com

# கூலி கேட்டால் குண்டாந்தடி பாயுது!



ரெட்டணை ஊராட்சி மன்றத் தலைவர் கலைச்செல்வன் கொடூரமாகத் தாக்கப்பட்டதில் மண்டை உடைந்து ஏற்பட்டுள்ள இரத்தக் கசிவு; துப்பாக்கிச் சூட்டில் முதுகுப்புறத்தில் குண்டடிபட்ட மாணவர் மூர்த்தி.

''கூலி கேட்டுப் போராடினால் துப்பாக்கிச் சூடுதான்'' என ரெட்டணை சம்பவத்தின் மூலம் தமிழகத்தையே மிரட்டியிருக்கிறது, தி.மு.க.அரசு.

திண்டிவனம் அருகேயுள்ள ரெட்டணை கிராமத்தில் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் தூர்வாரும் பணி நடந்து வருகிறது. இவ்வேலையில், 10 அடி நீளம் 5 அடி அகலம் கொண்ட இடத்தில் ஒரு அடி ஆழத்துக்கு மண் தோண்டுவதற்கு ரூ.70 முதல் ரூ.80/- வரை கூலி கொடுக்கப்பட்டு வந்தது. சம்பவத்தன்றோ, 17அடி நீளம், 6 அடி அகலம் உள்ள இடத்தில் 1.5 அடி ஆழத்துக்கு மண் தோண்ட ரூ.40/-தான் கூலியாகத் தருவோம் என அதிகார வர்க்கம் அடவடித்தனம் செய்தது. வேலையும் அதிகம்; கூலியோ குறைவு என்பதால், ரெட்டணை கிராம மக்கள் இந்த மோசடியைக் கண்டித்து சாலை மறியலில் ஈடுபட்டனர்.

ஒருபுறம் பேச்சுவார்த்தை நாடகமாடிய அதிகார வர்க்கம், மறுபுறம் போலீசாரை வரவழைத்தது. போலீசாரின் மிருகத்தனமான தடியடியால் ஆத்திரமடைந்த பொதுமக்கள், தங்களைத் தற்காத்துக் கொள்ளத் திருப்பித் தாக்கினர். இதனால் அதிரடிப்படை வரவழைக்கப்பட்டு, கண்ணீர் புகைக் குண்டு வீச்சு - துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு, போராட்டம் ஒடுக்கப்பட்டது.

இக்கண்மூடித்தனமான தாக்குதலில் ரெட்டணை ஊராட்சி மன்றத் தலைவர் கலைச்செல்வன் கூடப் படுகாயம் அடைந்துள்ளார். போராடியவர்கள் ஏழைகள் என்பதோடு, அவர்களுள் பெரும்பாலோர் தாழ்த்தப்பட்ட-பழங்குடியின மக்கள் என்பதால், அதிகார வர்க்கத்தின் ஆட்டம் எல்லை மீறி, நான்கு முறை துப்பாக்கிச் சூடு நடத்தும் அளவிற்குப் போனது. உழைப்புக்கேற்ற கூலியைத் தரக் கோரி போராடிய பொது மக்கள் மீது பொய் வழக்குககள் போடப்பட்டுள்ளன. இத்தடியடி - துப்பாக்கிச் சூடு பற்றி நீதி விசாரணை நடத்தக் கோருகிறார்கள், பொது மக்கள். ஆனால், தி.மு.க. அரசோ, துப்பாக்கிச் சூட்டில் காயம் அடைந்த மூர்த்தி என்ற மாணவனுக்கு ரூ.50,000/- 'நிவாரணம்' அளித்து, ஏய்க்கப் பார்க்கிறது.

''கூலி என்பது தொழிலாளர்களின் உரிமையல்ல; அது நாங்களாகப் பார்த்துப் போடும் பிச்சை'' எனக் குண்டாந்தடியைக் கொண்டு பழைய பாடத்தை மீண்டும் நடத்தியிருக்கிறார், கருணாநிதி.

''இந்த அவமானத்தைச் சகித்துக் கொள்ளக் கூடாது'' என்பதுதான் ரெட்டணை கிராம மக்களின் போராட்டம் உணர்த்தும் செய்தி!



படிப்பகம்